கோகுலம்

GOKULAM ஏப்ரல் '88 ரூ. 3.





ஓவியர் இரவி வர்மா


தோற்றம்: 29.4.1848 மறைவு: 6.10.1906



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

கோகுலம்

1988 ஏப்ரல் மாத இதழ்
மலர் 6 : இதழ் 3
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—
கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா



புகைப்படம்: எம். நடராஜன்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

'சிறுவருக்குத் திரைப்படம் தேவையா?' என்ற தலைப்பில், சென்ற இதழில் வெளியான கட்டுரையைப் படித்து விட்டுப் பல சிறுவர் சிறுமியர் தில்லியிலுள்ள அந்தக் கட்டுரையாளருக்குத் தங்கள் கருத்துக்களை எழுதியிருக்கிறார்கள். Children's Film Society யில் உறுப்பினராக அக்கட்டுரையாளர் இருப்பதால், ஏதேனும் பலன் ஏற்படுமென நம்புகிறோம்.

'கோகுலம்' அலுவலகத்திற்கும் சிலர் இதுகுறித்து எழுதியிருக்கிறார்கள். அவர்களில் சிலர், ''இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் திரைப் படங்கள் வேண்டும் என்று தனித் தனியாகவும் பலர் சேர்ந்தும் — மொத்தம் 8500 பேர் மாண்புமிகு தமிழக முதல்வருக்கு எழுதியிருந்தோமே, அதுபற்றி இதுவரை ஒன்றும் தெரியவில்லையே!' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முதல்வர் அவர்கள் தொடர்ந்து உடல்நலம் இல்லாதிருந்தார். அத்துடன், வறட்சி போன்ற பல பிரச்னைகளையும் உடனடியாகக் கவனிக்க வேண்டியிருந்தது. அதனால்தான், உங்களுக்கான திரைப்படங்கள் உருவாகவில்லை என்று நினைக்கிறோம்.


இதற்கு ஒரு வழி இருக்கிறது. எதற்கும் அரசாங்கத்தையே நம்பிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. திரைப்படத் தயாரிப்பாளர்களே சிறுவர் திரைப்படங்களைத் தயாரிக்கலாம். முழுநேரப் படமாக இருக்க வேண்டுமென்ற கட்டாயம் கூட இல்லை.

இரண்டு அல்லது இரண்டரை மணி நேரம் ஒரு படத்தை எடுப்பதற்குப் பதில், முதல் அரை மணி நேரம் சிறுவருக்கான ஒரு படத்தைத் தயாரித்துத் திரையிடலாம். மீதமுள்ள நேரத்தில், வழக்கம் போல, பொதுவான ஒரு படத்தைத் திரையிடலாம். இந்த மாதிரி செய்வதால், திரைப்படம் பார்க்கப் பெற்றோருடன் செல்லும் குழந்தைகள் ஆரம்பத்தில் தங்களுக்கான படங்களைக் கண்டு மகிழலாமல்லவா?

இவ்வாறு தயாரித்துத் திரையிடப்படும் சிறுவர் படங்களுக்குத் தமிழக அரசு நிதி உதவி வழங்கலாம். இப்படங்களைத் தொலைக்காட்சியில் காட்டலாம்; பள்ளிக்கூடங்களிலும் காட்டலாம். சிறந்த பண்புகளையும், நல்லறிவையும் புகட்டக் கூடிய வகையில் அமையும் படங்கள் சிறுவர் உலகுக்குச் சிறந்த பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை..

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



லென்ஸ்



எஸ். கே. வசந்தலெட்சுமி

பிருந்தாவனக் கவிஞர்கள்



செ. விஜய் செந்தில்



ஜி. மனோகர்



இரா. செல்லத்துரை



அடுத்த இதழில்...

என் குழந்தைப் பருவம்

டாக்டர். ஜி. வெங்கடசாமி


(கண் மருத்துவ நிபுணர்)

சித்திரப்புதிர்! 26


ஆழி

இவர்யார் என்பது உங்களுக்குத் தெரிகிறதா?


1




2 பூர்த்தி செய்யவும்: இதன் பெயர் கடல் ______




3 இதில் எத்தனை சதுரங்கள் இருக்கின்றன?



4 இரண்டு திமில்கள் உள்ள இந்த ஒட்டகத்தை எப்படி குறிப்பிடுவார்கள்?




5 எல்லோருக்கும் நன்கு தெரிந்த கட்டடம்தான். ஆனால், புதிய கோணத்தில் வரையப்பட்டிருக்கிறது. என்ன கட்டடம் இது?



விடை: வேறுபக்கம்

மினிமினிக் கதைகள்



சிரிக்கும் சிங்கம்!

ஹஹ்ஹா.... ஹா... ஹா... ஹா... என்று சர்க்கஸ் சிங்கம் இரைந்து சிரித்தது. ''இதென்னடா கோபு! இந்தச் சிங்கம் மனிதர்களைப் போல் சிரிக்கிறது! ரொம்ப சாதுவாக வேறு இருக்கிறது; அதை ஆட்டி வைப்பவன் கையில் சாட்டை, துப்பாக்கி ஒன்றுமே இல்லையே!'' என்று ஆச்சரியத்துடன் சொன்னான் அங்கு வேடிக்கை பார்க்க வந்த சீனு.

''அது ஒரு கதை, கேள். சொல்லுகிறேன்! ஒரு கொடிய காட்டில் இந்தச் சிங்கம் தன் மனைவியுடன் வசித்து வந்தது. திடீரென்று ஒருநாள் அதன் மனைவி காணாமற் போய் விட்டாள். சிங்கம் தேடித் தேடி அலைந்தது. மனைவியை நினைத்துக் கொண்டு பாதி நேரம் பட்டினியாகவே கிடந்தது.

''ஒரு நாள் சிங்கம் ஒரு வலையில் சிக்கியது. என்ன திமிறியும் தப்ப முடியவில்லை. பிறகு சிங்கத்தைச் சர்க்கஸ் கூண்டில் அடைத்தார்கள். அதே கூண்டில் தன் மனைவி உயிருடன் இருப்பதைப் பார்த்த சிங்கம், தன் மனிதப் பகையெல்லாம் மறந்து ஆனந்தத்தில் சிரித்தது; குதித்தது. அதன் மனைவியும் ஆரவாரம் செய்தது. அன்றைய தினத்திலிருந்து அவை இரண்டும் தங்கள் நன்றியை அவர்களுக்குத் தங்களுடைய நடத்தை மூலமாகத் தெரிவித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டன!'' என்று முடித்தான் கதையை கோபு.

பரம லோபி!

சேந்தனூர் என்னும் ஒரு சிறு கிராமத்தில் ஒரு லோபி இருந்தான். பணம் பணம் என்று எப்பொழுதும் பேராசை பிடித்து அலைந்தான். ஒரு சமயம் லோபி வெளியூருக்குப் போய்த் திரும்பினான். வீட்டிற்கு வந்ததும் தன் மடியில்




கட்டியிருந்த மணிபர்ஸ் விழுந்து போனதைக் கண்டு, ''ரூபாய் 500 போய் விட்டது'' என்று அந்த ஊர்த் தலையாரியிடம் தெரிவித்தான். ''ஐந்நூறு ரூபாயை யார் கண்டுபிடித்து எடுத்துக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு ரூபாய் இருபத்தைந்து பரிசாகக் கொடுப்பேன்!'' என்று சொன்னான்.

மறுநாள் ஒரு ஏழைப் பெண் தான் ஐந்நூறு ரூபாயை வழியில் கண்டெடுத்ததாகச் சொல்லி, பர்ஸுடன் பணத்தைக் கொடுத்தாள். லோபி தன் பணம் அகப்பட்டதைக் கண்டு குதித்தான். சட்டென்று கொஞ்சம் தயங்கினான். 'அடாடா! இதிலிருந்து எப்படி இருபத்தைந்து ரூபாய் எடுத்து இனாம் கொடுப்பது' என்று யோசனையில் ஆழ்ந்தான். தலையாரி, கொஞ்சம் கோபமாக, ''ஓய்! நீங்கள் சொன்னபடி ரூபாய் 25ஐ உடனே அந்தப் பெண்ணிடம் கொடும்!'' என்றான்.

''என்ன அயோக்கியத்தனம். நான் பர்ஸில் வைத்திருந்தது 525 ரூபாய். இந்தப் பெண் 25 ரூபாயை எடுத்துக் கொண்டு விட்டாள்!'' என்று கத்தினான். தலையாரிக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று. ''ஏ! லோபி. அது உன் பர்ஸ் இல்லை, உன் பர்சில்தான் 525 ரூபாய் இருந்ததாகச் சொன்னாயே, ஆகையால் அந்தப் பர்ஸை அவளே எடுத்துச் செல்லட்டும்?'' என்று கூறிப் பர்ஸைப் பிடுங்கிப் பெண்ணிடம் கொடுத்தான். லோபி மயக்கம் போட்டு வீழ்ந்தான்.

சிங்க வேட்டை!

ஒரு இங்கிலீஷ்காரரும் அவர் மனைவியும் காட்டில் வேட்டையாடச் சென்றார்கள். இரண்டு பேரும் போட்டி போட்டுச் சுட ஆரம்பித்தார்கள். இருவருக்




கும் கோபம்தான் அதிகரித்ததே தவிர ஒரு மிருகத்தையேனும் அவர்களால் சுட முடியவில்லை.

கடைசியில் அவர்கள் ஒரு சிங்கத்தைக் குறி வைத்துச் சுட்டார்கள். சிங்கம் அலறிக் கீழே விழுந்தது. இருவருக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. சுட்ட சிங்கத்தின் அருகில் நின்று இருவரும் தனித்தனியே போட்டோ எடுத்துக் கொண்டார்கள். பிறகு சிங்கத்தை ஒரு கழியில் கட்டித் தங்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்றார்கள்.

சிங்கத்தின் உடலில் பஞ்சை வைத்து நான்தான் என் அறையில் வைத்துக் கொள்வேன் என்று இருவரும் சண்டை போட்டுக் கொண்டார்கள்.

இங்கிலீஷ்காரர் மனைவி, "நான் சிங்கத்தின் முன் பக்கத்தை என் அறையில் வரும்படி சுவரில் துளை போட்டு மாட்டிக் கொள்கிறேன். அதன் பின்பக்கம் உங்கள் அறையில் இருக்கும்!" என்று கூறினாள். அப்பொழுது திடீரென்று வேடர்கள் அங்கே ஓடிவந்தார்கள். "நாங்கள் அம்பால் அடித்து வீழ்த்திய சிங்கத்தை நீங்கள் எடுத்து வந்து விட்டீர்களா? நன்றாகப் பாருங்கள், அம்பு அடித்தே சிங்கம் விழுந்திருக்கிறது!" என்று சொல்லி உள்ளே பதிந்திருந்த அம்பைப் பிடுங்கினார்கள்.

சிங்கத்தை வேடர்கள் எடுத்துச் சென்றார்கள். இருவரும் பேந்தப்பேந்த விழித்தார்கள்.



பூம் பூம்

கிட்டுவுக்கு வயது ஐந்து. வீட்டில் அவன் மிகவும் செல்லமாக வளர்ந்து வந்தான். அவன் எது கேட்டாலும் அவன் தகப்பனார் இல்லை என்றே சொல்வதில்லை.

ஒருநாள் ஒரு பெரிய ஊதல் ஒன்று வாங்கிக் கிட்டுவிடம் கொடுத்தார். கிட்டுவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. நாள் பூராவும் பூம், பூம் என்று ஊதிக் கொண்டிருந்தான். அந்தச் சப்தம் தாங்க முடியாமல் வீட்டில் எல்லோரும் தவித்தார்கள். காதைப் பொத்திக் கொண்டார்கள். கடைசியில் கிட்டுவின் தகப்பனார் ஊதலைப் பிடுங்கி ஒரு 'பீரோ'வின் மேல் வைத்து விட்டார்.

ஒரு நாள் இரவு எல்லோரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவர்கள் வீட்டில் ஒரு திருடன் புகுந்து விட்டான். கிட்டு அப்போது விழித்துக் கொண்டு விட்டான். திருடன் "டேய், ஏதேனும் சத்தம் போட்டே உன்னைக் கொன்று விடுவேன்" என்றான். கிட்டு உடனே "ஏனய்யா பயப்படுகிறீர்? திருடத்தானே வந்திருக்கிறீர். என் கூட வாரும்!" என்று அவனை அழைத்துப் போய் நகை, வெள்ளிப் பாத்திரம் முதலியவைகளைக் காட்டினான். திருடன்

ஒவ்வொன்ருக எடுத்துக் கொண்டான். ''இதோ இந்த பீரோவுக்குச் சாவி கெட்டுப் போய்விட்டது. இதைத் திறந்து அதில் இருக்கும் புடைவைகளை எடுத்துக் கொள்'' என்ருன். மிகவும் சிரமப்பட்டு பீரோவைத் திருடன் சப்தம் போடாமல் திறந்தான். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டான்.

''எனக்கு ஒரு உபகாரம் செய்கிருயா? பீரோவின் மேல் என் ஊதல் இருக்கிறது. அப்பா எடுத்துக் கொடுக்க மாட்டேன் என்கிருர்'' என்று சொன்னதும் திருடன் அதை எடுத்துக் கிட்டுவிடம் கொடுத்தான். உடனே கிட்டு தன் பலம் கொண்ட மட்டும் ஊதலை ஊதினுன். அதனுல் எல்லோரும் எழுந்து விட்டார்கள். திருடன் ஓடுவதைப் பார்த்து எல்லோரும் ஓடிப் பிடித்துக் கொண்டார்கள். கிட்டுவின் புத்தியை எல்லோரும் பாராட்டினுர்கள். உடனே கிட்டு,''அப்பா, அந்த பீரோ திறக்க முடியாமல் இருந்ததே அதையும் அவனிடம் சொல்லித் திறந்து விட்டேன்'' என்று சொன்னபோது எல்லோரும் சிரித்தார்கள். திருடனைப் போலீஸுக்கு அனுப்பினுர்கள்.

—ஓவியர் சாமாவின் கதைகள்

அதிசய மனிதர்!

'தொலைக்காட்சியில் நாம் வாரா வாரம் பார்த்துக் களித்த மனிதரை இடையிலே கொஞ்ச காலமாகக் காணுேமே!' என்று உங்களில் பலர் கவலைப்பட்டிருப்பீர்கள்.

ஆனுல் சென்ற மார்ச் 6 — ஆம் தேதியே அந்தக் கவலை பறந்திருக்குமே! இப்போதுதான் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 5.30 மணிக்கு அவர் தொலைக் காட்சியில் தோன்றி உங்களையெல்லாம் அதிசயத்தில் ஆழ்த்துகிருரே! மூக்கிலே விரல் வைக்கச் செய்கிருரே! சில சமயம் 'ஆ'வென வாயைப் பிளக்கவும் வைக்கிருரே! அந்த முகமூடி மனிதர் யார் என்று உங்களுக்குச் சொல்ல வேண்டுமா?

'ஓ, தெரிகிறது. தெரிகிறது. சிலந்தி மனிதர் (Spiderman) தானே!' என்று உடனே நீங்கள் கூறுவது காதில் விழுகிறது.

முன்பைவிட இப்போது உங்களுக்கு அதிகமான உற்சாகத்தை, அளவில்லாத ஆனந்தத்தை, அற்புதமான காட்சிகளை அளித்து வருகிருர் அந்த அதிசய மனிதர்.



ஆமதாபாத்திலுள்ள பயோமா இன்டஸ்ட்ரீஸ், பல நிறங்களில், பல சுவைகளில் தயாரித்து அளிக்கும் ரஸனுவைப் போலவே, தொலைக் காட்சியில் அவர்கள் அளிக்கும் 'ஸ்பைடர் மேன்' நிகழ்ச்சியும் பல் சுவை நிகழ்ச்சியாக இருப்பதைக் காண்கிருேம்!

என் குழந்தைப் பருவம்

— சை. வே. சிட்டிபாபு

மதுரை காமராசர் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகிய இரண்டிலும் துணைவேந்தராக இருந்து சிறப்பித்தவர் டாக்டர் சை. வே. சிட்டிபாபு அவர்கள்.

ஆரம்பக் கல்வியிலிருந்தே முதல் மாணாக்கராக விளங்கிய இவர், எம். ஏ. (வரலாறு) பட்டம் பெற்ற போது, முதல் வகுப்பில் தேறியதற்காக, சென்னைப் பல்கலைக் கழகம், இவருக்கு நார்விக் பரிசு, ஐராவதம் பரிசு ஆகிய இரு பரிசுகளையும் வழங்கியது.

பச்சையப்பன் கல்லூரியில் விரிவுரையாளராகக் கல்விப் பணியைத் தொடங்கிய இவர், படிப்படியாக உயர்ந்து, பள்ளிக் கல்வி இயக்குநராகவும் பிறகு கல்லூரிக் கல்வி இயக்குநராகவும் திகழ்ந்து அதன் பின்னர் துணைவேந்தரானார்.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளையின் தலைவராகவும், தமிழக பாரத சாரண இயக்கத்தின் பிரதம கமிஷனராகவும் விளங்கியதோடு, தில்லியிலுள்ள தேசிய பாரத சாரண இயக்கத்தின் 'வெள்ளி யானை' விருதையும் பெற்றவர்.

அன்னை மொழியாகிய தமிழிலும், அந்நிய மொழியாகிய ஆங்கிலத்திலும், அழகாகவும், நகைச்சுவை ததும்பவும் பேசும் ஆற்றல் பெற்றவர். 'சொற்கலைச் செல்வர்,' 'கல்விக் காவலர்' எனப் பல சிறப்புப் பட்டங்கள் பெற்றவர்.

உலக நாடுகள் பலவற்றிற்கும் பல முறை சென்று, பல கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் கலந்து கொண்டு கல்வி சிறக்கப் பல வகையிலும் தொண்டாற்றியிருக்கிறார்.



அப்பொழுது எனக்கு ஆறு வயது இருக்கும் என்று நினைக்கிறேன். என் தாய் தந்தையருடன் மயிலை கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சென்றிருந்தேன். ஆண்டவனுக்கு அஞ்சலி செலுத்தி விட்டு நாங்கள் வெளியே வரும்போது இப்பொழுது போல் அப்பொழுதும் பல வயதான ஏழைகள் கோயில் வாசற்படி அருகில் உட்கார்ந்து கொண்டு இருந்தார்கள். "அம்மா, தாயே, ஏதாவது பிச்சை போடுங்கம்மா" என்று என் தாயைப் பார்த்துக் கேட்டார்கள்.

இதை எதிர்பார்த்தோ என்னவோ, என் அம்மா கையில் வைத்திருந்த சில்லறைக் காசுகளை அவர்களுக்குக் கொடுப்பதற்கு முன் அருகில் நின்று கொண்டிருந்த என்னை 'வா, இங்கே' என்று அழைத்து, "இந்தச் சில்லறைக் காசுகளை, ஆளுக்குக் காலணாவாக இவர்களுக்குப் போட்டுக் கொண்டு வா" என்று பணித்தார்கள். இதைக் கவனித்த என் தந்தை, "அவனை ஏன் தொந்தரவு பண்றே. நீயே போட்டு விட்டு வா" என்று என் அன்னையிடம் கூறினார்.

"இல்லேங்க. ஏழைகளைக் கண்டால் அவர்களுக்கு இரக்கங் காட்டும் எண்ணம் பிள்ளைப் பருவத்திலிருந்தே நம்ப பையனிடம் வளரணும் என்பது என் ஆசை. அதற்குத்தான் அவனை இதைச் செய்யச் சொல்றேன்" என்று என் தாய் அன்று சொன்ன இச் சொற்கள் இன்றும் எனக்குப் பசுமையாக நினைவில் இருப்பதோடு மட்டுமல்லாமல், என் வாழ்க்கைக்கு ஒரு படிப்பினையாகவும் அமைந்துள்ளன. 'வறியார்க்கு ஒன்று ஈவதே அறம்' என்னும் முதுமொழியை என் அன்னை தன் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் பின்பற்றியதை நான் கண்டு வியந்ததுண்டு. என் வாழ்க்கையிலும் இந்த மனிதாபிமான உணர்வைப் பின்பற்றவே முயன்று வருகிறேன்.



நான் பிறந்தது சென்னையில்தான். 1920ம் ஆண்டு நவம்பர் திங்களில் வைத்யநாத முதலித் தெருவில் என் பெற்றோர் குடியிருந்த ஒரு வீட்டில் பிறந்தேன். என் தாயார் ராம் பாய் அம்மாளுக்கு எந்தவித இன்னலும் கொடுக்காமல் பிறந்தேன் என்று சொல்லுவார்கள். என் தந்தை சைதாப்பேட்டை வேணுகோபால் செட்டியார், பி.ஏ.பி.எல்., அப்பொழுது ஒரு வக்கீலாக இருந்தார். எங்கள் குடும்பம் ஒரு நடுத்தரக் குடும்பம். போதிய வருமானத்தினால் சுகமான வாழ்க்கைதான் எங்களுக்கு. என் அம்மா என் அப்பாவிற்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட்டவர்கள். முதல் தாரம் இரண்டு ஆண் பிள்ளைகள் பெற்றெடுத்துவிட்டு நோய்வாய்ப்பட்டு 24வது வயதிலேயே இறந்து விட்டார்கள். அவர்களின் மறைவிற்குப்பின் சில ஆண்டுகள் மீண்டும் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தாராம் என் அப்பா. இந்த நிலை வேண்டாமென்று என் தாத்தா, மறைந்த என் பெரிய தாயாரின் உடன் பிறந்த சகோதரியை என் அப்பாவிற்கு இரண்டாந்தாரமாகத் திருமணம் செய்து வைத்தார். அப்பொழுது என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் இடையே வயது வித்தியாசம் கொஞ்சம் அதிகம்தான். இருப்பினும் குடும்ப ஒற்றுமைக்கும் நலனுக்கும் இவ்வேற்பாடு நன்மையாகவே முடிந்தது. பெரிய தாயார் பெற்றெடுத்த என் இரண்டு அண்ணன்மார்களை மிகப் பரிவோடும் பாசத்தோடும் என் அன்னையார் வளர்த்து வந்ததை என் தந்தை என்னிடம் பெருமையோடு சொல்வார்கள். என் தாயார் பெற்றெடுத்தவர்கள் என்னோடு சேர்த்து ஐவர் ஆவர். இருவர் பெண்கள்; மூவர் பிள்ளைகள். நானும் என் மூத்த சகோதரன் தேவராஜனும் எங்கள் இருவருக்கும் ஓராண்டுதான் வித்தியாசம், இணைபிரியாமல் வளர்ந்தவர்கள். நண்பர்கள் போல் நெருக்கமாகப் பழகினோம். பள்ளியிலே, முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலும் சேர்ந்து





படித்தோம். ஆனால் 1933ல் எங்கள் குடும்பத்திற்கு ஒரு பெருங் கொடுமையே ஏற்பட்டது. அவ்வாண்டு சென்னையையே ஆட்டிப் படைத்த வைசூரி நோய், என் அருமைச் சகோதரனைக் கொள்ளை கொண்டது. இப் பெருந்துயரத்திலிருந்து நாங்கள் மீளப் பல ஆண்டுகளாகியது. என்னைப் பொருத்த அளவில் இந்த இழப்பு என் குழந்தைப் பருவ வாழ்க்கையில் ஈடு செய்ய முடியாத வெற்றிடத்தை உண்டாக்கியது. சகோதர பாசத்தின் திட்பமான இனிமையை நான் சில ஆண்டு காலமாகிலும் துய்க்க முடிந்ததே என்று நினைத்து என்னைத் தேற்றிக் கொண்டேன்.

நாங்கள் இருவரும் தங்கசாலையில் இப்பொழுதும் சீரோடு நடைபெற்று வரும் தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் தான் முதலாவது வகுப்பிலிருந்து படித்தோம். அதற்கு முன் சிந்தாதிரிப் பேட்டையில் எங்கள் மாமா வீட்டில் இரண்டாண்டு காலம் தங்கி இருந்த போது, அங்கிருந்த ஒரு தனியார் 'திண்ணைப் பள்ளியில்' படித்தோம். 'அட்சராப்யாஸம்' என்னும் பள்ளி சேர்க்கும் விழா அங்குதான் நடைபெற்றது. அப்படியொன்றும் அது விமரிசையாகக் கொண்டாடப்படவில்லை என்றுதான் நினைக்கிறேன். ஆனால் ஒன்று. பள்ளிக் கூடம் ஒரு திண்ணைப் பள்ளிக் கூடமாக இருந்தும், அதை நடத்திய ஆசிரியர் திரு செல்வநாதன் எங்களைப் போன்ற மாணவர்களை அன்புடனும் அதே வேளையில் கண்டிப்புடனும் நடத்தி வந்தார்கள். தினமும் காலை இரண்டு மணி நேரத்தோடு வகுப்பு முடிந்து விடும். கவனத்தோடு அவர் கூறும் பல கதைகளைக் கேட்போம். நடு நடுவில் அவர் எங்களைக் கேள்விகள் கேட்டு எங்கள் கவனம் சிதறாமல் பார்த்துக் கொண்டார்.

திண்ணைப் பள்ளியிலிருந்து பெரிய கட்டிடத்தில் நடத்தப் பெற்ற துளவ வேளாளர் உயர் நிலைப் பள்ளிக்கு நான் வந்த போது, எல்லாமே வியப்பாக இருந்தது. தனித்தனி வகுப்பறைகள், பல ஆசிரியர்கள், எடுப்பாக உடையணிந்திருந்த ஆசிரியர்கள், உட்காருவதற்கு நீண்ட விசுப் பலகைகள், ஆசிரியர்களுக்கு மேஜை நாற்காலிகள், சுவர்களில் கரும் பலகைகள், ஆசிரியர் ஆட்சியின் சின்னமாகப் பிரம்புகளும் காட்சியளித்தன. பாடமெல்லாம் தமிழில்தான். வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன் கடவுள் வாழ்த்து உண்டு. என்னுடைய வகுப்பாசிரியர் திரு. குப்பனய்யங்கார். முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை எங்களோடு தொடர்ந்து வந்ததினால், என்னையும் மற்ற மாணவர்களையும் நன்கு அறிந்து வைத்திருந்தார். தமிழ், கணிதம், வரலாறு, நீதிக்கதைகள் ஆகிய பாடங்களைச் சுவையாகவும் நாங்கள் புரிந்து கொள்ளும் வகையிலும் விளக்கமாகக் கற்பிப்பார். அநேகமாக, நான்தான் வகுப்பில் முதல் மாணவனாக இருந்தேன். இதைப் பாராட்டி அவர் ஒவ்வொரு வருடமும் புத்தகப் பரிசு அளிப்பார். அவரிடம் பாடங் கற்றதனாலேயே, நான் ஆறாம் வகுப்பு வரும் போது, தன்னம்பிக்கையும் தைரியமும் என் உள்ளத்தில் இடம் பெற்று ஊக்க மூட்டி வந்தன.


உயர் நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் குலபதி முனுசுவாமி ஐயர். சென்னையிலிருந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குள் சிறந்து விளங்கிய சிலரில் இவரும் ஒருவர். அப்பொழுது இந்து தியலாஜிகல் உயர் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக விளங்கியவர் குலபதி ரங்கசாமி

அய்யங்கார். அவருக்கும் ஆசிரிய உலகில் புகழும் மதிப்பும் இருந்தன. எங்களுடைய தலைமை ஆசிரியர் ஆங்கிலம் கற்பிப்பதில் வல்லுநர் என்ற புகழைப் பெற்றவர். எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் எனக்கு அவர்தான் ஆங்கிலப் பாடம் எடுத்தார். அவர் கற்பித்த முறை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. செய்யுளாகட்டும், உரை நடையாகட்டும் இரண்டையும் எங்கள் உள்ளத்தையும், அறிவையும் தொடும் வகையில் தெளிவாகவும், விளக்கமாகவும் அவர் கற்பித்ததனுல் என்னைப் பொறுத்த வரையில் ஆங்கிலத்தில்தான் அதிக ஈடுபாடு கொள்ளச் செய்தது அது என்றேதான் கூற வேண்டும். விடுமுறை நாட்களில் ஆங்கிலக் கவிதைகளையும் டிக்கன்ஸ், ஸ்காட் போன்ற சிறந்த எழுத்தாளர்களின் சுருக்கி எழுதப்பட்ட நாவல்கள் பலவற்றையும் படிப்பேன். இதனுலேயே எனக்கு ஆங்கிலத்தில் நல்ல பிடிப்பு ஏற்பட்டது. எஸ். எஸ். எல். சித் தேர்வில் என் பள்ளியில் நான்தான் முதல் மதிப்பெண் பெற்றுத் தேறினேன். குறிப்பாக ஆங்கிலத்திலும் முதலிடத்தைப் பெற்றேன்.

இந்தக் கட்டத்தில் என் மாணவப் பருவம் நல்ல முறையில் அமைய எனக்கு உறுதுணையாக அமைந்த இரண்டு மூன்று ஆசிரியர்களை நான் என்றுமே மறக்க முடியாது. எட்டாம் வகுப்பில் எனக்கு ஆசிரியராக இருந்த திரு. ராமநாத சாஸ்திரியார் அவர்கள் மாணவர்களை அரவணைத்துக் கொண்டு பாடங்களைக் கற்பித்தது ஒரு சிறப்பான அம்சமாகும். அவருக்கு என்னை மிகவும் பிடிக்கும். அவர் எடுத்த பாடங்களிலெல்லாம் நான்தான் முதல் மாணவன். ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் நான் பரிசுகள் வாங்குவதற்காக என்னை அவர் தம்முடைய இல்லத்திற்கே அழைத்துச் சென்று பயிற்சியளிப்பார். ஆங்கில இலக்கணத்தில் அவர் புலி என்று பெயர் பெற்றவர். நாங்கள் அதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளச் செய்வார். சிக்கலான எந்த ஒரு வாக்கியத்தையும் இலக்கண ரீதிப்படி வெவ்வேறு பகுதிகளாகப் பிரித்து விளக்குவதில் வல்லுநர். இவர் தந்த பயிற்சியினுல்தான் ஆங்கில இலக்கணத்தில் எனக்கு நல்ல தேர்ச்சி ஏற்பட்டது. இதே போல், தமிழ் இலக்கணத்தில் எனக்குத் தக்க திறமையை வளர்த்துக் கொள்ள முடியவில்லை. அப்பொழுது எனக்கு வாய்த்த சில தமிழ் ஆசிரியர்கள் தமிழ் இலக்கணம் என்றுலே ஒரு பயமும், கசப்பும் ஏற்படும் வண்ணம் செய்தார்கள் என்று தான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. செய்யுள் பாடங்களுக்குப் பொருளுரையையும் கருத்துரையையும் சொல்லி விட்டு, உடனே இலக்கணத்தில் நுழைந்து நீண்ட நேரம் அதிலேயே சஞ்சரிப்பார்கள். புலவர்கள் என்றுல் இலக்கணத்தைக் கரைத்துக் குடித்தவர்கள் என்பதை அந்தக் காலத்தில் பறை சாற்ற வேண்டும் போலும்! அதனுல்தானே என்னவோ என் தமிழாசிரியர்கள் — எஸ். எஸ். அருணகிரிநாதரைப் போன்ற சிலரைத் தவிர — மற்றவர்கள் நான் தமிழ் இலக்கியத்தின் தேன் மதுர இனிமையைச் சுவைத்து இன்பமுறும் வண்ணம் செய்யவில்லை. ரசிகமணி டி. கே. சி. அவர்கள் கூட, தான் படித்த காலத்துப்புலவர்களை இவ்வண்ணமே குறை கூறியதை நான் கேட்டிருக்கிறேன்.

என் கணித ஆசிரியர் ஒருவர் எப்பொழுதும் சிடுசிடுவென்று இருப்பார். கணிதத்திலே எந்த ஒரு சிறு பிழைக்கும் முதுகை ஒங்கித் தட்டு





வார். எனக்கு இதனாலேயே கணிதம் மீது இருந்த மோகம் குறைய ஆரம்பித்தது.

ஒன்பதாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பிற்கு நான் வந்த பொழுது விருப்பப் பாடம் என்று ஒன்றை எடுக்க வேண்டி இருந்தது. கணிதத்திலே நான் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தும், அதை நான் விருப்பப் பாடமாக எடுக்காமல், வரலாற்று பாடத்தை ஏற்றுக் கொண்டேன். ஆசிரியர் பார்த்தசாரதி அய்யங்காரிடம் எனக்கிருந்த மதிப்பும் மரியாதையுமே இதற்குக் காரணம். இவர் சரித்திரத்தைக் கற்பிப்பதில் சமர்த்தர். சாரமும் சுவாரசியமும் வரலாற்றில் இருக்கும் வண்ணம் பலவித போதனை முறைகளைக் கையாள்வார். சரித்திரப் பாத்திரங்களும், நிகழ்ச்சிகளும் நேராக எங்கள் முன் பவனி வருவது போல விவரித்துக் கூறுவார். புத்தரையும், அசோகரையும், சிவாஜியையும் நாடக பாணியிலே எங்கள் முன் வந்து பேச வைப்பார். நம் இந்திய நாட்டின் கலாச்சாரத்தின் தொன்மையையும், கலைச் செல்வங்களின் எழிலையும் நாங்கள் உணரும் வகையில் எடுத்துரைப்பார். மற்றும் காஞ்சி, மகாபலிபுரம் போன்ற வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்களுக்கு அறிவூட்டும் உல்லாசப் பயணமாக எங்களை அழைத்துச் செல்வார். என்னை அவருக்குப் பிடித்த காரணத்தினாலும், அவரிடம் இருந்த வரலாறு சம்பந்தப்பட்ட நூல்களை நான் கூர்ந்து படிக்க வேண்டும் என்பதற்காகவும் விடுமுறை நாட்களில் தம் இல்லத்திற்கே என்னை வரும்படி செய்வார். படித்து விட்டு நான் வீடு திரும்பும் போது சுவையான சிற்றுண்டியையும் கொடுத்து மகிழ்விப்பார்.

இம்மாதிரியான ஆசிரியர்களை இக்காலத்தில் தேடித் தேடித்தான் கண்டு பிடிக்க முடியும். ஆசிரியம் ஒரு மேன்மையான தொழில் எனக் கருதி அதற்கு பார்த்தசாரதி அய்யங்கார், ராமநாத சாஸ்திரி போன்றவர்கள் தங்கள் மனத்தையே பறிகொடுத்து, ஊதியத்தைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ்ந்தவர்கள். அவர்கள் தான் என் பிற்கால ஆசிரிய வாழ்க்கைக்கு ஒளிமயமான பாதையைக் காட்டியவர்கள் என்றே சொல்வேன்.

சித்திர ஆசிரியர் ராஜமாணிக்கம் பிள்ளையை நான் எப்படி மறக்க முடியும்? ஆறும் வகுப்பிலிருந்து மூன்று ஆண்டுகள் எங்களோடு இருந்து, இராமலிங்க அடிகளை எங்களுக்கு அறிமுகப்படுத்தி, வள்ளலாரின் அருமையான பாக்களை நாங்கள் உணர்ந்து பாடும்படி செய்தவர். ஒருமையுடன் நினது திருமலரடியை நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்' என்னும் அருட்பா பாடலில் உள்ள கருத்துக்களை அவர் அடிக்கடி விளக்கி, நாங்கள் வாழ்க்கையிலே அப்பாடலில் அடங்கியிருக்கும் அறிவுரைகளை திடசித்தத்துடன் பின்பற்ற வேண்டுமென்று கூறியது என் உள்ளத்தில் பதிந்து இன்றும் என்னை வழி நடத்திச் செல்கிறது.

என் தந்தை தாம் ஏற்றுக் கொண்ட தொழிலில் தர்மநீதியான பற்றுக் கொண்டவர். எந்த வழக்கானாலும் அதற்காக வாதாடி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற பேராசையே அவரிடம் இருந்ததில்லை. கட்சிக்காரரின் வழக்கிலே சற்றே நியாயம் இருந்தாலொழிய வாதாட ஒப்புக் கொள்ள மாட்டார். வாதத் திறமையோடு கோவையாகவும் தெளிவாகவும் ஆங்கிலத்திலே பேசக் கூடியவர். சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியில் படித்துப் பட்டத்

தோடு முதற் பரிசையும் பெற்றவர். அவருக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்ட அழகான விவிலிய நூலை நான் படித்திருக்கிறேன்.

என் பள்ளிப் படிப்புக் காலத்தில் ஆங்கிலச் சொற்கள் சிலவற்றிற்கு அவரிடம் அர்த்தம் கேட்டால், ''பாபு, எனக்கு அர்த்தம் தெரிந்தாலும், அகராதியில்தான் உனக்குப் பிழையின்றி விளக்கம் கிடைக்கும். ஆகவே, நீயே அகராதியைப் புரட்டிப் பார்த்துப் புரிந்து கொள்'' என்று அறிவுரை கூறுவார். அவர் எந்த நோக்கோடு இவ்வாறு சொன்னார் என்பதைப் போகப் போக நான் உணர்ந்தேன். அகராதியை அடிக்கடி பயன்படுத்துவதால் நாம் தேடிச் செல்லும் வார்த்தைகளோடு மேலும் பத்துப் பதினைந்து புதிய வார்த்தைகளுக்கு அர்த்தம் கிடைக்கிறதல்லவா? இதுதான் அவர் எனக்குக் கற்றுத் தந்த முக்கியமான பாடங்களில் ஒன்றாகும்.


என் அன்னை எங்களுக்கெல்லாம் இல்லத்தரசியென விளங்கினார்கள். சிவந்த மேனி. எடுப்பான முகத் தோற்றம். புன்முறுவலோடு பேசத் தெரிந்தவர். வெகுளி அல்ல; சூட்டிக்கையான அறிவு. இத்தனைக்கும் அவர்கள் ஐந்தாம் வகுப்பிற்கு மேல் படிக்கவில்லை. ஆனால் கேள்வி ஞானம் நிரம்ப இருந்தது. மற்றும் இனிமையாக தியாகராஜ கீர்த்தனங்களைப் பாட வல்லவர். என் தமக்கைகள் சந்திரபாயும் மோகனாபாயும் இவர்களோடு சேர்ந்து பாடுவார்கள். இவர்களது இசை ஞானம் என்னையும் சிறிது தொத்திக் கொண்டது. இன்றும் எனக்குக் கர்நாடக இசையென்றால் மிகவும் பிடிக்கும். ராக ஞானமும் சற்று உண்டு. பள்ளியிலே மாணவர் கூட்டங்களிலே பாடி இருக்கின்றேன். மற்றும் சாரண இயக்கத்திலே நான் சேர்ந்து பல செயல் திட்டங்களில் பயிற்சி பெற்றது எனக்கு இன்றும் பலனைத் தந்து வருகிறது என்றே கூறுவேன். எதற்கும் ஆயத்தமாக இருத்தல், தோல்வியைக் கண்டு துவழாதிருத்தல், முடிந்த வரையில் பிறர்க்கு நல்லுதவி செய்தல், சிரித்து வாழ்தல் — இவையெல்லாம் என் குழந்தைப் பருவத்தில் நான் கற்ற பாடங்கள்.

என் குழந்தைப் பருவ காலத்தில் அரசியலில் நாணயமும், நேர்மையும் காணப்பட்டது. நீதிக் கட்சிக்கும் காங்கிரஸுக்கும் பலத்த போட்டி. என் தந்தை அன்று நீதிக் கட்சியின் சார்பில் சென்னை முனிசிபல் கவுன்சிலராக எங்கள் வார்டில் நின்று இருமுறை வெற்றி பெற்றது பற்றி எங்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி. அவருடைய அறிவையும், தொழில் திறனையும், சமூக உணர்வினையும் மதித்தே வார்டு மக்கள் அவரை வற்புறுத்தித் தேர்தலில் நிற்க வைத்தார்கள். சிக்கனமான செலவு. வாக்காளர்க்குப் பணத்தை இறைத்து அவர்களின் வாக்குகளை வாங்கும் பழக்கம் அன்று இல்லை. ஆனால், இன்றைய அரசியலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் கேவலமான நிலைக்குத் தாழ்ந்து வருவது குறித்து வெட்கித் தலை குனிய வேண்டியதாக இருக்கிறது. என் செய்வது?



மொத்தத்தில் என் குழந்தைப் பருவம் என் பிற்கால வாழ்க்கைக்கு வலுவான ஓர் அடித்தளமாக அமைய வேண்டும் என்பதற்காக, தன்னலங் கருதாத அக்கறையையும், பாசத்தையும், பேரன்பினையும் வழங்கிய என் தாய் தந்தையரையும் ஆசான்களையும் நான் நன்றி உணர்வோடு போற்றிப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

சிப்-சாப்



கடைத் தெருவில், ஷோகேஸ்களில் பளிச் பளிச்சென விட்டுவிட்டு, அழகாய் மின்னிடும் விளக்குகளைப் பார்த்திருப்பீர்களே! அவைகளைக் கூட 'டிஸ்கோ லைட்ஸ்' என்று சொல்வார்களே! அவை எப்படி அத்தனை அழகாய் விட்டு, விட்டுக் கண் சிமிட்டுகின்றன, தெரியுமா?


பெரிய ஆபீஸ்களில் திடீரென நெருப்புப் பிடித்துக் கொண்டால், உடனே ஓர் அபாய அறிவிப்பு மணி, தானாகவே அடிக்க ஆரம்பிக்கும். உடனே, நடவடிக்கை எடுத்து நெருப்பை அணைக்கலாம். இந்த அபாய அறிவிப்பு மணி எப்படி வேலை செய்கிறது, தெரியுமா?

சில வீடுகளில் மேல் மாடியில் தண்ணீர்த் தொட்டி இருக்கும். கீழே மோட்டாரின் சுவிட்சைப் போட்டதும், கிணற்றிலிருந்து தண்ணீர் மேலே போய்த் தண்ணீர்த் தொட்டியை நிரப்பும். ஆனால், மோட்டாரைக் குறிப்பிட்ட நேரம் ஓட விட்டதும், அணைக்காவிட்டால், தொட்டியில் தண்ணீர் நிரம்பி, அதிகப்படியான தண்ணீர் எல்லாம் வீணாய்க் கீழே கொட்டும். இதைத் தடுக்கச் சில வீடுகளில் ஒரு கருவி வைத்திருப்பார்கள். மேலே தொட்டியில் தண்ணீர் ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டியதும், உடனே கீழே இந்தக் கருவியில் ஒருவித ஒலி எழும்பும். உடனே, நாம் சுவிட்சை அணைத்து, தண்ணீர் வீணாவதைத் தடுத்து விடலாம்.

இதுபோல இன்னும் எத்தனை எத்தனையோ கருவிகள். இவை எல்லாம் சிறியவர்களான மாணவ மாணவிகளுக்கு எப்படி வேலை செய்கின்றன என்று தெரியாது. ஏன், வீட்டிலுள்ள சில அப்பா, அம்மாக்களுக்கே கூடத் தெரியாமல் இருக்கலாம்.

ஆனால், வளரும் சிறுவர்கள்,





இதையெல்லாம் சிறு வயதிலேயே தெரிந்து வைத்துக் கொள்வது மிகவும் நல்லது இல்லையா?

இதற்கு ஒரு கருவி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதைக் கண்டுபிடித்த பையன் கூட ஒரு பள்ளிக்கூட மாணவன்தான் என்று சொன்னால், ஆச்சரிய மாக இருக்கும். இந்தக் கருவியின் பெயர் சிப் — சாப். (Chip – Chap). இது ஓர் எலக்டிரானிக் உபகரணம்.

இதிலே சுவிட்ச், பேட்டரி, ஒலிபெருக்கி, ஆண்டெனா காயில், ரெசிஸ்டர், கபாஸிடர், டிரான்ஸிஸ் டர் என்று பல பகுதிகள் தனித் தனியே இருக்கும். இவைகளை வைத்துக் கொண்டு கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்னேனே, அந்தக் கருவிகளை நீங்களே செய்து விடலாம் சிறிய அளவில்.

'எனக்கு ஒன்றுமே புரியவில் லையே! எலக்டிரானிக்ஸ் எல்லாம் தெரி யாதே' என்று நினைக்கிறீர்களா? உங்க ளுக்குக் கவலையே வேண்டாம். இந்த சிப் — சாப்புடன் ஓர் அச்சடித்த புத்தகம் தருவார்கள். அதிலே பல விளக்கப்படங்களுடன் எல்லா விவ ரங்களும் தரப்பட்டுள்ளன. இந்த உப கரணத்தை வைத்துக் கொண்டு ஏழாம் வகுப்பு முதல் பன்னிரண் டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகள் எலக்டிரானிக்ஸ் அறிவைப் பெற்று நூற்றுக்கும் அதிக மான பரிசோதனைகளைச் செய்து மகிழலாம்; கூடப் படிக்கும் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர் களையும் கூட ஆச்சரியப்படுத்தலாம். அந்தப் புத்தகத்தில் எல்லா விஷயங் களையும் மிகமிக எளிமையாய்ச் சொல்லியிருப்பதால் உங்களுக்கு ஒரு பிரச்னையும் இருக்காது.

இந்தக் கருவியின் விலை 300 ரூபாய். பெங்களூரில் தயாரிக்கப்பட்டு, தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் விற்ப னைக்கு வருகிறது இந்த சிப் — சாப்.

இந்தக் கருவி பாட்டரியில்தான் இயங்குகிறது. தவிர, கரண்ட்டால் சூடு படுத்தி ஒட்டுகிற முறை கிடை யாது. வெறுமனே ஒயரை இணைத்து விட வேண்டியதுதான்.

விடுமுறைநாட்களில்சிப்—சாப்பை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட் டால் நேரம் போவதே தெரியாது.

கட்டுரை: மௌஷ்மி

வண்ணப்படம்: கே. வி. ஆனந்த்

அட்டையில்: ராம்ஜி, பாரதி.



அவ்வை டி.கே. சண்முகம்

ஆறு வயதுச் சிறுவனாக இருந்த போதே நாடகத்தில் சேர்ந்தார். அன்றிலிருந்து தொடர்ந்து 55 ஆண்டுகளாக நாடக உலகில் இவர் செய்துள்ள சாதனைகள் பல.

இவர் நடித்த பல்சுவை மிகுந்த நாடகங்கள் 74. இவர் ஏற்று நடித்த முக்கிய பாத்திரங்கள் 109. மேனகா முதல் கப்பலோட்டிய தமிழன் வரை பற்பல திரைப்படங்களிலும் நடித்து நற்புகழ் பெற்றுள்ளார்.

திருவனந்தபுரத்தில் கண்ணுசாமி பிள்ளைக்கும், சீதையம்மாளுக்கும் புதல்வர்களாகப் பிறந்த சங்கரன், முத்துசாமி, சண்முகம், பகவதி ஆகிய நால்வரையும் 'நாடக நால்வர்' என்று கூறுவார்கள்.


இவர் தெய்வமாகப் போற்றிய குருநாதர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளாவார். இவர் உருவாக்கிய கலைஞர் பலர்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற நாடகக் கலைஞராகத் திகழ்ந்த இவர், முத்தமிழ்க் கலா வித்வரத்தினம், அவ்வை, நாடக வேந்தர், நடிகர் கோ, கலைமாமணி, நாடகத் தொல்காப்பியர், பத்மஸ்ரீ முதலிய எத்தனையோ சிறப்புப் பட்டங்களைப் பெற்றிருக்கிறார்.

நாடகம் பற்றி இவர் பல நூல்களையும் எழுதியிருக்கிறார்.

உங்களைப் போன்ற சிறுவர்களுக்காக இவரது பெருமுயற்சியால் உருவாகி மேடையேறிப் புகழ்பெற்ற நாடகங்கள் இரண்டு: 1. அப்பாவின் ஆசை, 2. பலாப் பழம்.

இவர், தமது வீட்டிலே மிகப் பெரிய நூலகம் ஒன்றை வைத்திருந்தார். இவர் கண் போல் காத்து வந்த அந்த நூல்களும், நாடகச் சுவடிகளும், படங்களும் தற்போது மதுரை காமராஜ் பல்கலைக் கழக நூலகத்தில் தனிப் பிரிவாகவே வைக்கப்பட்டுள்ளன.



ஓவியர் இரவிவர்மா

கலைமகள், திருமகள், சகுந்தலை, இராமர் பட்டாபிஷேகம் போன்ற அழகிய ஓவியங்களை இன்றும் நீங்கள் பல வீடுகளில் காணலாம். இவை போன்ற கடவுள் படங்களையும் புராணப் படங்களையும் வரைந்து புகழ்பெற்றவர் ஓவியர் இரவி வர்மா.

கேரளத்தைச் சேர்ந்த இவரை, இவருடைய தந்தையார், வடமொழிப் புலவராக்க விரும்பினார். ஆனால், இவருக்கோ ஓவியம் தீட்டுவதிலே அதிகமான ஆர்வம் இருந்தது. இவருடைய மாமா, இவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, இவரது திறமையை வளர்த்தார்.

திருவாங்கூர் மன்னரும் இவருக்கு உதவியாக இருந்தார். அரண்மனையிலிருந்த மேல்நாட்டுக் கலைஞர் ஜேன்சன் என்பவரிடம் இவர் ஓவியக் கலையைப் பயில ஏற்பாடு செய்தார்.

இவர் தீட்டிய 'நாயர் நங்கை' என்ற ஓவியம் கவர்னரின் தங்கப் பதக்கத்தையும் பெற்றது. இவரது ஓவியங்கள் சிகாகோ நகரில் நடந்த கலைக் காட்சியில் இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றன.

இவர் காலமானதும், மகாகவி பாரதியார் இவரைப் பற்றி ஒரு பாட்டு எழுதினார். அதில் "ரம்பை, ஊர்வசி போன்ற தேவலோகப் பெண்களின் ஓவியங்களை வரைந்த நீர், அந்தப் பெண்கள் நீர் வரைந்த ஓவியங்களைப் போல் இருக்கிறார்களா என்று பார்க்கத்தான் மேல் உலகம் சென்றீரா? அவர்கள் உமது ஓவியங்களைப் போல் அவ்வளவு அழகாகவா இருப்பார்கள்? நிச்சயமாக இருக்க மாட்டார்கள்" என்னும் பொருள் படப் பாடியிருக்கிறார்.

கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை-600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த சிறுவர்கள், உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேரலாம்.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினராக முடியும்.

உறுப்பினர் ஆனதும்...

உங்கள் உறுப்பினர் மனு கிடைத்ததும், உங்களை உறுப்பினராக ஏற்றுக் கொண்டு, ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். உறுப்பினர் பெயர், பிறந்த நாள், முகவரி அந்த அட்டையில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினரான பின், நீங்கள் கோகுலத்திற்குக் கதைகள், கவிதைகள், நகைச்சுவைகள், துணுக்குகள், ஓவியங்கள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும், கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

நீங்கள் எழுதும் கதைகள், கவிதைகள், நகைச்சுவைகள் — யாவுமே உங்கள் சொந்தக் கற்பனையில் எழுந்ததாக இருக்க வேண்டும். அறிவியல் போன்ற ஒரு துணுக்கை அனுப்பும் போது, அதற்கு எது ஆதாரம் எனக் குறிப்பிட வேண்டும்.

ஒரு கதை அல்லது கவிதை நன்றாக இருந்தால்; அதை கோகுலத்தில் வெளியிடும் முன்பாக அதை எழுதிய உறுப்பினருக்குத் தெரிவித்து, புகைப்படம் அனுப்பும்படி கேட்போம். உறுப்பினரின் எழுத்தோவியத்துடன் புகைப்படமும் கோகுலத்தில் வெளிவரும்.

உறுப்பினர் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை (முழுப் பக்கம்) அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ்நாட்டில் உள்ளவர்கள், தமிழிலேயே தெளிவாக முகவரியை எழுதுவதுடன், ஊர்ப் பெயரின் பக்கத்திலே பின்கோடு குறிப்பிடுவது அவசியம். தமிழ்நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்திலே எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு

பெயர்:

தகப்பனார்
அல்லது
வீட்டிலுள்ள பெரியவர் பெயர்:

முழு முகவரி:

பிறந்த தேதி:

தேதி: பின்கோடு...................... கையெழுத்து.

பிருந்தாவனம்

ஓர் எழுத்தால் உயர்வு தாழ்வு!

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது.
எட்டுச் சுரக்காய் கறிக்கு உதவும்!

பாட்டு எல்லார்க்கும் பொருந்தாது.
பட்டு எவர்க்கும் பொருந்தும்!

சூட்டுப் போட்டால் அழகுதான்.
சுட்டு விட்டால் அவதிதான்!




மூட்டை என்றாலே கனம் அதிகம்.
முட்டை தின்றால் பலம் அதிகம்!

கேட்டது கிடைத்தால் நன்மையே.
கெட்டது நினைத்தால் தீமையே!

— எஸ். ஜமீலாபேகம் (18,181),
குன்னூர்.

அப்பா தந்தது?

எங்கள் ஊரில் திருவிழா வழக்கம் போல் நடந்து கொண்டிருந்தது. நான், என் தம்பி, தங்கை மூவரும் எங்கள் அப்பாவிடம் திருவிழாக் காசு கேட்டோம். என் அப்பா என் தம்



பிக்குக் கொஞ்சம் காசு கொடுத்தார். தங்கைக்கு, தம்பிக்குக் கொடுத்ததை விட இரண்டு மடங்கும், எனக்கு மூன்று மடங்கும் தந்தார். எனக்கும், என் தம்பிக்கும், தங்கைக்கும் கொடுத்த ரூபாயைக் கூட்டினாலும், பெருக்கினாலும் ஒரே தொகைதான் வரும். அப்படி என்றால், எங்கள் ஒவ்வொருவருக்கும் அப்பா எவ்வளவு தந்தார்?

விடை:
தம்பிக்கு ரூ. 1/— $(1+2+3=6)$
தங்கைக்கு ரூ. 2/— $(1 \times 2 \times 3 = 6)$
எனக்கு ரூ. 3/—

— ஏ. அண்ணாதுரை (10,403),
பஞ்சலிங்கபுரம்.

அவர் யார்?

சுரேஷ் என்பவர் என்னுடைய அப்பாவுடைய, அக்காவுடைய, தம்பி



யுடைய, மனைவியுடைய, பெண்ணுடைய, தாத்தாவுடைய மகன். அப்படியென்றால், சுரேஷ் என்பவர் யார்? எங்கே 'பட்'டென்று பதில் கூறுங்கள், பார்ப்போம்.

விடை: சுரேஷ் என்பவர் என்னுடைய அப்பா.

— ம. நாகராஜன் (5848),
பண்ருட்டி.

இரு மொழிகளில் பொன் மொழிகள்

Measure your life by acts of goodness, not years.

நம்முடைய வாழ்க்கையை நம்முடைய நல்ல செயல்களினாலே அளக்க வேண்டும்; வருடங்களால் அல்ல.

Beauty is a flower; but virtue is the fruit of the life.

அழகு என்பது ஒரு மலர்; ஆனால், நேர்மை என்பது நம் வாழ்வின் கனியாகும்.



Drink what is pure; eat what is cooked; speak what is true.

தூய்மையானவற்றையே பருகு; சமைத்த உணவையே உண்; உண்மையையே பேசு.

— எஸ். சுப்பிரமணியன் (20,228),
திருச்சி — 1.

உலகிலேயே பெரிய நூல்!

புத்தகங்களை அச்சிடும் முறை வழக்



கத்திற்கு வந்த கடந்த 400 ஆண்டுகளில், மேலை நாடுகளில் வெளிவந்த எல்லாப் புத்தகங்களின் பட்டியலும் அடங்கிய ஒரு நூல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. உலகிலேயே மிகப் பெரிய புத்தகம் இது தான். 41 மீட்டர் நீளம்; இரண்டரை டன் எடை. விலை: 16,352 பவுண்ட்.

— சிவ. அய்யப்பன் (12,088),
ராஜாக்கமங்கலம்.

எதை யார் எழுதினர்?


நூல்களின் பெயர்களும் ஆசிரியர்களின் பெயர்களும் மாறியுள்ளன. கண்டுபிடிக்க முடிகிறதா?

1. பொன்னியின் செல்வன் — நா. பார்த்தசாரதி
2. பெண்ணின் பெருமை — அகிலன்
3. கரித்துண்டு — பாரதிதாசன்
4. மாங்கனி — அறிஞர் அண்ணா
5. பாவை விளக்கு — கண்ணதாசன்
6. குறிஞ்சி மலர் — மு. வரதராசனர்
7. மலைக்கள்ளன் — கல்கி
8. சந்திரோதயம் — நாமக்கல் கவிஞர்
9. குடும்ப விளக்கு — திரு. வி. க.

விடை: 1 — 7, 2 — 9, 3 — 6, 4 — 5, 5 — 2, 6 — 1, 7 — 8, 8 — 4, 9 — 3.

— எஸ். லோகநாதன் (17,150),
செருகளத்தூர்.





காரணம் என்ன?

"சுதந்திரப் போராட்ட காலத்திலே நான் ஜெயிலுக்குப் போயிருந்தேன். ஆனாலும், எனக்குப் பென்ஷன் தர மாட்டாங்களாம்."

"அரசாங்கத்திற்கு எழுதிப் போடுறதுதானே?"

"போட்டேனே. 'திருடிப்பிட்டு ஜெயிலுக்குப் போனவங்களுக்கெல்லாம் பென்ஷன் கிடையாது'ன்னு பதில் வந்திடுச்சு."

—கி. சாகேதராமன் (4669),
திருச்சி — 14.

சீனப் பழமொழிகள்

* சாட்டையை இழந்து விட்டால், அதில் தங்கப்பிடி இருந்தது என்பார்கள் மனிதர்கள்!

* சொற்கள் — வெறும் நீர்க்குமிழிகள். ஆனால், செயல்கள் — தங்கத் துளிகள்.

* நாணயம் ஒன்றுதான் எங்கும் மதிப்புள்ள ஒரு நாணயம்.



* சொர்க்கத்திற்கு மலர்கள் தூவிய பாதை இருக்கிறது. ஆனால், அதில் யாரும் நடப்பதே இல்லை. நரகத்திற்கு வாசலே இல்லை. ஆனால், அங்கு செல்ல எல்லாரும் சுவர் ஏறிக் குதித்துக் கொண்டிருக்கிறார்கள்!

— பி. செந்தில்குமார் (6861),
கோவை — 4.

புத்தகப் பிரியர்

அறிஞர் அண்ணா நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சமயம், அவரைக் கவனித்து வந்த மருத்துவர், ஒரு நாள் வந்து, "நாளை ஆபரேஷனை வைத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டார்.

"டாக்டர் சார், இப்போது நான் அருமையான ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன். பாதிதான் படித்திருக்கிறேன். எப்படியும் நாளைக்குள் முழுவதும் படித்து முடித்து விடுவேன். அதனால், நாளை மறுநாள் ஆபரேஷனை வைத்துக் கொண்டால், நல்லது. ஒருவேளை ஆபரேஷனில் நான் இறந்துவிட்டால் கூட நிம்மதியாகச் சாகலாமல்லவா?" என்றாராம் அறிஞர் அண்ணா.

— க. ஸ்ரீராம் (8477),
நெய்வேலி — 1.






சிரிப்புக் கவிதை

அதோ பார் மொட்டை,
அவன் உயரமோ குட்டை;

அணிவதோ நைலான் சட்டை;
பரீட்சைக்கு எடுத்துச் செல்கிறான் அட்டை;
அவன் பேனா எழுதுவது பட்டை;
பரீட்சையில் வாங்குவது கோழி முட்டை!

— ஆர். ரமேஷ் (20,498), புலிவலம்

நோட்டிலே கையொப்பம்



ஒரு ரூபாய் நோட்டை இந்திய அரசு வெளியிடுகிறது. அதில் நிதித்துறைச் செயலாளர் (Financial Secretary) கையொப்பம் இடுகிறார். மற்ற எல்லா நோட்டுகளிலும் ரிசர்வ் வங்கியின் கவர்னர் கையொப்பம் இடுகிறார்.

— ஆ. மணிமேகலை (20,199), காரைக்கால்.

திருப்பிப் படித்தாலும்

கீழே உள்ள வார்த்தைகளைத் திருப்பிப் படித்தாலும் அர்த்தம் மாறாது.

EYE
CIVIC
LEVEL
REVIVER
ROTATOR
MADAM
MADAM I'M ADAM.

— கோ. அருண் (12661), பாண்டிச்சேரி — 11.





ஒரே சமயத்தில்

ரவிக்கு முதலாவதாக விளையாட்டு; இரண்டாவதாகச் சாப்பாடு; மூன்றாவதாகத்தான் படிப்பு. அவன் தினசரி படிப்பதில்லை. தேர்வு சமயங்களில் இரவு பகலாக உட்கார்ந்து படிப்பான்.

அவன் தந்தை எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவன் திருந்தவில்லை.


ஒரு நாள் அவன் சாப்பிட உட்கார்ந்தான். அவன் தட்டு நிறைய இட்லியைக் கொண்டு வந்து வைக்கச் சொன்னார் அவன் அப்பா.


"என்ன இது! ஒரே தடவையில் இத்தனை இட்லிகளையும் என்னால் சாப்பிட முடியுமா? நான் மூன்று இட்லிகளுக்கு மேல் சாப்பிட மாட்டேன்" என்றான்.

"ரவி, வருடம் முழுதும் நடத்தும் பாடங்களை, பரீட்சை நெருங்கியதும் ஒரே சமயத்தில் உட்கார்ந்து படிக்கக் கூடிய உன்னால், ஒரே சமயத்தில் இத்தனை இட்லிகளையும் சாப்பிட முடியாதா?" என்று கேட்டார் அப்பா.

ரவி சிந்திக்கத் தொடங்கினான். "அப்பா, என் தவறை உணர்ந்து கொண்டேன். இனி அன்றையப் பாடங்களை அன்றே படிப்பேன்" என்றான்.

— எல். எஸ். கோபால கிருஷ்ணன் (10546), சின்னக் காஞ்சிபுரம்.





பொல்லாத அரசனுக்கு ஒரு பூச்சி அளித்த தண்டனை

('ஏழை படும் பாடு' என்ற பிரெஞ்சுக் கதை உலகப் புகழ் பெற்றது. அது தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளிவந்திருக்கிறது. தமிழ்த் திரைப்படமாகவும் வந்து நல்ல வரவேற்பைப் பெற்றது. 'ஏழை படும் பாடு,' 'இளிச்சவாயன்' போன்ற நூல்களை எழுதியவர் பிரபல பிரெஞ்சுக் கதாசிரியர் விக்டர் ஹ்யூகோ. அவர், தம்முடைய பேரனுக்கும் பேத்திக்கும் சொன்ன கதையை இதோ உங்களுக்கும் சொல்லுகிறார் அ. தாசன் அவர்கள்.)

பிரபல பிரெஞ்சுக் கதாசிரியரான விக்டர் ஹ்யூகோவை விட, வேறு எந்தப் புலவரும் சிறுவர் சிறுமிகளிடத்தில் அதிகமாக நெருங்கிப் பழகியதாகச் சொல்ல முடியாது. ஜென்னி ஓர் அழகான சிறுமி. ஹ்யூகோவின் பேத்தி. அவள் மீது கொண்டுள்ள வாஞ்சையால் அவளுக்காக ஒரு புத்தகமே எழுதினார், ஹ்யூகோ.

ஒருநாள் ராஜீய விஷயமாக ஏதோ கலந்து பேச ஹ்யூகோவைத் தேடி ஒருவர் வந்தார். அப்போது ஜென்னியும், அவளது சிறிய தம்பி ஜார்ஜஸும் தாத்தாவின் முதுகில் ஏறிக் குதிரைச் சவாரி செய்து கொண்டிருந்தார்கள். ஹ்யூகோ அவர்களைச் சுமந்து கொண்டு அந்த அறையைச் சுற்றிச் சுற்றி ஊர்ந்து வந்து கொண்டிருந்தார். இந்தக் காட்சியை அந்தப் புதிய மனிதர் பார்த்துவிட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

அன்று அதிக நேரம் விளையாடியதால் ஜென்னி களைத்துப் போய் விட்டாள். பிறகு தாத்தாவைப் பார்த்து, "தாத்தா, தாத்தா! எனக்கு ஒரு நல்ல கதையாகச் சொல்லு, தாத்தா"

என்று அவள் கெஞ்சிக் கேட்டாள்.

''கதை கட்டிச் சொல்வது மிகவும் கஷ்டம், ஜென்னி'' என்று அமைதியாக ஹ்யூகோ பதில் சொன்னார்.

''உனக்குத்தான் அது கஷ்டமில்லையே, தாத்தா'' என்று தளுக்காகப் பதில் சொன்னாள், ஜென்னி.

''தாத்தா! நீதான் அதிகமாகக் கதைகள் எழுதி இருக்கிறாயே! நீ எழுதிய கதைப் புத்தகங்களில் இல்லாத ஒரு புதுக் கதையைச் சொல்லு, தாத்தா!'' என்று ஜென்னியும், ஜார்ஜஸும் ஹ்யூகோவின் கால்களைக் கட்டிக் கொண்டு தொந்தரவு செய்ய ஆரம்பித்தனர். இருவரையும் அன்போடு ஆரத்தழுவி மடிமீது உட்கார வைத்துக் கொண்டு விக்டர் ஹ்யூகோ 'நல்ல தெள்ளுப் பூச்சியும், பொல்லாத அரசனும்' என்ற கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை ஒரு முட்டாள் அரசன் ஆண்டு வந்தான். அவன் குடி ஜனங்களின் நலத்தைக் கருதாது அதிகத் தொல்லை கொடுத்து வந்தான். ஜனங்கள் அவனை வெறுத்தனர்.

அவன் ஒரு கோடீஸ்வரன். அவனிடம் பலம் பொருந்திய படைகள் இருந்தன. ஆகவே, அவனை வெளியே விரட்ட ஜனங்களால் முடியவில்லை. முதல் நாள் இரவு படுக்கப் போகும் போது இருப்பதைவிட மறுநாள் அவன் அதிகக் கொடுங்கோலனாகி விடுவான்!

ஒருநாள் ஒரு சிறிய கருணையுள்ள தெள்ளுப் பூச்சி அந்த அரசனின் கொடுங்கோல் ஆட்சியைப் பற்றிக் கேள்விப்பட்டது. எவ்வளவோ தெள்ளுப் பூச்சிகள் இருந்தாலும், அதிலே இந்தத் தெள்ளுப் பூச்சி மட்டும் ஒரு நல்ல ஜந்து. உள்ளபடியே பசி எடுத்தாலொழிய அது ஜனங்களைக் கடிக்காது. ஜனங்களுக்கு அதனால் வீண் தொல்லை எதுவுமே கிடையாது.

'அரசனை விழிப்பூட்டச் செய்வதே ஓர் அபாயகரமான வேலை. இருந்தாலும், முயன்று பார்க்கலாம்' என்று நினைத்தது, தெள்ளுப் பூச்சி.

அன்றிரவு அரசன் படுக்கையில் சாயும்போதே ஊசி குத்துவது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது.

''அட, இது என்னடா?'' என்று அரசன் கர்ஜித்தான்.

''ஓ, அதுவா! உன்னைத் திருத்த வந்திருக்கும் ஒரு தெள்ளுப் பூச்சி'' என்று பதில் கொடுத்தது, அந்தத் தெள்ளுப் பூச்சி.

''என்ன! தெள்ளுப் பூச்சியா? ஒரு நிமிஷம் பொறு. உன்னை ஒரு கை பார்க்கிறேன்'' என்று படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்தவாறே அரசன் துணிமணிகள் எல்லாவற்றையும் உதறினான். அவனால் அந்தத் தெள்ளுப் பூச்சியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அது அரசனுடைய தாடியில் சர்வஜாக்கிரதையாக நுழைந்து மறைந்து கொண்டது.

பிறகு, பூச்சியை விரட்டி விட்டதாக நினைத்துக் கொண்டு மீண்டும் படுக்கைக்குச் சென்றான், மன்னன். தலையணையில் இலேசாகச் சாயும் போதே மீண்டும் அந்தப் பூச்சி கடிக்க ஆரம்பித்தது.

''எவ்வளவு தைரியம் உனக்கு! நீயோ ஒரு சிறு அணு. நானே இந்த உலகத்திலேயே ஒரு பெரிய அரசன். என்னையே எதிர்க்கத் துணிந்து விட்டாயே!'' என்று அரசன் உறுமினான்.

தெள்ளுப் பூச்சியோ மீண்டும் மீண்டும் கடித்துக் கொண்டே இருந்தது. இரவு முழுவதும் அரசன் ஒரு வினாடி கூட கண் மூடவில்லை. பொழுது

பாய் வியாபாரம்

சிறுமி: அம்மா, வீட்டிலே வேலை பார்க்க ஒரு பையன் வேணுமின்னியே! தெருவிலே ஒரு ஆள் பையனை விற்கிறான்! கூப்பிடட்டுமா அவனை?

தாய்: பையனை யாருடி விற்பாங்க? வேறே ஏதாச்சும் வியாபாரமா இருக்கும்!

சிறுமி: இல்லேம்மா! பாய் பாய்ன்னு தானே சொல்றான்! பாய்ன்னா (boy) பையன்னுதானே அர்த்தம்?

— இரா. செல்லத்துரை (20163).




விடிந்தது. கஷ்டத்தோடு எழுந்தான், அரசன்.

அடுத்த நாள் அரண்மனையின் எல்லா அறைகளும் சுத்தம் செய்யப் பட்டன. இருபது நிபுணர்களைக் கொண்டு பெரிய தூரதரிசினியின் உதவியால் படுக்கை அறை முழுவதி

என்று அதிகாரத் தொனியிலே கூறி யது, அந்தப் பூச்சி.

''எங்கே என் போர் வீரர்கள்? எங்கே என் தளபதிகளும், மந்திரி களும்? உடனே விரைந்து வாருங்கள்" என்று உரக்கக் கத்தினன், மன்னன். உடனே, அரசனின் படுக்கை



லும் தேடச் செய்தான், அரசன். அரசன் போட்டிருந்த 'கோட்'டின் 'காலர்'ரில் அந்தப் பூச்சி மறைந்து கொண்டிருந்தது அவர்களுக்குத் தெரியவே இல்லை!

''சரி, தெள்ளுப் பூச்சி பயந்து ஓடி விட்டது. இன்று இரவு நன்ருகத் தூங் கலாம்'' என்று மகிழ்ச்சியோடு அன்று சீக்கிரமாகப் படுக்கைக்குச் சென்ருன், அரசன்.

படுத்ததும், உடனே ஊசி குத்து வது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட் டது. ''யாரது?'' என்று கூக்குரலிட் டான், அரசன்.

''நான் தான் தெள்ளுப்பூச்சி!'' என்ற பதில் கிடைத்தது.

''உனக்கு என்னதான் செய்ய வேண்டும்?'' என்று கோபத்தோடு கேட்டான், அரசன்.

''எனக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். குடிஜனங்களையும் சந் தோஷப்படுத்தியாக வேண்டும்!''

அறையை நோக்கி மந்திரிகள், தளபதி கள், போர் வீரர்கள் எல்லோரும் விரைந்தோடினர். அவசர அவசர மாகப் படுக்கையை மடிப்பு மடிப்பா கப் பிரித்துப் போட்டனர்; சுவர்களி லுள்ள அட்டைகளைப் பிரித்தனர்; தரையில் கிடந்த விரிப்புகளைக் கிழித் தனர். ஆனல், தெள்ளுப் பூச்சியோ அரசனது முடியில் மறைந்து கொண் டது! அதை யாரும் கண்டுபிடிக்க வில்லை!

அரசன் அடுத்த அறையில் போய்ப் படுத்தான். அங்கும் தெள்ளுப் பூச்சி தன் வேலையைக் காட்டியது. நன்ருக அவனைக் கடித்துத் தூங்க விடாமல் செய்து விட்டது.

மறு நாள் காலையில், அரசன் தெள் ளுப் பூச்சிகள் மீது தடை உத்தரவு ஒன்றைப் பிரகடனப்படுத்தினன். எவ்வளவு தூரம் தெள்ளுப் பூச்சிகளை ஒழித்துக் கட்ட முடியுமோ அவ்வளவு துரிதமாக அழிவு வேலையில் ஈடுபட

வேண்டுமென்று குடிமக்களுக்குக் கட்டளையிட்டான்.

எவ்வளவோ செய்தும் அவனால் அச்சிறு தெள்ளுப் பூச்சியிடமிருந்து தப்ப முடியாமல் போய் விட்டது. மன்னனின் உடலெல்லாம் பூச்சிக் கடியால் கறுத்துப் போய்விட்டது. ஆளே உருமாறி விட்டான்! தூக்கமில்லாததால் உடல் மெலிந்து போனது. கடைசியாகத் தெள்ளுப் பூச்சிக்குப் பணிந்து போவதாக ஒப்புக் கொள்ளாவிட்டால், நிச்சயமாகச் சாவுதான் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது!

''நான் விட்டுக் கொடுக்க வேண்டியதுதானா!'' என்று அங்கலாய்த்தான், அரசன்.

பூச்சி மீண்டும் கடித்துத் துன்புறுத்தவே, ''நீ விரும்புவதெல்லாம் செய்து வைக்கிறேன். என்னை என்ன செய்யச் சொல்கிறாய், சொல்?'' என்று கெஞ்சினான், அரசன்.

''நீ உனது குடிஜனங்களைச் சந்தோஷப்படுத்தியாக வேண்டும்'' என்று மீண்டும் பெருமிதத்தோடு கூறியது, பூச்சி.

''நான் அதை எப்படிச் செய்வது?'' என்று முணுமுணுத்தான், மன்னன்.

''நீ இந்த நாட்டை விட்டு ஓடிவிட வேண்டியதுதான்.......'' என்றது, பூச்சி.

''எனது சொத்துக்களில் கொஞ்சம் என்னோடு எடுத்துக் கொண்டு செல்லலாமா?'' என்று தாழ்மையாகக் கேட்டான், அரசன்.


''முடியவே முடியாது'' என்று அடித்துப் பேசியது, அந்தப் பூச்சி.

பின்னர் ஒருவாறு இரக்கப்பட்டு, பைகளில் வேண்டுமானால் கொஞ்சம் தங்கத்தைக் கொட்டிக் கொண்டு போகலாம் என்று அனுமதி அளித்தது.

அவ்வாறே அரசன் செய்தான். அந்த நாட்டை விட்டே ஓடிவிட்டான்!

அந்த நாட்டு மக்கள் தங்களுக்குள்ளேயே ஒரு குடியரசை ஏற்படுத்தித் தாங்களே ஆண்டு வந்தனர். அப்புறம் மிக மிக மிக ஆனந்தமாக அவர்கள் வாழலாயினர்.

தாத்தா இந்த வேடிக்கையான கதையைக் கூறியதும், ஜென்னியும், ஜார்ஜும் அளவிலாத ஆனந்தம் அடைந்தனர். தெள்ளுப் பூச்சியால், அவஸ்தைப்பட்ட மன்னனைப் போல் நடித்துக் கொண்டே தாத்தா கதை சொன்னது அவர்களுக்கு மிகவும் ஆனந்தத்தைக் கொடுத்தது. கதை முடிந்ததும், நாற்காலியைச் சுற்றிச் சுற்றி வேடிக்கையாக ஓடிவந்தார், அந்தத் தாத்தா. அதைக் கண்டு, பேரனும், பேத்தியும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கலானார்கள்.



அப்பு + சுப்பு

''டேய், அப்பு. இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. நம்ப போர்டை வாசலிலே மாட்டவில்லையா?''

''வாசல்லே மாட்டத்தான் போர்டைக் கையில் எடுத்தேன். அதற்குள் நீயே வந்து விட்டாய். வா... சுப்பு, நாம இரண்டு பேருமே சேர்ந்து போர்டை மாட்டுவோம்.''

அப்புவும் சுப்புவும் போர்டை மாட்டி விட்டு வருவதற்குள், அவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள்:

அப்புவும் சுப்புவும் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கின்றனர். இருவரும் இணைபிரியாத நண்பர்கள். பக்கத்துப் பக்கத்து வீடுகளில் வசித்து வருகின்றனர். குறும்புத்தனம் செய்வதில் இருவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல. படிப்பில் முதல் இரண்டு ரேங்க். விடுமுறை நாட்களில் துப்பறியும் வேலை செய்து வந்தனர்.

இருவரும் போர்டை மாட்டினர். போர்டு என்றால் பெரிய பலகையில், பெரிய பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டு மின் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டு இருக்கும் என்று நினைத்து விடாதீர்கள். பெரிய அட்டையில் 'அப்பு + சுப்பு நிறுவனம் — துப்பறியும் நிபுணர்கள்' என்று மையினால் எழுதப்பட்டிருந்தது.

''அப்பு... சுப்புங்கறது யாரு தம்பி?''

குரல் கேட்டு நிமிர்ந்தனர் அப்புவும் சுப்புவும். எதிரே கையில் பால் குவளையுடன் ஓர் ஆள் நின்று கொண்டிருந்தார்.

''நான்தான் அப்பு. இவன்தான் சுப்பு. உங்களுக்கு என்ன வேணும்?'' — அப்பு வினவினான்.

டி. ஜானகி

''தம்பி... வந்து... என்னுடை தங்கத்தைக் காணேம். அதைக் கண்டுபிடிச்சுத் தரமுடியுமான்னு கேட்கத்தான் வந்தேன்,'' — வந்தவர் கூறினார்.

''தங்கத்தைக் காணேமா? அசல் தங்கமா...? இருபத்திநாலு கேரட்டா... எங்கே வெச்சிருந்தீங்க? எப்போதிலிருந்து காணேம்? எல்லாம் விவரமாய்ச் சொல்லுங்க... டேய் சுப்பு... நோட்டை எடுத்துக் கொண்டு குறிப்பு எழுதிக் கொள்.''

சுப்பு நோட்டு, பால்பாயிண்ட் பேனவோடு தயாரானன்.

''ம்... ஆரம்பியுங்க'' என்றான் அப்பு.

''தம்பி! என் பேரு பங்காருசாமி. பால்காரர் பங்காருசாமின்னு, எங்க வீதியிலே தெரியாதவங்க யாரும்கிடையாது. எங்கிட்டே ஒரு உயர்ந்த ஜாதி பசுமாடு இருக்கு. ஒரு நேரத்துக்கு அஞ்சு லிட்டர் பால் கறக்கும்., அதோட கன்னுக்குட்டிக்குத்தான் தங்கம்னு பேரு. பால் நிறத்திலே வெள்ளை வெளேர்னு உடம்பு இருக்கும். காப்பித்தூளு நெறத்திலே முகத்திலே ரெண்டு பக்கமும் இருக்கும். அதைப் பார்த்தீங்கன்னு...'' பங்காருசாமியின் தொண்டை கம்மியது.

''அதைப் பார்க்கத்தானே போறோம்.... சொல்லுங்க...''

''உங்களாலே அதை... உயிரோடே பார்க்க முடியாது. பிறந்த ஒரு மாசத்துக்குள்ளாற தங்கம் செத்துப் போயிடுச்சு. மாடு பால் கறக்கவே விடமாட்டேன்னுச்சு. அதனலே என்ன செய்தேன் தெரியுமா?''

''சீக்கிரமா சொல்லுங்க, என்ன செஞ்சீங்கன்னு?''

''செத்துப் போன கன்னுக்குட்டிக்குள்ளாற வைக்கோலே அடைச்சு... தைச்சு... நீட்டா... வெச்சுட்டேன்... பால் கறக்கப் போறப்போ... தங்

கத்தை — அதுதான் — அந்தச் செத்துப் போன கன்னுக்குட்டியை அதுக்குமுன் னுடி போட்டுடுவேன்... அது தங் கத்தை... நாக்காலே... தடவிக்கிட்டே, கண்ணுல் ஆசைதீரப் பார்த்துக்கிட்டே இருக்கும். நான் சர், சர்ன்னு பாலேக் கறந்துடுவேன்.''

''இப்ப வைக்கோல் அடைச்ச கன்னுக்குட்டியைத்தான் காணேம்... இல்லேயா?''

''கரெக்டா சொல்லிட்டியே தம்பி...''

''எப்போதிலிருந்து காணேம்?''

''நேற்று சாயந்திரம் பால் கறந்த தும் வழக்கம் போல எங்கள் வீட்டு வைக்கோல்போருக்குப் பக்கத்திலே வெச்சேன். ராத்திரி சினிமாவுக்குப் போயிட்டு நல்லாத் தூங்கிப்புட்டேன். காலேயிலே எழுந்து கண்விழிச்சுப் பார்த்தா, தங்கத்தைக் காணேம்... எனக்கு என்ன செய்யறதுன்னே புரியலே தம்பி...'' பங்காருசாமி மூக் கைச் சிந்தி, துண்டால் கண்களேத் துடைத்துக் கொண்டார்.

''அப்ப... உங்க தங்கம் ராத்திரித் தான் காணுமல் போயிருக்கும்... டேய், சுப்பு... இவரு சொல்றதையெல்லாம் ஒழுங்கா எழுதிக்கோ... சரி, சரி... உங்களுக்கு யாராவது விரோதிகள் உண்டா? யார் மேலேயாவது சந் தேகம் உண்டா?''


துண்டைத் தலேயில் சுற்றியபடி பங் காருசாமி பதில் அளித்தார்:


''தம்பி... எனக்கு என் பெஞ்சாதி மேலேதான் சந்தேகம். தங்க நகை அவளுக்கு வாங்கித்தரலேன்னு தங்கத் தைக் கண்டா அவளுக்குப் பிடிக் கல்லே. கன்னுக்குட்டியைக் காணே மேன்னு காலேயிலேருந்து தவியாத் தவிச்சுக்கிட்டு இருக்கேன். அவள் என்னடான்னு... கம்முன்னு இருக்காள். பத்து வாடிக்கைக் காரங் களுக்கு ஒன்பது லிட்டர் பால் சப்ளே செஞ்சாகணும். அதனுல் எப்படியாவது நீங்க ரெண்டு பேரும் தான் தங்கத்தைக் கண்டுபிடிச்சுக் கொடுக்கணும்!''

''பால்காரரே! ஒரு நேரத்துக்கு அஞ்சுலிட்டர் பால்தான் கறக்குதுன்னு சொன்னீங்க. ஆனு, நீங்க ஒன்பது லிட்டர் வியாபாரம் செய்யறீங்க... தண்ணிப் பாலா ஊத்தறீங்களா?''

''நெத்திக்குப் பொட்டு வெச்சுக் கிருப் போலே என் மாட்டுப் பால் ரொம்ப 'ஸ்ட்ராங்கா' இருக்கும் தம்பி... சில சமயம் தண்ணியிலே பாலே ஊத்துவேன்... பல சமயம் பாலிலே தண்ணியை ஊத்துவேன்... இதெல்லாம் வியாபார ரகசியம். கண் டுக்காதே தம்பி...''

''ஐயா.''





பேரம்

''எந்தப் பொருளேயும் பேரம் பேசி பத்துப் பைசாவது குறைக்காமல் வாங்கவே மாட்டேன்.''

''அப்படியே போஸ்ட் ஆஃபீசுக்குப் போய் எனக்கு ஒரு ஐந்து இன்லாண்ட் லெட்டர் வாங்கிக் குடுங்க.

— தேனி கோ. இரமேஷ்.

''என்ன தம்பி?''

''நாங்க உங்க தங்கத்தைக் கண்டு பிடிச்சுக் கொடுத்தா, நீங்க இந்த மாதிரி அநியாயமாத் தண்ணியிலே பாலே விடக் கூடாதுங்க.''

ஒரு விளுடி யோசித்த பால்காரர், ''சரி தம்பி! இனிமே தண்ணியிலே பாலே ஊத்தமாட்டேன், பாலிலே தண்ணி ஊத்தறேன். வாங்க நேரமாவுது... எப்படியாவது மாடு கறக்க வழி செய்யுங்க தம்பி'' என்று கூறியபடி எழுந்து கொண்டார்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் மூன்றுபேரும்பசுமாட்டுக்கொட்டகையில் நின்று கொண்டிருந்தனர்.

''தம்பி! உங்க ரெண்டு பேரிலே யாராவது பால் கறங்க.''

அப்பு சுப்புவைப் பரிதாபமாகப் பார்க்க, சுப்பு, அப்புவைக் கவலேயோடு நோக்க...

''பாட்டுப் பாடினு... மாடு பால் கறக்கும்னு எதிலேயோ படிச்ச ஞாபகம். சுப்பு, நீ ஒரு பாட்டுப் பாடு...''

அப்புவின் கட்டளேயை சிரமேற்கொண்டு சுப்பு தன்னுடைய கட்டைத் தொண்டையில்,

'ஓடி விளேயாடு மாடே — நீ
ஓய்ந்திருக்கலாகாது மாடே...
பாதகஞ் செய்பவரைக் கண்டால்
— நீ
பாய்ந்து சென்று மிதிக்க
வேண்டும் மாடே.'

என்று பாட,

அடுத்த விளுடி... அந்தப் பசு எழுந்து நின்று கொண்டு மூவரையும் முறைத்தது. குறிப்பாகச் சுப்புவைப் பார்த்துப் பாயத் தயாராக இருந்தது.

''டேய் சுப்பு... ஸ்டாப் இட். இனி மேல் வாயைத் திறக்காதே. பாடினுல் உன் வாயையே கிழிச்சுடும். பால் காரரே... டிரான்சிஸ்டர் பாட்டைக் கேட்டால்தான் மாடு நிறையப் பால் கறக்கும்னு படிச்சிருக்கேன். உங்க வீட்டிலே டிரான்சிஸ்டர் இருந்தால் கொண்டு வாங்க...''

அப்பு கூறியபடி வீட்டுக்குள்ளிருந்து டிரான்சிஸ்டரையும் பால் குவளேயையும் கொண்டு வந்தார் பங்காரு சாமி.

''தம்பி! என்னமோ தெரியாது. இன்னிக்கு இந்த மாடு என்னேப் பார்த்து முறைக்குது. அதோட கன்னுக்குட்டியை நான்தான் எங்கேயோ ஒளிச்சு வைச்சிருக்கேன்னு நினேப்பு அதுக்கு. இந்தாங்க நீங்க கேட்டது. பாலேக் கறந்துக்கிட்டிருங்க... அதுக்குள்ளே நான் போய் ஒரு சிங்கிள் டீ குடிச்சுட்டு வர்றேன்...''

பால்காரரின் தலே மறைந்ததும், ''டேய் சுப்பு, நீ போய்ப் பால் கறடா...'' என்ருன் அப்பு.

''போடா... பால் கறக்கறது ஒண்ணும் பிரமாதமான வேலே இல்லே... மாட்டைப் பார்த்துக்கிட்டிருக்கிறது தான் கஷ்டம். அதனுலே டிரான்சிஸ்டரை ஆன் பண்ணு. அந்தப் பாட்டுக் கேற்றபடி நான் டான்ஸ் ஆடுகிறேன். மாடு என்னேயே பார்த்துக்கிட்டிருக்கும். நீ பால் கற...''

''சுப்பு... நீ என் பக்கத்திலேயே நின்னுக்கிட்டு டான்ஸ் ஆடு.''

''சரி, சரி...''

டிரான்சிஸ்டர் ஆன் செய்யப்பட்டது. மாடு பாட்டைக் கேட்க ஆரம்பித்தது.

''நம்ப மாடு நல்ல மாடு
நாலு லிட்டர் கறக்கும் மாடு.
கறுப்பு மாடு, குண்டு மாடு,
கால் லிட்டர் கறக்கும் மாடு'' ஆ...

மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க சுப்பு தை தை என்று பாட்டிற்கு ஏற்ப ஆடிக் கொண்டிருந்தான்:

அப்பு மாட்டின் மடியின் மீது

கையை வைத்தான். அவ்வளவுதான்!

அடுத்த விநாடி! அந்த மாடு தன் பின்னங்கால்களால் அப்புவை நோக்கி உதைக்க... அப்பு சுப்புவின் மீது விழ... சுப்பு அலறிக் கொண்டே டிரான்சிஸ்டர் மீது விழ... ஒரே சத்தம்.

"போடா பொடியன்களே! கிட்டே வந்தால் சட்னியாக்கி விடுவேன்!" என்பதுபோல் இரண்டு பேரையும் அலட்சியமாகப் பார்த்தது அந்தப் பசு. பிறகு பால் குவளையைக் கொம்பால் ஃபுட்பால் ஆடிவிட்டு, கால்களை மடக்கிக் கொண்டு தரையில்

முதலில் ஆஃப் பண்ணித் தொலே" — அப்பு கத்தினான். பிறகு அப்பு, "இந்த மாடு சிவப்பாக இருக்கு, இல்லேயா! இதைப் போய்க் கறுப்பு மாடுன்னு பாடினதாலேதான் இதுக்குக் கோபம் வந்துடுச்சுடா... அந்தக் கோபத்திலே தாண்டா... இது என்னை உதைக்க ஆரம்பிச்சுடுத்து. சரி, சரி... இதுவே தன் கன்னுக்குட்டியைக் காணோம்ங்கிற ஏக்கத்திலே இருக்கு. பால்காரர் எப்படியோ அட்ஜஸ்ட் பண்ணிக்கட்டும், வா... நாம போய் தங்கத்தைத் தேடுவோம்."



ஜம்மென்று படுத்துக் கொண்டுவிட்டது.

சில விநாடிகளில் — ஆடையில் ஒட்டிய தூசுகளைத் தட்டிவிட்டு, அடிபட்ட இடத்தைத் துடைத்தபடியே அப்புவும் சுப்புவும் எழுந்து நின்று கொண்டனர்.

அந்தச் சமயம் டிரான்சிஸ்டரிலிருந்து, "உடல் வலியா? கீழே விழுந்து அடியா...? சிராய்ப்பா? வேதனையா? எங்கள் குஷிகுஷி வலி நிவாரணியை வாங்கி ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள். மறைந்து விடும் வலி. பறந்து வரும் குஷி... இன்றே வாங்குங்கள் குஷி குஷி வலி நிவாரணி" என்ற விளம்பரம் ஒலிபரப்பாக...

"டேய்... சுப்பு... டிரான்சிஸ்டரை

மறுவிநாடி காலை நொண்டியபடியே இருவரும் ஒவ்வொரு தெருவாகச் சுற்ற ஆரம்பித்தனர். பலன் இல்லே.

கதிரவன் நடுவானில் நின்று கொண்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

"டேய் அப்பு! இந்தப் பங்களாவிலே இருக்கும்னு என் மனசு சொல்றது. வாசல் கம்பிக் கதவைப் பூட்டித் தொலைச்சிருக்காங்க. எதுக்கும் இந்தக் கம்பிமேல நான் ஏறி நின்னு பார்க்கிறேன்," — சொல்லிக் கொண்டே சுப்பு கம்பிக் கதவின் மீது ஏறிநின்று உட்பக்கம் கண்களை ஓட விட்டான்.

"டேய் அப்பு! அதோ... அந்த மரத்

தடியில் கன்னுக்குட்டி...'' சுப்பு காட்டிய திசையில் அப்பு பார்த்தான்.

சற்றுத்தள்ளி உட்பக்கம் உள்ள மரத் தடிக்கு அடியில் கன்றுக்குட்டி போன்ற ஓர் உருவம், ஒருவேளை உண் மையாகவே கன்றுக்குட்டியாக இருக் குமோ!

தைரியமாக அப்பு கம்பிக் கதவின் மீது ஏறினன்.

கதவு சப்தமிட்டது.


அடுத்தவினுடி...'லொள்...லொள்' என்று குரைத்தபடி மரத்தடியிலிருந்து பாய்ந்து வந்தது ஒரு பெரிய நாய்... வெள்ளை உடல்...

அவ்வளவுதான்! குதிகால் பிடரி யில் பட இருவரும் நொண்டியபடியே ஓட ஆரம்பித்தனர்.

''டேய் சுப்பு! பசி மயக்கத்திலே உனக்குப் பணக்காரர் வீட்டு நாய்க் கும், பங்காரு சாமியோட கன்னுக் குட்டிக்கும்வித்தியாசம்தெரியல்லே... வா.. வா... முதலிலே வீட்டுக்குப் போய்... சாப்பிட்டுவிட்டு மறுபடியும் கன்னுக்குட்டியைத் தேடும் வேட்டை யைத் தொடருவோம்.''

இருவரும் வீட்டை நோக்கி விரைந் தனர். சாப்பிட்ட பிறகு...

''டேய் அப்பு... எனக்கு என்னவோ பால்காரர் பெண்டாட்டியின் மீது சந் தேகமா இருக்கு... நீ என்ன நினைக் கிறே?''



''ஆமாண்டா சுப்பு! எனக்கும்கூட அந்தம்மாள் மீதுதான் சந்தேகம்டா... நைசா விசாரிச்சுப் பார்ப்போம்.''

அடுத்த ஒரு மணி நேரத்தில் இருவ ரும்பங்காருசாமியின் வீட்டை அடைந் தனர். பால்காரர் வீட்டில் இல்லை. அவருடைய மனைவி செல்லாயி மாட் டுக்குப் பருத்திக் கொட்டை ஆட்டுவ தற்காக ஆட்டுக்கல்லின் முன்பு அமர்ந் திருந்தாள்.

''அம்மா..! நீங்க நகருங்க... நாங்க பருத்திக் கொட்டையை ஆட்டு கிறோம்'' என்று அப்பு கூறினன்.

''வேண்டாங்க தம்பிகளா!'' என்று செல்லாயி சொல்லச் சொல்ல, இரண்டு பேரும் மங்கு மங்கு என்று போட்டி போட்டுக் கொண்டு பருத்திக் கொட்டையை அரைத்துக் கொடுத் தனர். பிறகு கிணற்றிலிருந்து நீர் இறைத்து, சிமெண்ட் தொட்டியை வழிய வழிய நிரப்பினர். வாளியில் தண்ணீர் கொண்டு வந்து சமையல் அறையில் வைத்தனர். இருவரையும் பார்க்கச் செல்லாயிக்குப் பாவமாக இருந்தது.

''பால் இருந்திச்சுன்ன... ஆளுக்கு ஒரு கிளாசு காப்பி வெச்சுக் கொடுப் பேன்... இந்தப் பாழாப் போன கன் னுக்குட்டி இல்லாம இந்த மாடு பால் கறக்காதுன்னு எனக்குத் தெரிஞ்சி ருந்தா, நான் கன்னுக்குட்டியை...''

'டக்'கென்று நிறுத்திக் கொண்டு விட்டாள். அப்பு உஷாரானன். குரலில் குழைவைத் தேக்கிக் கொண்டு, ''ஆமாங்க... உங்களுக்கு எப்படித் தெரியும்ங்க. இந்தப் பாழாய்ப் போன மாடு இப்படிப் பிடி வாதம்... பிடிக்கும்னு... இதனுலே... எவ்வளவு நஷ்டம் உங்களுக்கு? உம்...'' என்று கூறியபடி பெருமூச்சு விட் டான். அதற்குமேல் மூச்சுவிட முடியாததால் சுப்பு தொடர்ந்து பெரு மூச்சு விட்டபடி கேட்டான்:

''ஆமாங்க... பாவங்க நீங்க... உம்... அப்புறம் கன்னுக்குட்டியை என்ன செஞ்சிங்க?''

''நேத்திக்கு ராத்திரி ஒரு ஆளு வந்து தங்கத்தை விலைக்குக் கேட்டாரு. அவங்க மாட்டோட கன்னுக்குட்டி செத்துப் போயிடுச்சாம். அதனுலே எங்க வூட்டுக்காரருக்குத் தெரியாம



விலைக்கு வித்துப்புட்டேன். கையிலே மூந்நூறு ரூபாய் சொளையாக் கொடுத்தாரு அந்த ஆள். அதோட கூடக் கொஞ்சம் பணம் போட்டு ஒரு மூக்குத்தி வாங்கணும்.''

தூக்கி வாரிப்போட்டது இருவருக்கும்.

''ஆமா... வாங்கிட்டுப் போன ஆளு யாருன்னு தெரியுமா?'' அப்பு கேட்டான்.

''அந்த ஆளை அதுக்கு முன்னுடி நான் பார்த்ததுகூடக் கிடையாது. அந்த ஆளு வீடு எதுன்னும் எனக்குத் தெரியாது.''

இனிமேல் செல்லாயியிடம் என்ன வேலை? இருவரும் விடைபெற்றுக் கொண்டு ஒவ்வொரு பால்காரர் வீடாகத் தேட ஆரம்பித்தனர். தேடிக் கொண்டே ஊரின் கோடியை அடைந்தனர்.

அங்கு இருந்த ஓர் உணவு விடுதியின் முன்பாக அம்பாஸிடர் கார் ஒன்று நின்று கொண்டிருந்தது. அந்தக் காரின் அருகில் யாருமில்லை.

அப்புவுக்கு ரொம்ப நாட்களாக ஓர் ஆசை. காரின் பின்புறம் உள்ள டிக்கியைத் திறந்து பார்க்க வேண்டும் என்று. சுப்புவுக்கு என்ன ஆசை தெரியுமா? காரின் முன் பக்கம் உள்ள பானெட்டைத் திறந்து இன்ஜினைப் பார்க்க வேண்டும் என்று.

இருவரும் அருகில் சென்று காருக்குள் பார்த்தனர். நல்ல காலம், காருக்குள் யாருமில்லை.

இருவரும் தங்கள் ஆசைகளை நிறைவேற்ற முயன்றனர்.

சுப்பு முன்பக்கம் செல்ல, அப்பு பின்பக்கம் உள்ள டிக்கியைத் திறந்தான். உள்ளே பார்த்த அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அப்போது காக்கிச் சட்டை போட்ட ஓர் ஆள் அவசர அவசரமாக ஹோட்டலின் உள்ளேயிருந்து வெளியே வந்தான்.

''டேய்! ராஸ்கல், டிக்கிகிட்டே உனக்கென்னடா வேலை?'' என்று அடிக்கக் கையை ஓங்கினான்.

அவ்வளவுதான், 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று அப்பு ரோட்டைத் தாண்டி எதிர்ப்பக்கம் உள்ள பெட்டிக் கடையை அடைந்தான்.

காக்கிச் சட்டைக்காரன் அப்புவை மிரட்டுவதைக் கண்ட சுப்புவும் விழுந்தடித்துக் கொண்டு பெட்டிக் கடையை அடைந்தான்.

பெட்டிக்கடை பெஞ்சியின் மீது அமர்ந்து கொண்டு பேப்பர் படிப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்த இரண்டு பேர் — இதுவரை நடைபெற்றதைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவரான தாடிக்

காரர் அப்புவைப் பார்த்து, ''தம்பி! காருகிட்டே ஏன் போனே? அந்த ஆளு என்ன சொன்னரு?'' என்று வினவினர்.

காலையிலிருந்து கன்றுக்குட்டியின் நினைவாகவே இருந்ததால், ''தங்கம்... இல்லே... கன்னுக்குட்டி... டிக்கி யிலே இருக்கு... ஆமா... அந்தப் பால் காரரோட தங்கம்... ஆமா... தங்கம் தான்!'' என்று உளற ஆரம்பித்தான் அப்பு பயத்துடன்.

இதைக் கேட்ட அந்தத் தாடிக்கார ரின் முகம் மலர்ந்தது.

''வா, தம்பி! டிக்கியை நல்லா... திறந்து பார்க்கலாம், பயப்படாதே'' என்று உற்சாகமூட்ட சந்தோஷத் தோடு இருவரும் அவரைப் பின் தொடர்ந்தனர். தாடிக்காரர் டிக்கி யைத் திறக்க,

இரண்டு வால்களின் விழிகளும் வியப்பால் விரிவடைந்தன. ஆம்! பங்காருசாமியின் வைக்கோல் கன்றுக் குட்டி... பால் நிறத்திலே உடம்பு... காப்பி நிறத்திலே முகம்... மான் போல அமைதியாக உறங்கிக் கொண்டிருந் தது.

''ஆ... அப்பு... இதாண்டா... நாம தேடி வந்த தங்கம்'' உற்சாகத்தால் குதித்தான் அப்பு.

தாடிக்காரர் தம் பாக்கெட்டிலி ருந்த கத்தியை எடுத்தார். அதனல் அக்கன்றுக்குட்டியின் வயிற்றைக் கிழித்தார்...

அந்த வயிற்றிற்குள்,

தங்க பிஸ்கெட்டுகள்... அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன...!

''ஆ...!'' இருவரும் வாயைப் பிளந் தனர்.

அதற்குள் தாடிக்காரர் சைகை காட்டவே... மற்ருேர் ஆள் அந்தக் காக்கிச் சட்டை ஆளைப் பிடித்துக் காருக்குள் அடைத்துக் கைகால்களைக் கட்டிப் போட்டு விட்டார்.


இருவராலும் பேசக் கூட முடிய வில்லை. ''தம்பி! நான் யார் தெரியுமா? நான்தான் இந்த ஊர் இன்ஸ்பெக்டர் அர்ஜுன் குமார். கள்ளத் தங்கம் கடத் துவதாக எங்களுக்குச் செய்தி வந்ததே யொழிய, எப்படி — எங்கே என்று சரியான விவரம் கிடைக்கவில்லை... எனவே, நாங்கள் பத்துப் பேர் மஃப்டி யிலே இந்த ஊரின் முக்கியமான இடங் களில் நோட்டம் பார்த்துக் கொண் டிருந்தோம். டிக்கியை நீ திறந்ததும், இந்த ஆள் உன்னை அதட்டியதைப் பார்த்ததும்தான் எனக்குச் சந்தேகம் வலுத்தது. அதனல்தான் உன்னையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு சோதனை செய்தேன். உங்கள் உதவி யால்தான் நானும் எனது நண்பர் தினகரும் இவ்வளவு சீக்கிரம் கள்ளத் தங்கத்தைக் கைப்பற்ற முடிந்தது. உங்க ளுக்கு நல்ல பரிசு காத்திருக்கிறது.'' என்று இருவரையும் தட்டிக் கொடுத் தார் இன்ஸ்பெக்டர்.

சுப்பு காலையில் பங்காருசாமி வந்தது முதல் இதுவரை நடைபெற்றது வரை அவரிடம் தெளிவாகக் கூறி ஞன்.

''ஸார்... ஸார்... தயவு செய்து... தங்கத்தை... ஸாரி... அதாவது... வைக் கோல் கன்றுக்குட்டியை எங்களிடம் கொடுத்து விடுங்கள். அதை பங்காரு சாமியிடம் கொடுத்துவிட வேண் டும்'' என்ருன் அப்பு பணிவோடு.

''சரி... இன்று இரவு ஸ்டேஷனுக்கு வந்து பங்காருசாமியைக் கன்றுக் குட்டியை வாங்கிக் கொண்டு போகச் சொல்லுங்கள்'' — என்று கம்பீரமான குரலில் கூறினர் இன்ஸ்பெக்டர் அர் ஜுன்குமார். பிறகு காருக்குள் ஏறி அமர்ந்தார்.

''தேங்க்யூ ஸார்!'' சந்தோஷத் தோடு கூறியபடி அப்புவும் சுப்புவும் பங்காருசாமியின் வீட்டை நோக்கி ஏறு நடை போட்டனர்.



பழமொழிப் புதிர்

புதிர்-33



புதிர்-34



மேலே இரு படங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு டமும் ஒரு பழமொழியைக் குறிக்கிறது. பழமொழிகள் நினைவுக்கு வருகின்றனவா?

— விடை 64 — ஆம் பக்கம்.



° பரிசுகளுக்கு நடுவே.)

அடேயப்பா! இத்தனை பரிசுகளா!

சமீப காலமாக அடிக்கடி பத்திரிகைகளில் 'புகழொளி' என்ற மாணவனைப் பற்றிய செய்திகளைப் படித்திருப்பீர்கள்! புகழொளி நமது கோகுலம் சங்க உறுப்பினர் என்ற முறையில் இவைகளைப் படிக்கும்பொழுது எங்களுக்குப் பெருமிதமாக இருக்கும். சமீபத்தில் தினமணியில், புகழொளி இந்தியாவிலேயே இதுவரைக்கும் இல்லாத — யாராலும் செய்ய இயலாத புதிய சாதனைகளைச் செய்திருப்பதாகக் கூறி, அவனைப் பற்றிய விவரங்களையும் வெளியிட்டிருந்தது. இப்படிப் பல பத்திரிகைகளில் ஜொலிக்கின்ற இந்த வைரத்தை நம் கோகுலம் தம்பி தங்கைகளுக்காகப் பேட்டி காண முடிவெடுத்து மயிலாடுதுறை திருவிழந்தூர் செட்டித் தெருவில் 2—ஆம் எண் வீட்டை அடைந்தோம்.

வீட்டின் கதவு திறந்தது. உள்ளிருந்து கம்பீரமான தோற்றமும் கனிவான பார்வையும் கொண்ட ஒரு நடுத்தர வயதினர் வெளியே வந்தார்.

'அடடே... இவரை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே!' என்று நினைத்தோம்.

''உங்கள் பெயர்...?'' என்று கேட்டோம்.

''என் பெயர் பேரளம் புகழ்மதி'' என்றார்.

'அடடே, வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைக் கதைகளையும், நெஞ்சை நெகிழ வைக்கும் உணர்ச்சிக் கதைகளையும் எழுதி வரும் பேரளம் புகழ்மதி அல்லவா இவர்!'

''புகழொளியைப் பேட்டி காணலாம் என்று வந்தோம். அவன் வீடு இதுதானே?''

''ஆம், என் மகன் புகழொளி இங்குதான் இருக்கிறான்.''

''உங்கள் மகன்தான் புகழொளி யென எங்களுக்கு இதுவரை தெரியாது!'' என வியப்புடன் கூறினோம்.

''நானாக அறிமுகப்படுத்துவதை விட, தானாக அறிமுகம் ஆகும் அளவிற்கு அவனை வளர்க்க வேண்டும் என்பதுதானே எனது இலட்சியம்!'' என்று சிரித்தபடி உள்ளே அழைத்துச் சென்றார்.

அடடா... வீட்டினுள் எங்கு பார்த்தாலும் புத்தகங்கள் நம்மை வரவேற்றன. காந்தி, பாரதி போன்ற தலைவர்களின் படங்களும், உலக, இந்திய, தமிழக வரைபடங்களும் பெரியோர் பொன்மொழிகளும்சுற்றிலும்காணப்பட்டன. ஒரு புனிதமான ஆலயம் போல் வீடு விளங்கியது!

வீட்டினுள் உள்பக்கமாக இருந்த அறையில் தெளிவான உச்சரிப்போடு மெல்லிய குரலில் ஆற்று நீரோட்டம் போல புகழொளி படித்துக் கொண்டிருந்த ஒலி எங்கள் காதுகளில் விழுந்து கொண்டிருந்தது. எங்களின் வருகையாலோ அல்லது பேச்சுக்களாலோ அவன் துளிக்கூட சலனமடையவில்லை. நாங்கள் வந்திருப்பதையே அறியாத அளவுக்கு, கடமையே கண்ணாக இருந்தான். அவன் பெற்ற வெற்றிகளின் முக்கியமான இரகசியம் அவனைப் பேட்டி காணுமலேயே எங்களுக்குப் புலப்பட்டு விட்டது!

பேரளம் புகழ்மதி உள்ளே சென்று அவனை அழைத்துவந்தார். வெடவெடவென வளர்ந்திருந்தாலும் திட்டமான தேகம்; ஒளி பொருந்திய கண்கள்; பணிவு கொண்ட அடக்கமான சுபாவம். ''வணக்கம்... படித்துக் கொண்டிருந்ததால் கவனிக்கவில்லை'' மன்னிப்பு வேண்டும் குரலில் கூறினன் புகழொளி.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே... எளிய குடும்பத்தில பிறந்தாலும் கடுமையா உழைச்சா எவரெஸ்ட் அளவுக்கு உயர முடியும்னு இந்தியச் சிறுவர்களுக்கு இன்னிக்கு நிருபிச்சுக் கிட்டு இருக்கிற உன்னைப் பேட்டி காணத்தான் வந்தோம்'' என்று கூறிப் பேட்டியைத் தொடங்கினேம்.

நாங்கள்: எந்த வகுப்பிலே படிக்கிருய், புகழொளி...?

புகழொளி: பிளஸ் ஒன்று, 'ஏ' குரூப் மேத்ஸ், சயின்ஸ்... தேசிய மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறேன்.

''இதுவரைக்கும் எத்தனை பரிசுகள் பெற்றிருக்கிருய்?''

''போன வாரம் காலம்பற அரிமா சங்கம் நடத்தின பேச்சுப் போட்டியிலே முதல் பரிசும், சாயந்திரம் ரோட்டரி சங்கம் நடத்திய பேச்சுப் போட்டியிலே முதல் பரிசும், ஆக இரண்டையும் சேர்த்தா மொத்தம் 121 பரிசுகள்.''

''அப்பப்பா! 121 பரிசுகளா! ஒரே நாளில் நடந்த இரண்டு போட்டிகளிலும் நீதான் முதல்வனு? நம்ப முடியாத ரிக்கார்டா இருக்கே!''


''ஜேஸிஸ் இயக்கம் நடத்தின போட்டியில் கூட முதல் பரிசு பெற்றிருக்கிறேன். அவங்க என்னுடைய திறமையை மெச்சி, 'தலைசிறந்த இளைஞர்' என்கிற பட்டமும் கொடுத்தாங்க. அந்தப் பட்டம் தர, பதினெட்டு வயது ஆயிருக்கணும் என்கிற விதியையும் தளர்த்தி அந்த விருது எனக்கு வழங்கப்பட்டது.''

''அப்படியா! எது எதிலே உனக்கு 121 பரிசுகள் கிடைத்தன?''

''ஒப்பித்தல், பேச்சு, கட்டுரை, கவிதை, தனி /நடிப்பு, கதாகால்ட்சேபம், கல்வித்துறை ஆகிய எல்லா பிரிவிலும் இப்பரிசுகளைப் பெற்றிருக்கிறேன்.''

''ஓஹோ... இவைகளைப் பத்தி கொஞ்சம் சுருக்கமாச் சொல்லேன்!''

''எல். கே. ஜி. யிலே எனக்கு மூணு வயசு ஆகும்பொழுது தேசத்தைப் பத்தி ஒரு நர்சரி ரைம், ஆங்கிலப் பாடலை அடிபிறழாமல் அழகா ஒப்பிச்சேன். அதிலதான் எனக்கு முதல் பரிசு கிடைச்சுது. அதற்கப்புறம் இரண்டு வருஷம் ஒப்பித்தலுக்கான



புகழுக்குரிய புகழொளி.



ஜேஸீஸ் நடத்திய போட்டியில் முதல் பரிசு

பரிசுகள்தான். அப்புறமா ஆறு வயசிலே ஆங்கிலத்திலும், தமிழிலும் மேடைகளில் பேச ஆரம்பிச்சேன். அந்த வயசிலே யாரும் பேச வரமாட்டாங்க. அதனாலே சிறப்புப் பரிசுகளைப் பெற்றுக் கொண்டிருந்தேன்.''

''உண்மைதான்... அவ்வளவு சின்ன வயசிலே யார் தைரியமாப் பேசுவாங்க...! முதலில், பேச்சே சரியா வராதே...''

''அதே மாதிரிதான் கட்டுரையிலும்... ஐந்தாவது வகுப்பிலேயே பாரதி நூற்றாண்டு விழாக் கட்டுரைப் போட்டியிலே கலந்துக்கிட்டேன். உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான அந்தப் போட்டியிலே சிறப்பு அனுமதியிலேதான் கலந்துக்கிட்டேன். சிறப்புப் பரிசும் பெற்றேன்.''

''பாரதி நூற்றாண்டு விழாவிலே உனக்கு முக்கியமான சிறப்புகள் ஏதாவது கிடைச்சுதா?''

''ஒரு திருப்புமுனையே நிகழ்ந்தது. பல பெரிய அறிஞர்கள் கலந்துக்கிட்ட பல மேடைகளில், '''இலக்கியமே, இருக்கிறாயா?,' 'இலக்கியத்தின் இரண்டு வாழ்க்கை,' 'இலக்கியத்திற்கு இத்தனை விலங்குகளா?,' 'இலக்கியத்தைப் பூட்டி வைக்காதீர்?' என்கிற தலைப்புக்களிலே நான் பேசின பேச்சுக்களுக்கு அரங்கமே ஆரவாரமாக் கைதட்டி உணர்ச்சி வசப்பட்டது. பார்தியை நினைக்கிற போது இந்தப் பேச்சுக்கள் ஞாபகத்துக்கு வருது!''

''நேரு மாமா விழாவிலே இது மாதிரி நீ பசுமையாக நினைச்சுக்கிற அளவுக்கு ஏதாவது உண்டா?''

''உண்டு. நான் ஆறாவது சேர்ந்தவுடனே தஞ்சை மாவட்ட அளவிலே அரசு நடத்தின நேரு நினைவு ஆங்கிலப் பேச்சுப் போட்டியிலே கலந்துக்கிட்டேன். பிளஸ் 2 முடியக் கலந்து கொள்ளும் அந்தப் போட்டியிலே எனக்குத்தான் முதல் பரிசு! அது மாத்திரமில்லே... தொடர்ச்சியா ஒன்பதாவது முடிய நான்தான் ஃபர்ஸ்ட். இது ஒரு இந்திய ரிக்கார்டு. பத்தாவதிலே டெல்லி சென்றதால் நான் கலந்துக்க முடியல்லே.''

''நீ சிறு வயசிலேர்ந்து பேச ஆரம்பிச்சதுக்கு நல்ல பலன் கிடைச்சிருக்கு.''

''உண்மைதான்... 15.8.87 லே சிறுசேமிப்புப் போட்டியிலே — தஞ்சை மாவட்டம் முழுக்க நடந்த போட்டியிலே — ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் நானே முதல் பரிசு பெற்று அரசிடமிருந்து கோப்பையும், கேடயமும் பெற்றேன். இதுவும் ஒரு இந்திய ரிக்கார்டுதான்.''

''கவிதையிலும் உன் முத்திரையைப்

பொறிச்சிருக்கிறாய், இல்லியா?''

''ஆமா... காஞ்சி காமகோடி பீடமும் கோகுலமும் இணைஞ்சு நடத்தின தேச ஒருமைப்பாடு கவிதைப் போட்டியிலே எனக்கு முதல் பரிசு கிடைத்தது. தங்கப் பதக்கமும் ரூபாய் ஐந்நூறும் பெற்றேன். இந்தப் புனிதமான பரிசு என்னுடைய நூறாவது பரிசு!''

''தனி நடிப்பிலும் பரிசுகள் பெற்றிருக்கியா?''

'''தனி நடிப்புக் கதைத் தொகுப்பு'ங்கிற புதிய பாணியைத் தமிழுக்குக் கொண்டாந்திருக்கேன். அதைப் பத்திரிகைங்க கூட புகழ்ந்து எழுதினாங்க; செய்தி, மக்கள் தொடர்புத்துறை கூட சில நிகழ்ச்சிகள் நடத்தினாங்க.''

''கதாகாலட்சேபம் முதல் முதலிலே எந்த வயசிலே, எங்கே செஞ்சே...?''

''என்னுடைய பத்தாவது வயசிலே, பழையார் என்கிற ஊரிலே சிவன் சன்னதியிலே விநாயகர் கோயிலுக்கு நேர் மேடையிலே ''சங்கத் தமிழ் மூன்றும் தா'' என்கிற தலைப்பில் நடத்தினேன். பிறகு பல இடங்களில் நடத்தினேன்.''

''நீ பெற்ற பரிசுகளிலே வேறே ஏதாவது முக்கியமாச் சொல்ல வேண்டியதிருக்கா?''

''இருக்கு... எல். கே. ஜி. யிலிருந்து நான் கல்வித்துறையிலே — படிப்பிலே — முதல் மதிப்பெண் பெற்றுப் பரிசுகள் பெற்றுக்கிட்டு வர்றேன்... இந்த பிளஸ் ஒன்னுலே இப்ப நடந்த பரீட்சையிலே கூட நான்தான் ஸ்கூலிலே ஃபர்ஸ்ட்...''

''அப்படியா! கேட்கவே ஆனந்தமா இருக்கே... நீ இந்தியில் கூட எம். ஏக்கு இணையாப் பட்டம் வாங்கியிருக்கிறதாக் கேள்விப்பட்டோமே...?''

''ஆமாம். மாணவர்கள் விணைப் பொழுதைப் போக்காமல், தங்களால் முடிஞ்ச அளவுக்கு மொழிகளைப் படிக்கணும்னு எங்க அப்பா அடிக்கடி வலியுறுத்துவாங்க... அதற்கு முன் மாதிரியா என்னை இந்தி படிக்க வச்சாங்க...''

''நீ டெல்லிக்குக் கூடப் போனதாப் பத்திரிகைகளில் படிச்சோம்...''

''ஆமா... 1986—லே சிறந்த மாணவன் என்கிற முறையிலே இந்தியச் சுற்றுலா வாரியத்தின் சிறப்பு விருந்தினராக டெல்லி அசோகா ஹோட்டலில் எட்டு நாட்கள் தங்கியிருந்தேன். பல பெரிய, பெரிய தலைவர்களை நேரில் சந்திச்சு ஆசி பெற்றேன். 10.11.86 இல் எவ்வளவோ கடுமையான அலுவல்களுக்கிடையிலும் பிரதமர் ராஜீவ். தம்மைச் சந்திக்க எனக்கு அப்பாயின்ட்மென்ட் கொடுத்தார். அதை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்.''

மகாத்மா காந்தி சுடப்பட்ட இடத்தில்.



''இந்த அளவுக்கு நீ உயர உனக்கு மூல காரணமாக இருந்தது யார்?''

''என்னுடைய தந்தை பேரளம்புகழ்மதி அவர்கள்தான். எழுத்தாளர், பேச்சாளர், கவிஞர் என்று மூன்று விதத்திலும் சிறந்து விளங்குகிற என் தந்தை தம் ஆற்றலையெல்லாம் எனக்கே செலவழிச்சு ஒவ்வொரு நிமிடத்தையும் திட்டமிட்டு நடத்திக்கிட்டு வந்திருக்காங்க. அவங்க தம் சுகங்களையெல்லாம் தியாகம் செஞ்சு என்னை வளர்த்ததால்தான் சென்னை, திருச்சி, டெல்லி வானொலி, டீ. வி. ஆகிய அனைத்தும் என்னைப் பேட்டி காணுகிற அளவுக்கு என்னால் உயர முடிந்தது! இதுவரைக்கும் ஏழு பட்டங்கள் எனக்குக் கிடைச்சிருக்கு!''



தாய் தந்தையின் நடுவே.

''உன்னுடைய தந்தை போல எல்லாரும் இருந்தாங்கன்னா இந்தியாவே சொர்க்க பூமியாயிடும்!''

''என்னுடைய அம்மாவும், சோம்பலுக்கு இடம் கொடுக்காமல் தையல், எம்ப்ராய்டரி எல்லாத்திலேயும் திறமைசாலியா இருக்காங்க. என்னுடைய ஒன்றுவிட்ட அக்காவினராகிய இலக்கியம், புன்னகை, தென்றல் ஆகியோரும் என்னுடைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து, அப்பப்ப என்னை ஊக்குவிச்சுக்கிட்டு வர்றாங்க.''

''நீ இந்த அளவுக்கு முன்னணிக்கு வந்ததற்கு என்ன காரணம் என்று நினைக்கிறாய்?''

''நான் சின்ன வயதிலிருந்து புத்தகங்கள் படிக்கிறதிலே ஆர்வமா இருந்திருக்கேன். ஐந்தாவது படிக்கிறதுக்குள்ளே 300 புத்தகங்கள் படிச்சுட்டேன். பாரதியார், கவிமணி பாடல்களெல்லாம் எனக்கு உத்வேகத்தைத் தரும். முக்கியமா பிள்ளைக் கவியரசு வள்ளியப்பாவின் பாடல்கள் என்னை உருவாக்கியதிலே பெரும் பங்கு வகிக்கின்றன!''

''ரொம்ப மகிழ்ச்சி... நம்ம கோகுலம் கௌரவ ஆசிரியர் இந்த அளவுக்குக் குழந்தைகள் மனத்திலே தெய்வமாய் விளங்குகிறதை நினைத்தால் பெருமிதமாய் இருக்கிறது.''

''அவரது பாடல்களை நான் சின்ன வயசிலே படிக்கும் பொழுது இவரை ஒரு முறையாவது தரிசிக்கணும்னு கனவு கண்டு கொண்டிருப்பேன்! ஆனால் என்ன ஆச்சரியம்! நம்பவே முடியாத ஆச்சரியம் நடந்தது! 102 பரிசுகள் நான் பெற்று முடிச்ச பொழுது, நம் கவிஞரே 'இலக்கியச் செல்வன்' என்கிற பட்டத்தை எனக்கு அளிச்சார். அதைப் பெறும் பொழுது எனக்கு உடம்பே சிலிர்த்தது; இரவு முழுதும் ஆனந்தத்தாலே அழுதேன்.''

''சரி, உன் எதிர்கால பாரதம் எப்படியிருக்கும்னு நினைக்கிறாய்?''

''நிச்சயம் ஒளி மயமாக இருக்கும். என்னுடைய தந்தை ஒரு பெரிய கூட்டத்திலே ''விடியலைத் தேடுகிறேன்'' என்ற தலைப்பிலே சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினாங்க. நான் அதே கூட்டத்தில் ஆங்கிலத்தில், 'இதோ...



'இலக்கியச் செல்வன்' பட்டமளிப்பு விழாவில்.

ஒளி தெரிகிறது'' என்ற தலைப்பிலே பேசினேன். தலைமை வகித்த நீதிபதி, ''நடுத்தர வயது பாரதத்தினர் அவ நம்பிக்கையோடு 'விடியலைத் தேடு கிறேன்' என்ற விரக்தியிலேயே காலத்தை ஓட்டுகிறார்கள். ஆனால், இளையபாரதமோ, 'இதோ ஒளி தெரி கிறது' எனப் புதிய பாரதத்தின் ஒளி மயத்தை இனம் கண்டு கொண்டு வணங்குகிறார்கள். எனவே, புதிய பாரதம் எழுச்சியோடு இருக்கும்'' என்று குறிப்பிட்டார்கள்.

''ஆமாம்... உன்னை மாதிரிப் புதிய சூரியன்கள் இருக்கும்பொழுது இளைய பாரதம் ஒளிமயமா, பிரகாசமாக இருந்தேதான் தீரும்... கடைசியாக உன்னிடம் ஒரு கேள்வி... இவ்வளவு வெற்றிகளைக் குவிக்கிறியே, உனக்கு எங்கிருந்து கிடைக்கிறது நேரம்?''

''வீணை பொழுதுபோக்கு, தேவை யற்ற திரைப்படங்கள் பார்த்தல் போன்றவைகளை நீக்கிட்டோம்னா ஒவ் வொரு மாணவனுக்கும் ஏராளமாக நேரம் கிடைக்கும். நம்மாலே எதுவும் முடியும் என்கிற உறுதியோடு இளைய தலைமுறை எழுந்து நின்னா, வானம் தொட்டுவிடும் தூரம்தான்!''

''உன்னுடைய இதய ஆசையை இளைய தலைமுறை நிச்சயம் நிறை வேத்துவாங்க,'' என்று கூறியபடி பேட்டியை முடித்தோம்.

உள்ளிருந்து வந்த பேரளம் புகழ் மதி அவர்கள், ''புகழொளி பெற்ற பரிசு களைப் பார்க்க வேண்டாமா; அறை யினுள் வந்து பாருங்கள்'' என அழைத்தார்.

அறைக்குள் நுழைந்தோம்... அடே யப்பா... மலைத்துப் போய்விட் டோம்...! ஏராளமான பரிசுகள்... எல். கே. ஜி. யிலிருந்து ஐந்தாவது வரை பெற்ற பிளாஸ்டிக், எவர்சில் வர் பாத்திரங்கள்; அதன் பிறகு பெற்ற கடல் போன்ற புத்தகங்கள்; பெற்ற பட்டங்கள்; கோப்பைகள், கேடயங்கள், புகழொளி பற்றிப் பத்திரி கைகளில் வந்த கட்டுரைகள் சான்றி தழ்கள், ஓ... மலைக்கோயிலில் லட்ச தீப அலங்காரம் போல் அனைத்துப் பரிசுகளும் ஜெகஜ்ஜோதியாய் ஜொலித்தன! அவைகளின் மத்தியில் புகழொளியை அமர வைத்து ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டோம். பெற்றோர்களோடு புகழொளியை ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டோம்.


பேரளம் புகழ்மதி அன்புடன் அளித்த விருந்தினைப் பிரியமுடன் உண்டு விட்டுச் சென்னைக்குக் கிளம்பி னோம். 'ஓ, இளையபாரதமே! கவலைப் படாதே, இதோ ஒரு நம்பிக்கை நட்சத் திரம் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. இதேபோல்பலநட்சத்திரங்கள் தோன் றும்; மேன்மேலும் உன் புகழ் ஓங்கும்.'


— கோகுலம் நிருபர்கள்.


சிந்து
சிரிப்புகள்








அந்தக் காலத்தில் ராமர், லட்சுமணர் வில்லிலிருந்து அனுப்புற அம்புகள் எதிரிகள் பிராணனை வாங்கிட்டு அவர்களிடமே திரும்பி வந்திடுமாமே!
இதென்ன அதிசயம்! எங்க அத்திம்பேர் அனுப்புற கதைகள், ஆசிரியர்கள் பிராணனை வாங்கிட்டு அவரிடமே திரும்பி வந்திடுமே!
மாலா-





சந்திரஹாஸனும் சந்திரஜோதியும்
கதை: ஆனந்தி
படம்:
வங்க தேச அரசருக்கு ஏழு மனைவியர் இருந்தும் குழந்தை இல்லை.....
யாகங்கள் செய்தும், விரதங்கள் இருந்தும் பயனில்லை... வாரிசு இல்லை எனில் நாட்டின் எதிர்காலம் என்னவது?
ஒரு நாள் மாலை... குளக்கரையில்......
நான்கு அழகிகளில், அதோ அந்தப் பேரழகி யார்?
அவர்கள் பேசுவதைக் கேட்டார் மன்னர்...
நான் மந்திரி குமாரி; என் துணிமணிகள் என்றும் நைந்து போகாது!
நான் வணிகன் மகள்; நான் சமைக்கும் போது சாம்பல் விழாது!
நான் புரோகிதர் மகள்; நான் சமைத்த பாத்திரத்தில் உணவு குறையவே செய்யாது!
ஆச்சர்யம் தான்!
நான்காவது பெண் பேசாமல் கரை ஏறினாள்...
ஒன்றும் பேசாமல் போகிறாயே!
பேரழகி என்ற கர்வம்!



மற்றுமூவரும் கேலி செய்தனர்...
ஒரு முட்டை விற்பவளுக்குக் கர்வம் ஒருகேடா?
ஏழைப் பெண் ஏளனத்தையும் பொருட்படுத்தவில்லை....
நான் வரட்டி விற்பவளின் மகள்தான்; ஆனால் எனக்கு அதிசயமான இரட்டைக் குழந்தைகள் பிறக்கும் என்று ஒரு முனிவர் வரம் கொடுத்திருக்கிறார்!
மறைவிடத்திலிருந்து அரசன் வெளிப்பட்டு...
நான்கு அழகிகளில் பேரழகியான பெண்ணே, உன் பெயர் என்ன?
ரூபவதி!
உன்னை என் மனைவியாக அடைய ஆசைப்படுகிறேன். முனிவரின் வரம் பலிக்கட்டும்!
என் தாயாரைக் கேளுங்கள்....
ரூபவதியின் தாய் மகிழ்ச்சியோடு சம்மதிக்க விவாகம் பிரமாதமாக நடந்தது....
கண்ணே! முனிவர் அளித்த வரம் என்ன?
ஆண்குழந்தை நெற்றியில் பிறைச் சந்திரன் அடையாளம் இருக்கும்; பெண்குழந்தை சந்திரகாந்தியுடன் ஒளிரும்!




ஓராண்டு சென்றது. ரூபவதி கர்ப்பிணி யானாள்...
அன்பே! மற்ற ராணிகள் உன்மீது பொறாமை கொண்டிருக்கின்றனர். நான் தலைநகரில் இல்லாத சமயம் உனக்குக் குழந்தை பிறந்தால் ஏதேனும் கெடுதல் நேரும்.
..நான் கலிங்க நாடு போகவேண்டியிருக்கிறது. இந்தா மணி. உன் பேறுகாலத்தின் போது மணி அடித்தால் உடனே வருவேன்...
சரி.
மன்னர் சென்ற பிறகு மற்ற ராணிகள்...
அழகான மணி; ஓசை இனிமையாக இருக்கும்.
அடித்துப் பார்க்கலாமா?
அந்த மணியைத் தொடாதீர்கள்! அதன் ஒலி எழுந்தால் அரசர் உடனே இங்கு தோன்றுவார்!
பொய்! பொய்! நிரூபித்துக் காட்டு!
இதர ராணிகள் வற்புறுத்த, ரூபவதி மணி அடித்து விட்டாள்... அடுத்த கணம்....
எதற்கு என்னை அழைத்தாய்..?
மன்னிக்க வேண்டும்; நீங்கள் சொன்னபடி நடக்குமா என்று சோதித்துப் பார்த்தேன்!


போனால் போகட்டும்; இன்னொரு தடவை இப்படிச் செய்யாதே! ஆபத்து என்றால் மட்டுமே மணி அடிக்க வேண்டும்!
சில தினங்கள் சென்றன... ரூபவதி கணவனைப் பிரிந்திருக்க முடியாமல் ஏங்கி மணி அடிக்க....
இனி நீ மணி அடித்தால் வரவே மாட்டேன், போ!
ஆணும் பெண்ணுமாக ரூபவதிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன...
அட! ஆண் மகன் நெற்றியில் பிறைச் சந்திரன் அடையாளம்! பெண் குழந்தை சந்திரன் போல் ஒளிர்கிறது!
ரூபவதியின் அந்தரங்கத் தோழி கவலைப்பட்டாள்....
பொறாமை கொண்ட மற்ற ராணிகளால் இந்தக் குழந்தைகளுக்கு அபாயம் நேரக் கூடும்!
அரசரைக் கோபப் படுத்தி விட்டேன்; மணி அடித்தாலும் உதவிக்கு வர மாட்டாரே!


அவர்கள் பயந்தது போலவே நடந்தது. ரூபவதி அயர்ந்து தூங்குகையில்...
உம்... இது தான் சமயம்... குழந்தைகளைக் கடத்திக்கொண்டு போவோம்!
ரூபவதியின் அந்த ராங்கித் தோழியை இன்றிரவு பாம்பு கடித்து விடும்!
காலையில் கண் விழித்த ரூபவதி, தன் தோழி விஷப் பாம்பு கடித்து இறந்திருக்கக் கண்டாள்...... மேலும்...
ஐயோ! என் குழந்தைகளைக் காணலியே!
ரூபவதி துயருடன் குழந்தைகளைத் தேடி...
காடு, நாடெல்லாம் அலைந்தேன்; எங்கும் அகப் படவில்லையே...
ரூபவதியின் குழந்தைகளைத் திருடியவர்கள் அவற்றை ஒரு பெரிய பச்சைப் பானையில் வைத்து...
வைக்கோல் போட்டிருக்கிறது... பானைகளைச் சுடும் இடத்தில் வைப்போம்... செத்து விடும்!
குயவன் நெருப்பு வைக்க வந்தான்... ஆனால்...
இதென்ன, பானையிலிருந்து ஒளி வீசுகிறது?....
குயவன் பந்தத்தை வீசி விட்டு பானையை நெருங்க...
அட! சந்திரகாந்தி இதனிடமிருந்து தான் புறப்பட்டிருக்கிறது! தெய்வம் எனக்குத் தந்த அழகான குழந்தைகள்!


கலிங்கத்திலிருந்து திரும்பிய அரசன் ராணிகளிடம்...
ரூபவதி எங்கே?
அந்த சூனியக்காரிக்கு இரண்டு பூனைக்குட்டிகள் தான் பிறந்தன! பயந்து ஓடி விட்டாள்!
குயவனும் மனைவியும் தாங்கள் வணங்கி வந்த குருவிடம் குழந்தைகளைக் கொண்டு சென்று...
பெயர் சூட்டுங்கள்!
சந்திரஹாசன்; சந்திர ஜோதி!
இருவரும் வளர்ந்து பெரியவரிடம் கல்வி கற்றனர்...
சந்திரஹாஸா! நீ நாட்டாளப் பிறந்தவன்... உன் நெற்றியில் பிறை தெரியாத மாதிரி முண்டாசு கட்டிக் கொள்!
மேலும் பன்னிரெண்டு ஆண்டுகள் சென்றன...
குருவே! எங்கள் வளர்ப்புத்தாய் தந்தையர் இறந்துவிட்டனர். நாங்கள் தலைநகர் சென்று பிழைப்புத் தேடுகிறோம்.
உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும்!


தக்ஷல நகரில்...
அட, என்ன அழகு! என்ன கம்பீரம்!
ராஜகளை!
ரத்தின வியாபாரி ஒருவர்...
யாரப்பா நீங்க?
பிழைப்புத்தேடி வந்தோம், ஐயா!
ரத்தினவியாபாரி மகிழ்ச்சியோடு அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துப்போனார்... சில காலம் சென்றது...
பேஷ்! சந்திரஜோதி! பிரமாதமா நடனமாடுகிறாயே! இந்தா உனக்கு யாழ் பரிசு!
சந்திரஹாஸா! உன் குதிரை ஓட்டும் திறனுக்குப் பரிசு! பக்ஷிராஜா என்ற இந்தக் குதிரை!
பக்ஷிராஜாவில் ஏறி சந்திரஹாஸன் வேட்டையாடச் சென்றான்... அப்போது அரசனும் வேட்டைக்கு வர....
யார் இந்த வீர வாலிபன்?
சந்திரஹாஸன் அம்பு எய்த வேகத்தில் தலைப்பாகை அவிழ...
ஆ! நெற்றியில் பிறை!


...சந்திரஹாஸன் அவசரமாக அவ்விடம் விட்டு அகன்றான்.
ரூபவதி தனக்கு இப்படி ஒரு பிள்ளைவரம் இருப்பதாகக் கூறினாளே... இளைஞனே, நில்!....
அரண்மனை திரும்பிய மன்னன்....
ரூபவதி என்ன ஆனாள்? என் குழந்தைகள் எங்கே? பொய் சொன்னால் தொலைத்து விடுவேன்!
ராணிகள் பயந்து நடுங்கி...
குழந்தைகளைத் தோட்டக்காரன் கொண்டு போனான். என்ன ஆனதோ!
ரூபவதி குழந்தைகளைத் தேடிப்போனாள். ..திரும்பி வரவில்லை...
ஒரு ராணி முன் வந்து...
மன்னர் உத்தரவளித்தால் நான் போய் அவர்களைத் தேடிப்பிடித்து அழைத்து வருகிறேன்....
உடனே போ!
பொல்லாத ராணி கிளம்பிச் சென்றாள்...
மன்னர் தன் குழந்தைகளை எங்கேயோ பார்த்திருக்கிறார். அதனால்தான் இப்போது திடீர் சந்தேகம் அவருக்கு!
இரட்டையரை எப்படியாவது கண்டு பிடித்துத் தந்திரமாகத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும்!



குரூர ராணி தெருவில் செல்லும் போது....
ஆகா! ராஜகளை! இவனைப் பின் தொடர்வோம்....
இளைஞன் புகுந்த வீட்டின் கதவை ராணி தட்ட...
யாரு?
நான் வெளியூர். என் தங்கையின் இரட்டைக் குழந்தைகளை வெகு காலமாகத் தேடுகிறேன்... பிள்ளையின் நெற்றியில் பிறை இருக்கும்...
ரத்ன வியாபாரி குரூர ராணியை வரவேற்றான்...
உள்ளே வாருங்கள். நீங்கள் தேடும் குழந்தைகள் இங்கே தான் இருக்கிறார்கள்...
என் கண்களா! உங்களை மறுபடி சந்தித்தது என் பாக்கியம்!
சரியாக அடையாளம் சொன்னாள் உங்கள் பெரியம்மா.
சந்திரஜோதிக்கு ஒரு முத்து மாலை பரிசளித்தாள் ராணி...
ரொம்ப அழகா யிருக்கே...
இது ஒரு அழகா? உன் அழகுக்கு அழகு செய்யக் கூடியது கேதகி புஷ்பம் தான்!



கேதகி புஷ்பமா? அது எங்கே கிடைக்கும்?
கொடூர ராணி விடை பெற்றாள்....
தந்திரம் செய்தாகி விட்டது. சந்திரஹாஸன் ராட்சதர்களிடம் சிக்கி மடிவான்! ஹ, ஹா!
காடு, மலை, கடல்களைக் கடந்து, ஏழு நூறு அரக்கர்களை வென்று அற்புதத்தீவிலிருந்து கொண்டு வர, வேண்டும்!
ராணி சென்ற பின்...
என்னம்மா வருத்தமாய் இருக்கிறாய்....?
ஹும், எனக்கு எங்கே கிடைக்கப் போகிறது, கேதகி மலர்?
நான் கொண்டு வருகிறேன்!
பக்ஷிராஜா மீது அமர்ந்து சந்திரஹாஸன், காடு மலைகளைக் கடந்தான்....
இன்னும் எவ்வளவு தூரம் போகணுமோ....
ஒரு கள்ளிவன எல்லையில்...
யாருடா, அவன்? நில்!


சந்திரஹாஸன் தங்கப் பாதுகையை மரியாதையாகக் கழற்றி....
அத்தையம்மா, சந்திரஹாஸன் வந்திருக்கிறேன்... கேதகி மலர்களைத் தேடி.....
அத்தையம்மா என்று அன்புடன் அழைத்ததால் வழி விடுகிறேன்... நான் சொல்கிறபடி செய்...
அரக்கி சொன்னபடியே நடந்து கொண்டான் சந்திரஹாஸன்...
கள்ளிவனமே! சந்திரஹாஸன் வந்திருக்கிறேன். வழிவிடு! இல்லாவிட்டால் கொளுத்தி விடுவேன்!
கள்ளி வனம் மத்தியில் பாதை உருவாக...
பக்ஷிராஜா! பாய்ந்து போ!
கள்ளி வனத்தின் எல்லையில்....
அலை கடலே! சந்திரஹாஸன் வந்திருக்கிறேன், வழிவிடு! இல்லாவிட்டால் வற்றச் செய்து விடுவேன்!


அலைகடல் இடையே ஒரு பாதை உருவாக...
பக்ஷிராஜா! உம்... விரைந்து போ!
காடு அடர்ந்த ஒரு தீவின் எல்லையை அடைந்தான்...
இந்தக்காட்டின் மத்தியில் அரண்மனை இருக்கிறது. அத்தையம்மா சொன்னாளே! பக்ஷிராஜா! பறந்து போ!
பக்ஷிராஜா அரண்மனை மீதாக வட்டமிட்டது...
பக்ஷிராஜா! அரண்மனை நிலாமுற்றத்தில் இறங்கு!
நிலாமுற்றத்திலிருந்து படிகளின் வழியாகக் கண்ணாடி மாளிகைக்குள் இறங்கினான்...
பக்ஷிராஜா! இங்கேயே இரு.
கண்ணாடி மாளிகைக்குள்...
அட! இங்கே ஒரு பெண் தூங்குகிறாளே!


தூங்கும் பெண்ணுக்கு அருகே சென்றான் சந்திரஹாஸன்...
அழகியின் தலைமாட்டில் அற்புத மலர்!
மலரைக் கையிலெடுத்துப்பார்த்த சந்திரஹாஸன்...
ஆகா என்ன மணம்! என்ன அழகு... ஒருவேளை இதுதான் கேதகி மலரோ?
சகோதரியின் நினைவு வர, அந்த யோசனையில் மலரைக் கால்மாட்டில் மாற்றி வைத்தான்... உடனே....
நீங்கள் யார்?
அட, விழித்துக்கொண்டாயா? நான் சந்திரஹாஸன்; நீ...?
கலிங்க நாட்டரசன் மகள் புஷ்பவதி...
... ஓர் அரக்கி என்னைக் காவல் காக்கிறாள். அவள் வெளியே போகும் போது கேதகி மலரை என் தலைமாட்டில் வைப்பாள்; தூங்கி விடுவேன்....


திரும்பி வந்து மலரைக் கால் மாட்டில் வைப்பாள், விழித்துக் கொள்வேன்...
அப்படியா! சரி, உன்னை விடுவித்து அழைத்துப் போகிறேன், வருகிறாயா?
இந்த அரண்மனையைச் சுற்றியுள்ள காட்டில் ஏழு நூறு அரக்கர்கள் இருக்கிறார்கள்! .... தப்பவே முடியாது...!
சந்திரஹாஸன் கேதகி மலரை எடுத்துக் கொண்டான்.
... பக்ஷிராஜா இருக்கக் கவலை ஏன்? வா, போகலாம். ...
பக்ஷிராஜாவா?
இருவரும் நிலா முற்றத்தில் குதிரை மீது ஏறி...
இந்தக் குதிரைதான் பக்ஷிராஜா!
ஓ!
வானில் பறந்து சென்றனர்...


சீக்கிரமே தன் நாட்டையும் வீட்டையும் அடைந்தான் சந்திரஹாஸன்... நடந்தவற்றைக் கூறினான்.
சந்திரஜோதி! இதோ, நீ கேட்ட கேதகி மலர்...
அண்ணா! மலரை மட்டும்தானா கொண்டு வந்தாய்...? புஷ்பவதியும் கிடைத்திருக்கிறாளே!
நாட்கள் சென்றன. அரசர் தான் பார்த்த இளைஞனை மறக்கவில்லை...
அந்த வாலிபன் மீண்டும் கண்ணில் படுவானா என்று பார்க்கவே வேட்டையாட அடிக்கடி வருகிறேன்...
ஒருநாள்...
அதோ அந்த இளைஞன்... வாலிபனே! நில்! நில்!
மன்னவா! வணங்குகிறேன்...
அப்பனே! நீ எங்கு வசிக்கிறாய்? உனக்கு ஒரு தங்கை இருக்கிறாளா?
அரசரை வீட்டுக்கு அழைத்துப் போனான் சந்திரஹாஸன்...
ரத்னவியாபாரி தனஞ்செயன்... என் வளர்ப்புத் தந்தை; இது என் தங்கை...


சந்திரஹாஸா! சந்திரஜோதி! நீங்கள் இருவரும் என் குழந்தைகள். ரூபவதி சொன்ன அடையாளங்கள் உங்களிடம் பொருந்தியிருக்கின்றன...
அப்பா! இவள் புஷ்பவதி. சந்திரஹாஸனின் காதலி. கலிங்கத்து இளவரசி...
சீக்கிரமே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்... மகிழ்ச்சிதானே?
ஆனால்... ஆனால்... ரூபவதி என்ன ஆனாள் என்றுதான் தெரியவில்லை...
அரசே! எங்கள் நாட்டு அரண்மனையில் செவிலித் தாயாக இருந்து என்னை வளர்த்தவள் பெயர் ரூபவதி! ஒருவேளை... ஆம்! அவள் தன் இரட்டைக் குழந்தைகள் பற்றிக் கூறக் கேட்டிருக்கிறேன்!
பக்ஷிராஜா மீது ஏறிச்சென்ற சந்திரஹாஸன், தாயார் ரூபவதியை அழைத்து வந்தான்... புஷ்பவதியின் சகோதரனும் உடன் வர...
கெட்டிமேளம்! கெட்டிமேளம்!

கடவுள் துணைபுரிவார்!

லூர்து எஸ். ராஜ்



பாபுவின் தந்தை பரம ஏழை. அவரது வருமானத்தால் குடும்பத்தை நடத்துவதே மிகவும் சிரமமாக இருந்தது. எனவே, எட்டாவது வகுப்போடு பாபுவின் பள்ளிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி இடப்பட்டது.

அவ்வூரின் பெரிய துணிக்கடைகளில் 'சீமாட்டி துணியகம்' என்பது ஒன்று. அக்கடைக்குச் சிப்பந்திப் பையன் ஒருவன் தேவைப்பட்டான். இதை அறிந்த பாபுவின் தந்தை, அவனை அக்கடைக்கு அழைத்து வந்தார். பையனைப் பார்த்ததும் முதலாளிக்குப் பிடித்து விட்டது. மாதம் ரூ. 150 சம்பளம் தருவதாக ஒப்புக்கொண்டு, முதலாளி அவனைக் கடையில் சேர்த்துக் கொண்டார்.

கடையில் முதலாளி சுகுமாரன், அவர் தம்பி சுந்தரம் ஆகிய இருவரும் வியாபாரத்தைக் கவனித்து வந்தனர். அவர்களுக்குத் துணையாக, கலியமூர்த்தி என்ற இளைஞன் சுமார் ஐந்து ஆண்டுகளாகச் சிப்பந்தியாகப் பணிபுரிகிறான். தற்போது பாபுவும் சேர்க்கப்பட்டிருக்கிறான்.

ஒவ்வொரு வகைத் துணியிலும் விலைகள் சில எழுத்துக்களால் குறிக்கப்பட்டிருக்கும். அவ்வெழுத்துகள் குறிக்கும் எண்கள் முதலாளிக்கும் அவர் தம்பிக்கும்தான் தெரியும். அவர்கள் இருவரும் அப் பரிபாஷையில் அடிக்கடி உரையாடுவர். அப்போதெல்லாம் கலியமூர்த்தி மிரளமிரள விழிப்பான். ஆனால், பாபுவோ மிகவும் கவனமாக அவர்கள் பேச்சைக் கவனித்து வந்தான்.

ஒருநாள் சுந்தரத்துக்கு உடல்நலமில்லை; அவர் கடைக்கு வரவில்லை. சுகுமாரன் மட்டும்தான் வந்திருந்தார்.

அவரிடம் சாவியை வாங்கிப் பாபு கடையைத் திறந்தான்; கண்ணாடி அலமாரிகளை விரைவாகச் சுத்தம் செய்துவிட்டு, கடையைக் கூட்டிப் பெருக்கினான். கடையின் முற்றத்தில் நீர் தெளித்தான்.

வழக்கமாக, சுந்தரம் செய்வதைப் போல இன்று பாபு பூசைக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் எடுத்து முதலாளியிடம் கொடுத்தான்.

சாமி படங்களுக்கு மாலையிடப்பட்டது. சூடம், சாம்பிராணி கொளுத்தப்பட்டன. பின்னர் நெற்றியில் திருநீற்றைப் பூசிக் கொண்டு முதலாளி கல்லாப் பெட்டியின் அருகில் அமர்ந்தார்.

தீபாவளிக்கு இன்னும் இரு வாரங்களே இருந்தன. எனவே, வியாபாரம் சூடு பிடிக்கத் தொடங்கி இருந்தது. வாடிக்கையாளர்களுக்கு வண்ண வண்ண டிசைன் துணிகளைக் காட்டி அவர்களைக் கவர்வதில் சிப்பந்திகள் கவனமாயிருந்தனர்.

துணிகளின் விலையைக் கூறுவதிலும் பணத்தை வாங்கிக் கல்லாப் பெட்டியில் போடுவதிலும் முதலாளி கவனமாயிருந்தார். விலையைக் கூட்டிச் சொல்லி, அதில் சிறிதளவு தள்ளுபடியைக் காட்டி மக்களைக் கவர்ந்து இழுப்பதுதானே வியாபார தந்திரம்! அதில் முதலாளி கைதேர்ந்து விளங்கினார்.

கிராமத்துப் பணக்காரர் ஒருவர் தீபாவளிக்குத் துணிகள் வாங்க மனைவியுடன் வந்தார். பாபு அவர்களை வரவேற்று அமரச் செய்தான். ஆண்டுதோறும் ரூ2000 வரை தீபாவளிக்குத்

துணி வாங்குவது அவர் வழக்கம்.

அவர்களுக்கு முன்னால் காஞ்சிபுரம், ஆரணி, தர்மாவரம் பட்டுச் சேலைகள் மலைபோல் குவிக்கப்பட்டன. அவர் மனைவி அவற்றில் இரு புடவைகளைத் தேர்ந்தெடுத்தாள்.


"இப்புடவையின் விலை என்ன?" என்று அப் பெரியவர் கேட்டார். புடவையை வாங்கிப் பார்த்த முதலாளி "ரூபாய் 550!" என்றார். அப் பெரியவரோ, "அதிகமாயிருக்குதே! விலையில் கொஞ்சம் தள்ளுபடி செய்து சகாயமாகத் தாருங்கள்" என்று கேட்டார்.

அப்புடவையை மீண்டும் கையில் வாங்கிப் பார்த்த முதலாளி ஞாபக மறதியாக பாபுவிடம் "'வுனா துனா' தள்ளிக் கொடுக்கலாம். அதற்கு மேல் போனால் கட்டாது" என்று சொன்னார்.

எடுத்துக் கொண்டார். வழக்கப்படி ரூ2000க்கு துணிகள் வாங்கிச் சென்றார்.

சுகுமாரன் பாபுவை நன்றாகக் கவனித்தார்; துணிகளின் விலையைக் குறித்து, தன் தம்பியுடன் பேசும் பாஷையிலேயே இன்னும் சில துணி வகைகளின் விலைகளையும் தள்ளுபடிகளையும் கூறினார். பாபு உடனே அவற்றைக் கண்டுபிடித்தான்; அவ்வாறே சிறிதும் பிசகாமல் வியாபாரம் செய்தான். அப் பரிபாஷையை 10 நாட்களில் பாபு நன்றாகக் கற்றுக் கொண்டான் என்பதை முதலாளி அறிந்து கொண்டார்.

அன்று இரவு, அவர் கலிய மூர்த்தியை முன்னதாகவே வீட்டுக்கு அனுப்பி விட்டார். கடையைப் பூட்டி மூடும் சமயம்; முதலாளியும் பாபுவும் மட்டுமே அங்கிருந்தனர்.



உடனே பாபுவும், "ஐயா, பட்டுப் புடவையிலே எங்களுக்கு அதிக லாபம் கிடைப்பது இல்லை. உங்களுக்காக வேண்டுமானால் 35 ரூபாயைத் தள்ளுபடி செய்து 515 ரூபாய்க்குத் தரலாம்" என்றான்.

பாபுவின் வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்த பெரியவர் அப்புடவையை

"பாபு, உன்னிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும். எனக்கும் என் தம்பிக்கும் மட்டுமே தெரிந்த பரிபாஷை உனக்கு எப்படி தெரிந்தது?" என்று கேட்டார்.

"ஐயா, நீங்களும் உங்கள் தம்பியும் பேசுவதை நான் மிகவும் கூர்ந்து கவனித்து வந்தேன். அதனால் தெரிந்து

கொண்டேன்" என்றான் பாபு.

"கலிய மூர்த்தி 5 ஆண்டுகளாக இக் கடையில் இருக்கிறான்; அவனால் அதைக் கற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் நீ 10 தினங்களுக்குள் இதைக் கற்றுக் கொண்டாயே! சரி, அதன் முழு அமைப்பையும் நீ கூறு பார்க்கலாம்" என்றார்.


"ஐயா, 'க' என்றால் 1, 'ட' என்றால் 2, 'வு' என்றால் 3, 'ள்' என்றால் 4 — இப்படியே 'கடவுள் துணை புரிவார்' என்ற 10 எழுத்துக்களும் எண்களைக் குறிக்கின்றன" என்றான் பாபு.

இவ்வளவு புத்திக் கூர்மையும் படிப்பில் கவனமும் கொண்ட பாபுவின் படிப்பு தடைபட்டதை எண்ணி முதலாளி வருந்தினார். "பாபு, நீ உனது பள்ளிப் படிப்பை மீண்டும் தொடர்வதானால் 10வது வகுப்பு வரை படிப்பதற்கு நானே பொருளுதவி செய்கிறேன்" என்று கூறினார். பாபு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான்.

"நீ நாள்தோறும் மாலை 6 மணிக்கு என் கடைக்கு வந்துவிட வேண்டும். நான் சிட்டைப் புத்தகத்தில் எழுதி வைக்கும் கணக்குகளைக் குறிப்பிலும், குறிப்பிலிருந்து பேரேட்டிலும் எழுதி விட்டு வீட்டுக்குச் சென்று விடலாம். அவ்வாறு செய்து வந்தால் மாதந்தோறும் இதே 150 ரூபாய் சம்பளம் தந்து விடுகிறேன். அவற்றை எவ்வாறு எழுத வேண்டுமென்பதையும் நானே உனக்குக் கற்றுத் தருகிறேன்", என்றார்.

பாபு தனது நன்றியையும் சம்மதத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தான். அவன் இனி நாள்தோறும் பள்ளிக்கூடத்துக்கும் சென்று படிக்கலாம்; கடைக்கும் வந்து கணக்குகளை எழுதி மாதம் ரூ 150 சம்பாதிக்கலாம். பாபுவுக்கு இரட்டை மகிழ்ச்சி! கடவுள் துணை புரிந்து விட்டார்!

ஓவியராகலாம்



பாதுகாவல்

வி. ர. வசந்தன்

இரயில் பிளாட்பாரத்தை விட்டு மெதுவாக நகர ஆரம்பித்ததும், அதன் வேகத்திற்கேற்ப அதனுடன் நடக்க ஆரம்பித்தான் கார்த்திக். இரயிலின் வேகம் அதிகரிக்க, அதிகரிக்க அவன் நடை வேகமும் அதிகரித்தது.

உள்ளே இருந்த அவனுடைய நண்பர்களைப் பார்த்துப் பெருமையுடன் கையை அசைத்த வண்ணம் நடந்தவன் இரயிலின் வேகத்துக்கு மேலும் ஈடு கொடுக்க முடியாது என்று தெரிந்ததும், கம்பியைப் பிடித்துக் கொண்டு குதித்து இரயிலின் உள்ளே தாவினான்.


நண்பர்களின் உற்சாக ஆர்ப்பரிப்பைப் பாராட்டுதலாக ஏற்றுக் கொண்ட கார்த்திக், படியிலேயே உட்கார்ந்து கொண்டு, இருபுறக் கம்பிகளையும் பிடித்துக் கொண்டான். இரயில் முழுவேகத்துடன் ஓடிக் கொண்டிருந்தது.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பெரியவர் ஒருவர், எழுந்து அவனிடம் வந்தார். ''தம்பி உள்ளேதான், நிறைய இடம் இருக்கே, எதுக்குத் தேவையில்லாம படிக்கட்டிலே உட்கார்ந்திருக்கே? எழுந்து உள்ளே வாப்பா'' என்றார்.

திரும்பி அவரை அலட்சியமாகப் பார்த்த கார்த்திக், ''சும்மா ஒரு ஜாலிக்குத்தான் தாத்தா. இங்கு உட்கார்ந்தால் நல்லா காற்று வருது'' என்று சிரித்தான்.

''காற்று வாங்க நல்ல இடம் பார்த்தே தம்பி. கை தவறினால் என்ன வாகும்னு கொஞ்சம் யோசிச்சுப் பாரு. படியிலே பயணம் செய்யக் கூடாதுன்னு ஒரு விதியே இருக்கு'' என்ற பெரியவர் இரயிலினுள் எழுதி இருந்த எச்சரிக்கை வாசகத்தை அவனிடம் காட்டினார்.

'கதவைத் திறந்து கொண்டு நிற்ப



தும் படிக்கட்டில் உட்கார்ந்து பயணம் செய்வதும் கூடாதென்று பயணிகள் எச்சரிக்கப்படுகிறார்கள். மீறுபவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்' என்று எழுதி இருந்ததை, வார்த்தை வார்த்தையாக நிறுத்திப் படித்த கார்த்திக் பெரியவரைப் பார்த்து, ''தாத்தா, நம்ம தலைவிதியை இந்த வெறும் விதிகள்தான் நிர்ணயிக்கிறதாக்கும்... கீழே விழணும்னு எனக்குத் தலைவிதி இருந்தால் விழுந்துட்டுப் போறேன்'' என்றான் அலட்சியமாக.

அவனது பதில் அந்தப் பெரியவரை வருத்தத்திற்கு உள்ளாக்கியது. ''தம்பி, சட்டம் விதிமுறைகள் எல்லாம் நம்முடைய பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்டவை. இல்லையா? அதை நாமே மீறுவது விவேகம் இல்லாத காரியம்... பேசாமே எழுந்து உள்ளே வா'' என்றார்.

கார்த்திக் அதைப் பொருட்படுத்தாமல், ''இப்படிப் பிரயாணம் செய்து எனக்கு நல்ல பழக்கம் உண்டு. கீழே எல்லாம் விழுந்துவிட மாட்டேன் தாத்தா. நீங்க பயப்பட வேணும்'' என்றான்.

மேலும் அவனிடம் பேசுவதில் பயனில்லை என்று நினைத்த பெரியவர், தமது இருக்கையில் சென்று அமர்ந்தார்.

அடுத்த நிலையத்தில் இரயில் நின்ற போது கார்த்திக்கும் அவனது நண்பர்களும் இறங்கிக் கொண்டனர்.

எல்லோரும் நிலையத்தை விட்டு வெளியே வருவதற்கு வாசலை நோக்கி நடக்கத் தொடங்கியதும், கார்த்திக் அவர்களைத் தடுத்தபடி, ''என்னடா, அவ்வளவு தூரம் போய்ச் சுத்திக்கிட்டு வரணுமாக்கும், இதோ இப்படியே கம்பி வழியாக ஏறிக் குதிச்சாப் பக்கமா போயிடலாமே?'' என்றான்.

அவன் நண்பனான ஆனந்த், ''அதெல்லாம் வேண்டாம்டா. யாராவது பார்த்துட்டாங்கன்னா நல்லா இருக்காது'' என்று மறுக்க,

கார்த்திக், ''இவன் யாருடா, ரயிலிலே வந்த தாத்தாவுக்கு மேலே பயப்படறான். இதோ இருக்கிற பள்ளிக்கூடத்திற்குப் போக அவ்வளவு தூரம் சுத்திக்கிட்டு வரணுமா?'' என்றவாறு தான் முதலில் சென்று கம்பி வேலியில் ஏறி வெளியே குதித்தான். அவன் செய்கையால் தைரியம் வரப்பெற்ற நண்பர்கள் சிலரும் அவனைப் போலவே கம்பி வேலியைத் தாண்டி வெளியே குதித்தனர்.

''எது சுலபமோ அதைச் செய்ய வேண்டியதுதானே! எடுத்ததுக்கெல்லாம் சட்டமும் திட்டமும் பார்த்துட்டு இருந்தா காரியம் ஆகாது'' என்று வீரப்பாக முழங்கியவாறு தங்கள் பள்ளியை நோக்கி நண்பர்களுடன் நடந்தான் கார்த்திக்.



பன்னிரண்டு

* இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் பன்னிரண்டு.
* தமிழ் வரலாற்றில் இடம் பெறும் ஆழ்வார்கள் பன்னிரண்டு.
* பாண்டவர்கள் வனவாசம் செய்த ஆண்டுகள் பன்னிரண்டு.
* தமிழ்மொழியில் உள்ள உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு.
* ஒரு டஜனில் உள்ள பொருள்களின் எண்ணிக்கை பன்னிரண்டு.
* காலத்தை அறிவிக்கும் மணிகள் பன்னிரண்டு.
* மேல்நிலைப் பள்ளியில் உள்ள வகுப்புகள் பன்னிரண்டு.

— அ. கலைச்செல்வன் (2462),
மதுரை — 18.



மாலையில் அவர்கள் பள்ளிக்கூடம் முடிந்து திரும்பி வரும்போது, இரயில் பாதை ஓரமாகப் புதிதாக முளைத்திருந்த குடிசைகளுக்கருகில் பெரும் கூட்டமும், சத்தமும் ஏற்பட்டிருப்பதைப் பார்த்தார்கள்.

என்ன விஷயம் என்று அறிந்து கொள்ளும் ஆவலில் கார்த்திக் தன் நண்பர்களுடன் அவ்விடத்தை நோக்கி விரைந்தான்.

அங்கு அந்தக் குடிசைகளில் இருந்த மனிதர்களும், ஊர் ஜனங்களும் கூடி இருந்தனர். அரசாங்கச் சீருடை அணிந்த ஊழியர் ஒருவர், "இதோ பாருங்க. அரசாங்கத்துக்குச் சொந்தமான இடத்திலே உங்க விருப்பப்படி குடிசைகளை அமைக்கிறது சட்டப்படி தப்பு. அதிலும் குறிப்பா, ரயில் பாதை ஓரமா குடிசை போடறதை எங்க விதிமுறைகள் அனுமதிக்கவில்லை. இதை நாங்க முதலிலேயே சொன்னோம். நீங்க கேட்கல்லே. இப்போ உடனடியா உங்க குடிசைகளை அகற்றும்படியா உத்தரவு வந்திருக்கு. அதனால் நீங்களாகவே இந்த இடத்தை விட்டுட்டுப் போயிடறது நல்லது" என்று கண்டிப்பான குரலில் கூறிக் கொண்டிருந்தார்.

அப்போது முரட்டுத் தோற்றமுடைய மனிதன் ஒருவன் முன்னே வந்து அவரைப் பார்த்து, "இது அரசாங்க நிலம்னு எங்களுக்குத் தெரியும். இங்கே குடிசை போடறது தப்புன்னும் தெரியும்... ஆனா போட்டாச்சு. இனி பிரிக்க முடியாது. என்ன பண்ணுவீங்க?" என்று அகம்பாவத்துடன் கேட்டான்.

அந்த ஊழியர் பொறுமையுடன், "என்ன பண்ணுவோம் என்கிறது வேறே... ஆனால் உங்களுக்கே பாதுகாப்பில்லாத இடத்திலே குடிசைகளைப் போட்டிருக்கீங்க. அதைப் புரிஞ்சுக்குங்க" என்றார்.

அதைக் கேட்டதும், "நாங்க இங்கே இருந்து குடிசைகளைப் பிரிக்க முடியாது. உங்களாலே என்ன செய்ய முடியுமோ, அதைச் செய்யுங்க" என்று கத்தினான் அந்த முரடன்.

"இதுதான் உங்க முடிவுன்னா சட்டப்படி என்ன செய்யணுமோ அதை நாங்களும் செய்ய வேண்டியதுதான்"

என்று கூறிவிட்டு அரசாங்க ஊழியர் திரும்பி நடந்தார்.

அவன் ஆணவச் சிரிப்புடன், ''பெரிய சட்டம், எங்களுக்குத் தெரியாத சட்டத்தைப் பேச வந்துட்டாரு'' என்று சொல்லியவாறு குடிசைக்குள் சென்றான். கூட்டமும் கலைந்து சென்றது.

அதன் பிறகு நான்கைந்து நாட்கள் சென்ற பிறகும் அந்தக் குடிசைகள் அங்கேயே இருந்தன.

கார்த்திக் தன் நண்பர்களிடம், ''என்னடா இது! சட்டம், நடவடிக்கை, அது, இதுன்னு அன்னிக்கு மிரட்டினாரே, இந்த மிரட்டலுக்கெல்லாம் அவங்க அசையற மாதிரி இல்லை பாரு... இது தாண்டா தைரியம்'' என்று கூறினான்.

அவன் கூறியதை மறுக்கும் முகமாக அவனுடைய நண்பன் ஆனந்த், ''என்ன கார்த்திக், அன்றைக்கு நீ படியிலே உட்கார்ந்து பிரயாணம் செய்ததை அந்தப் பெரியவர் தடுத்து எச்சரிக்கை செய்த போதும் இப்படித்தான் பேசினாய். இப்போதும் இப்படித்தான் பேசறே... சட்டம், விதிமுறைகளை மீறுவது ஒருவேளை அந்த நேரத்துக்குச் சாமர்த்தியமாகத் தெரியலாம். ஆனா, அதுக்குப் பின்னாலே நிச்சயமா ஆபத்து இருக்கு என்கிறதை நீ புரிஞ்சுக்கணும்'' என்றான்.

கார்த்திக் தன் நண்பனை வினோதமாகப் பார்த்தான். ''அதுக்கெல்லாம் கொஞ்சம் தைரியம் வேணும்டா'' என்று சிரித்தான்.

''இது தைரியமில்லடா, தான் தோன்றித்தனம்'' என்று கூறிய ஆனந்த் பேச்சை வேறு திசையில் திருப்பினான்.

இரண்டொரு நாட்களுக்குப் பின் ஒரு நாள் வழக்கம் போல் கார்த்திக்கும், நண்பர்களும் இரயிலிலிருந்து இறங்கி, தங்கள் பள்ளிக்கூடத்திற்குச் சென்று கொண்டிருக்கையில் அந்தக் குடிசைகள் இருந்த இடத்தில் மீண்டும் பெரும் கூட்டம் கூடியிருப்பதைக் கண்டார்கள்.


அங்கு ஒரே கூச்சலும், அழுகையும் கதறலுமாக இருந்ததைக் கண்டு அந்த இடத்தை நோக்கி ஓடினார்கள்.

அங்கு கண்ட காட்சி அவர்களைத் திகைப்படைய வைத்தது. அந்தக் குடிசைகள் எல்லாம் எரிந்து சாம்பலாகிக் கிடந்தன! அங்கிருந்தவர்களின் அழுகையும், புலம்பலும் நெஞ்சைப் பிழிவதாக இருந்தது.

அன்று அரசாங்க ஊழியரை எதிர்த்து ஆவேசமாகப் பேசிய அந்த முரட்டு மனிதன், தன் தலையில் அடித்துக் கொண்டு, ''எல்லாம் என் தலைவிதி. போயும், போயும் இங்கே வந்து என் குடிசையைப் போட்டேன் பாருங்க... இப்ப எல்லாம் போச்சே!'' என்று பரிதாபமாக அழுது புலம்பிக் கொண்டிருந்தான்.

கார்த்திக்கும், நண்பர்களும் என்ன நடந்தது என்று புரியாமல் அருகில் நின்று கொண்டிருந்த ஒரு மனிதரை விவரம் கேட்டார்கள்.

அவர், ''இங்கே குடிசை போடக் கூடாதுன்னு எவ்வளவோ தடுத்தும் கேட்காமே பலவந்தமா, குடிசைகளைப் போட்டாங்க. அது விதிகளுக்கு முரணானதுன்னு எத்தனையோ தடவை சொல்லியும் இவங்க கேட்கல்லே... சட்டப்படி நடவடிக்கை எடுக்குமுன்பு அவங்களா போயிடுவாங்கன்னு பொறுத்துப் பார்த்தும் பிரயோஜனமில்லை; பாவம், நேற்று ராத்திரி நடந்த தீ விபத்திலே அவன் பெண்சாதியும் ரெண்டு பிள்ளைகளும் சிக்கி இறந்து போயிட்டாங்க... அது மாதிரி இன்



அந்த டாக்டரை குழந்தைகள் டாக்டர்னு எப்படிச் சொல்றே?

குழந்தைகளோட ஓடிப் பிடித்து விளையாடி, தவழ்ந்து போய் ''நைசா'' ஊசி குத்திடறார்!

— குத்தாலம் ராஜா.

பழமொழிப் புதிர் —விடை

புதிர் — 33:

நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்.

புதிர் — 34:

கோல் ஆடக் குரங்கு ஆடும்.

னும் நிறையப் பேர் இறந்துட்டாங்க... விதியை நாமா மீறிக்கிட்டு, பிறகு தலைவிதியை நொந்தா என்ன லாபம்?" என்று இரக்கப்பட்டார்.


"எப்படிங்க இந்தத் தீ விபத்து நடந்துச்சு" என்று ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் கேட்டான் கார்த்திக்.

"அதோ பாரு தம்பி, இந்தக் குடிசைகளை ஒட்டி மேட்டிலே இரயில் பாதை இருக்கு. நேற்று ராத்திரி இப்படிப்போன ஒரு ரயில் இஞ்சினிலிருந்து விழுந்த நெருப்புக் கங்கு, வேகமா வீசின காற்றிலே பறந்து வந்து ஒரு குடிசை மேலே விழுந்திருக்கு. இது நல்ல வெயில் காலம் பாரு. அதோட காற்று வேறே வீசுதா, ஓலையிலே எளிதா தீப் பிடிச்சு எரிஞ்சிருக்கு; மற்ற குடிசைகளுக்கும் பரவி இருக்கு" என்று நடந்ததை விளக்கினார் அந்த மனிதர்.

கார்த்திக்கும், நண்பர்களும் அந்த மக்களுக்கு நேர்ந்த கதியை நினைத்து மனம் நொந்தவர்களாய்த் திரும்பி, தங்கள் பள்ளிக் கூடத்தை நோக்கி நடந்தனர்.


வழியில் கார்த்திக்கின் தோளைப் பற்றிய ஆனந்த், "என்ன கார்த்திக், சட்டம் என்கிறது நமக்கு நாமே ஏற்படுத்திய ஒரு பாதுகாவல்தான். அதைக் கடைப் பிடிக்கிறது நமக்குப் பெருமையே தவிர அவமானம் ஒண்ணும் இல்லைன்னு இப்பப் புரியுதா?" என்று கேட்டான்.

கார்த்திக் ஒன்றும் பேசவில்லை. படியில் பயணம் செய்கிற தனக்கும், விதிகளை மீறிக் குடிசை போட்ட அந்த முரட்டு மனிதனுக்கும் அதிக வித்தியாசம் இருப்பது போல் இப்போது அவனுக்குத் தோன்றவில்லை. அவன் மனம் தனது செயலுக்காக உண்மையிலேயே வருத்தத் தலைப்பட்டது.



தாத்தாவின் பொம்மை

அழகு பழனிச்சாமி



என் தாத்தா ஒரு பொம்மை வைத்திருந்தார். அந்தப் பொம்மையை ஒரு துணியில் சுற்றி, யார் கண்ணிலும் படாமல் பத்திரமாக, அவரது பெட்டிக்குள் வைத்திருந்தார்.

ஒரு தடவை, ''அது என்ன தாத்தா?'' என்று கேட்டேன். ''அது ஒரு பொம்மைடா. ஆனால் அதை யாருக்கும் காட்ட மாட்டேன்...'' என்று சொன்னார். ''ஏன்?'' என்று நான் கேட்டுவிட முடியாது. என் தாத்தா அவ்வளவு கோபக்காரர்!

''அது என்ன பொம்மை? தாத்தா, அதை ஏன் இவ்வளவு ரகசியமாய் வைத்துக் கொண்டிருக்கிறார்?' என்று எண்ணிக் கொள்வேன். இதுபற்றி என் அப்பா, அம்மாவிடம் கூடக் கேட்டிருக்கிறேன். அவர்கள் சொன்ன பதில் இதுதான்: ''அதைப் பற்றி ஒன்றும் தெரியாது. அதைப் பற்றி உனக்கு ஏன் கவலை?'' என்று கேட்டனர்.

நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன். என் முயற்சி பலிக்காமலேயே, நாட்கள் ஆண்டுகளாகிக் கொண்டிருந்தன. ஆனால், என் மனத்தில் மட்டும் அந்தப் பொம்மை பற்றிய ரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையும், ஆவலும் இருந்து கொண்டே இருந்தன.

எதற்கும் ஒரு முடிவு இல்லாமலா போகும்?

ஒருநாள், பள்ளிக்கூடம் முடிந்து வீடு வந்து சேர்ந்தேன். அம்மா என்னிடம் ஒரு கடிதத்தை நீட்டினாள். கடிதத்தை வாங்கிப் படித்தேன்.

அன்புள்ள கோபுவுக்கு,

வணக்கம். மாநில அளவில் நடந்த ஓவியப் போட்டியில் எனக்கு முதற் பரிசாகத் தங்கப்பதக்கம் கிடைத்திருக்கிறது. அடுத்த சனிக்கிழமை சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெறும் விழாவில் பரிசு கொடுப்பார்களாம். நானும் என் அப்பாவும் சென்னைக்கு வருவோம். உங்கள் வீட்டில் தங்கிக் கொள்ளலாம் என்று எண்ணியிருக்கிறேன். உடன் பதில் எழுதவும்.

உன் அன்புள்ள,

கே. ராமன், செங்குளம்.

கடிதத்தைப் படித்ததும் எனக்கு ஓரே மகிழ்ச்சி. என் நினைவுகள் சுழன்றன.

எங்கள் சொந்தக் கிராமமே செங்குளம்தான். அப்பாவுக்குச் சென்னையில் வேலை. அப்பாவும் அம்மாவும் சென்னையில்தான் இருந்தார்கள். நான் மட்டும் என் தாத்தா, பாட்டியுடன் எங்கள் கிராமத்தில் இருந்தேன். ஐந்தாம் வகுப்பு வரையில் படித்தேன். காரணம் என் பாட்டிதான். என் பாட்டி என் மீது உயிரையே வைத்திருந்தாள். திடீரென்று பாட்டி இறந்துவிட்டாள். தாத்தாவும் நானும் சென்னைக்கே வந்துவிட்டோம். ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன.

எங்கள் கிராமத்தில் என்னுடன் ஐந்தாம் வகுப்பு வரை படித்தவன்தான் ராமன். படிப்பில் கெட்டிக்காரன். ஆனால் படுசுட்டி. கையிலே அடுப்புக்கரித் துண்டை வைத்துக்கொண்டு, கண்ட கண்ட சுவரிலெல்லாம் கிறுக்கிக் கொண்டிருப்பான். நாங்கள் எல்லாருமே அவனைக் 'கிறுக்கு ராமன்' என்றுதான் கிண்டல் செய்வோம்.

'அந்தக் கிறுக்கு ராமன், இன்று தங்கப்பதக்கத்தைப் பெற்று விட்டானே!' — எனக்கு ஒரே வியப்பு!

சிறிது நேரத்தில் என் தாத்தா வந்தார். அவரிடம் விவரத்தைச் சொன்னேன். கடிதத்தையும் கொடுத்தேன். கடிதத்தைப் படித்தவுடன் என் தாத்தா மகிழ்ச்சியுடன் துள்ளினார். "டேய் கோபு, என் ஆசைக் கனவு இப்போதுதான் நிறைவேறப் போகுதுடா!" என்றார், வெகு உற்சாகத்துடன். நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன்.

"டேய் கோபு, என் பெட்டிக்குள்ளே ஒரு பொம்மை வைத்திருக்கேனே, அதற்கு விமோசனம் பிறந்துவிட்டதடா! அந்தப் பொம்மைக்குள் ஒரு கதையே இருக்குதடா! இப்போது அந்தப் பொம்மையை உனக்குக் காட்டப் போகிறேன். அந்தக் கதையையும் சொல்லப் போகிறேன்...!" சொல்லிக் கொண்டே அவசரமாகச் செயல்பட்டார்.

அவசர அவசரமாகப் பெட்டியைத் திறந்தார். துணியால் சுற்றப்பட்டிருந்த அந்தப் பொம்மையை எடுத்தார். அதைப் பிரித்து டேபிளில் வைத்தார். அது ஒரு கிருஷ்ணன் பொம்மை. மேலே தீட்டப்பட்டிருந்த வண்ணங்கள் மங்கிப் போயிருந்தன. டேபிளுக்கு முன் எதிர் எதிராக உட்கார்ந்து கொண்டோம்.

நான், குழலூதும் கிருஷ்ணன் பொம்மையை உற்றுப் பார்த்தேன். 'பளிச்'சென்று ஒரு குறை என் கண்ணில் பட்டது. "தாத்தா, இந்தக் கிருஷ்ணன் பொம்மையில்..." என்று பேச்சை இழுத்தேன்.

உடனே, ஆவேசம் வந்தவர் போல், "கோபு, அந்தக் கதையைத்தான் இப்போது சொல்லப் போகிறேன்..." என்றார் தாத்தா.

தாத்தா பேசத் தொடங்கினார்.

"நான் உன்னைப்போல் சிறுவனாக — பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது எனக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன் பெயர் சொக்கன். அவனுடைய அப்பாவுக்கு வேலை, மண்பாண்டத் தொழில். அது, அவருடைய பரம்பரைத் தொழில். சட்டி, பானையிலிருந்து கிராமதேவதைகளான தெய்வ விக்கிரகங்கள் வரை எல்லாமே செய்வார். சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்களில் எல்லாமே அவரது கைவண்ணத்தில் உருவான விக்கிரகங்கள்தாம் தெய்வ வடிவாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும். அவர் ஒரு தெய்வீகக் கலைஞர்.

ஒருநாள் பள்ளிக்கூடம் முடிந்து நானும் சொக்கனும் வீடு திரும்பிக்

நல்லாயில்லை.

இவர்: உங்க கடைக்கு 'ஔவையார் பழக்கடை'ன்னு பேர் இருக்கலாம்! அதுக்காக யார், எந்த பழம் கேட்டாலும் 'சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?'ன்னு கேக்கறது கொஞ்சம் கூட நல்லா இல்லே!

கடைக்காரர்: ! ! ! ! ! ! ! ! ! !

— குத்தாலம் ராஜா.



கொண்டிருந்தோம். ''டேய் ரங்கு, நான் வீட்டிலே சில பொம்மைகள் செய்து வண்ணந்தீட்டி வெச்சிருக்கேன்... வந்து பார்க்கிறாயா?'' என்றான். உடனே, நான் விளையாட்டாக, ''என்ன பெரிசாப் பொம்மை செய்து



வைச்சிருக்கப் போறே. ஆடு, மாடு, குரங்கு இப்படித்தான் செய்திருப்பே'' என்றேன். அவன் என்னை விடவில்லை., ''வந்து பாரேன். நான் செய்திருக்கிற பொம்மைகள் எப்படி இருக்குன்னுதான் பாரேன்'' என்றான். 'சரி' என்று அவனுடன் சென்றேன்.

சொக்கன் பொம்மைகளைக் காட்டினான். எல்லாமே தெய்வப் பொம்மைகள்தாம். பிள்ளையார், முருகன், காளியம்மை, மாரியம்மை, ஏழு கன்னிமார் சிலைப் பொம்மை... இப்படி! எனக்கு வியப்பாக இருந்தது. எல்லாமே அழகாகக் காட்சியளித்தன. எல்லாமே சின்னச் சின்ன உருவில்...


திடீரென்று எனக்கு ஓர் ஆசை வந்தது. ''டேய் சொக்கு, எனக்கு ஒரு கிருஷ்ணன் பொம்மை செய்து தாடா. ஆனால், கொஞ்சம் பெரியதாகச் செய்யணும்...'' என்றேன்.

சொக்கனுக்கு ஒரே உற்சாகம். ''ஆகட்டும்டா. ஒரே வாரத்தில செய்து தந்து விடுகிறேன்'' என்று உறுதி கூறினான்.

சொன்னதுபோல், ஒரு வாரத்தில் ஒருகிருஷ்ணன்பொம்மையோடுவந்து சேர்ந்தான். குழலூதும் அந்தக் கிருஷ்ணன் பொம்மை அழகாக தெய்வாம்சமாக இருந்தது. ஆனால், விழிகளில் ஒரு குறை. கருவிழிகள் இல்லாமல் இருந்தது. நான் அதிர்ச்சி அடைந்தவனாய், ''என்ன சொக்கா, இப்படிக் கொண்டு வந்திருக்கிறாய்?'' என்று கோபத்துடன் கேட்டேன்.

சொக்கன் கோபப்படவில்லை. ''ரங்கா, தெய்வ விக்கிரகங்களுக்குக் கருவிழி வைப்பது, அதன் கண்களைத் திறப்பதற்கு ஒப்பாகும். அதனை ஒரு நல்ல நாளில், நல்ல நேரத்தில் திறக்க வேண்டும். வருகிற வெள்ளிக்கிழமை நல்ல நாள். அன்று காலையில் குளித்து விட்டு வருகிறேன். தேங்காய், பழம், சூடம், வெற்றிலை பாக்கு எல்லாம் வாங்கி வைத்திரு. பேருக்கு ஒரு பூஜை பண்ணிவிட்டு, கண்களைத் திறந்து வைக்கிறேன். உண்மையாகவே இந்தக் கிருஷ்ணன் பொம்மை ஒரு தெய்வீகக் களையுடன் அமைந்து விட்டது. நீயே நன்றாகப் பாரேன்...'' என்றான். நான் கிருஷ்ணன் பொம்மையைப் பார்த்தேன். சொக்கன் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மையாகவே இருந்தது. உடனே அவன் விருப்பப்படி 'சரி' என்று கூறிவிட்டேன்.

வெள்ளிக்கிழமை வந்தது. காலை



யில் குளித்து முடித்துவிட்டுப் பூஜைக்கான பொருள்களை வாங்கக் கடைத்தெருவுக்குச் சென்றேன். ஆனால், நான் வழியிலேயே கேட்ட செய்தி என் தலையில் இடி விழுந்தது போல் இருந்தது! 'அல்லிக் குளத்திற்குக் குளிக்கச் சென்ற சொக்கன், குளத்தின் ஆழமான பகுதிக்குச் சென்று விட்டானாம். கால்களில் அல்லிக் கொடிகள் சுற்றிக்கொண்டதாம். தண்ணீருக்குள் மூழ்கி, மூச்சுவிட முடியாமல் இறந்து போய்விட்டானாம்' — என்று என் பள்ளி நண்பன் ஒருவன் இந்தச் செய்தியைச் சொன்னான். நான் அடைந்த சோகத்திற்கும் வேதனைக்கும் எல்லையே இல்லை.''

தாத்தாவின் குரல் கம்மியது. அவரது கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. நான் சிலைபோல் உட்கார்ந்திருந்தேன். தாத்தா சிறிது நேர மௌனத்திற்குப் பின் பேசினார்.

''அடிக்கடி உடல் நலமில்லாதிருக்கும் எனக்கு நல்ல ஒரு வாரிசு கிடைத்துவிட்டது என்று நினைத்தேனே! இப்படி ஆகிவிட்டதே!' என்று மனம் உடைந்து போனார் சொக்கனின் தந்தை. அன்று முதல், விக்கிரகம் செய்யும் தொழிலையே விட்டு விட்டார். இந்த நிலையில் —

'இந்தக் கிருஷ்ணன் பொம்மையை என்ன செய்வது? கண்கள் திறக்காத பொம்மையை வீட்டில் வைத்திருப்பதா? சொக்கனின் அப்பாவிடம் கொடுத்துக் கண்களைத் திறக்கச் செய்யலாம் என்று எண்ணினேன். ஆனால் அவரோ சோகத்தில் இருந்தார். 'அடிக்கடி உடல்நலமில்லாதிருக்கும் எனக்கு நல்ல ஒரு வாரிசு கிடைத்துவிட்டது என்று நினைத்தேனே! இப்படி ஆகிவிட்டதே!' என்று மனம் உடைந்தார். அன்று முதல், விக்கிரகம் செய்யும்தொழிலையேவிட்டுவிட்டார். இந்த நிலையில் என்ன செய்வது என்று யோசனை செய்து கொண்டிருந்தேன். திடீரென்று ஒருநாள் என்னை அறியாமலேயே ஓர் ஆவேச உணர்வு எழுந்தது. 'நம்முடைய இந்தச் செங்குளம் கிராமத்தில், சொக்கனைப் போல ஒரு கலைஞன் தோன்றத்தான் செய்வான். அப்படி ஒருவன் தோன்றி

வருகிற வரையில் இந்தப் பொம்மையைப் பத்திரமாக வைத்திருப்போம்' என்று முடிவு செய்தேன். என்னுடைய இந்த முடிவை யாரிடமும் சொல்லவில்லை. சொன்னால் என்னைப் பைத்தியக்காரன் என்றுதான் சொல்லியிருப்பார்கள். ஆனால் இன்று, ஐம்பது ஆண்டுகளுக்குப் பின், — அன்று நான் எண்ணிய நம்பிக்கை, ஆசைக் கனவு பலித்து விட்டது! இன்று ஓவியப் போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்றிருக்கிறானே ராமன், அவன் வேறு யாருமல்ல; சொக்கன் பிறந்த குடும்பத்தின் வழியில் வந்தவன்தான். உறவு முறையில் பார்க்கப் போனால் என் நண்பன் சொக்கனுக்கு இந்த ராமன் பேரன் முறைதான் வரும்... ராமனின் கைகளாலே இந்தக் கிருஷ்ணன் பொம்மையின் கண்களைத் திறக்கச் சொல்லப் போகிறேன்'' — உற்சாகம் பொங்கக் கூறினார், தாத்தா.

நான் சும்மா இருக்க மாட்டாமல், ''கதை ரொம்ப ஜோராய் இருக்குது, தாத்தா'' என்றேன்.

''கதை அல்லடா. கதை அல்ல. உண்மைடா... உண்மை... உண்மை!'' என்று ஆவேசம் வந்தவராய்ப் பொங்கினார், தாத்தா. நான் மௌனமானேன்.

ஒரு வாரம் சென்றது. சனிக்கிழமை வந்தது.

ராமனும் அவனுடைய அப்பாவும் வந்து சேர்ந்தார்கள். கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்கு எங்கள் குடும்பத்தில் எல்லோருமே சென்றிருந்தோம். விழா மேடையில் தங்கப்பதக்கத்தை ராமன் கழுத்திலே அணிவித்துக் கைகுலுக்கினார் கவர்னர். உடனே, என் தாத்தா பெரிய ரோஜா மாலை ஒன்றை அவன் கழுத்தில் அணிவித்தார். கட்டித் தழுவி முத்தம் கொடுத்தார். எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி! பெருமை! அன்று என்னுடன் கிராமத்தில் படித்த என் நண்பன் ராமன் — கையிலே அடுப்புக்கரித் துண்டை வைத்துக் கொண்டு சுவரில் கிறுக்கிக் கொண்டிருந்தவன் — இன்று தங்கப்பதக்கத்தை வென்று மேடையில் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறானே!

மறுநாள் முகூர்த்த நாள். அன்று என் தாத்தா வேண்டிக் கொண்டதற்கிணங்க ராமன், பூஜை செய்த பின்னர் கிருஷ்ணன் பொம்மைக்கு வண்ணம் தீட்டிக் கண் திறந்தான். என்றோ, எப்போதோ, என் தாத்தாவின் நண்பர் சொக்கன் படைத்த அந்தக் கிருஷ்ணன் பொம்மை, ராமனின் கைவண்ணத்தால் புதுப்பொலிவுடன் தெய்வீக ஒளியைப் பெற்றுவிட்டது! இப்போது அது பொம்மை அல்ல!

இப்போது — அந்தக் கிருஷ்ண விக்கிரகம் தாத்தாவின் பூஜை அறையிலே, ஒரு பீடத்தின் மீது கம்பீரமாக இருக்கிறது. தினசரி பூமாலை அணிவிக்கப்படுகிறது. தீபாராதனையும் செய்யப்படுகிறது. நான் பள்ளிக்கூடம் போகும் முன், குழலூதும் கண்ணனை வணங்கிவிட்டுத்தான் பள்ளிக்கூடம் செல்கிறேன்.

பிருந்தாவனக் கவியரங்கம்



எங்கள் பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பல்லுப் போன பாட்டி.

நீட்டி நீட்டிப் பேசி
நினைக்க வைக்கும் பாட்டி.

அஞ்சி யாரும் வந்தால்
அன்பு சொல்லும் பாட்டி.

நெஞ்சில் இன்பம் கூட்டி,
நேர்மை சொல்லும் பாட்டி.

சின்னச் சின்னக் கதையால்
சிரிக்க வைக்கும் பாட்டி.

இன்னும் இன்னும் என்றால்
இனிக்கச் சொல்லும் பாட்டி.

கள்ளம் இல்லாப் பாட்டி,
கடமை செய்யும் பாட்டி.

கொள்ளை அன்பு காட்டிக்
கொஞ்சிப் பேசும் பாட்டி.

பாட்டி எங்கள் பாட்டி,
பல்லுப் போன பாட்டி.

— செ. விஜய்செந்தில் (12,964),
மயிலாடுதுறை.

காலைக் கதிர்

காலைக் கதிரே, எழுந்திரு!
கடமை எல்லாம் செய்திடு!
சோலைக் குள்ளே சென்றிடு!
சோக இருளை நீக்கிடு!

பனியை விரைந்து அகற்றிடு!
பசுமை எங்கும் சேர்த்திடு!
துணியை உலர வைத்திடு!
தூய உலகைப் படைத்திடு!



பூக்கள் இதழை விரித்திடு!
பூமித் தாயை நனைத்திடு!
மக்கள் கொகவை எழுப்பிடு!
மயார் தம்மை வெறுத்திடு.

— ஜி. மனோகர் (15,959),
சேரன்மகாதேவி — 14.

குளக்கரைக் காட்சி

கொக்கு ஒன்று குளக்கரையில்
காத்து நிற்குது — அது
கொத்தி மீனைத் தூக்கிக் கொண்டு
செல்லப் பார்க்குது.

தத்திவந்த தவளை ஒன்று கரையில்
நிற்குது — அது
தண்ணீருக்குள் குதித்து மெல்ல
நீந்தப் பார்க்குது.
குருவி ஒன்று மரத்தில் வந்து
அமர்ந்து கொள்ளுது — அது
கொத்தி வந்த உணவைத் தனது
குஞ்சுக் களிக்குது.

ஆடு, மாடு, எருமை யெல்லாம் அருகில்
மேயுது — அது
தாகம்தீர ஓடிவந்து நீரைப் பருகுது.
பசுமை நிறைந்து மரங்களெல்லாம் கரையில்
நிற்குது — அவை
பாதம் நோக நடந்தவர்க்கு நிழலைத் தருகுது.



பக்க மெல்லாம் வயல் வெளிகள் பரந்து
கிடக்குது — அங்கே
பளபளக்கும் நெல்மணிகள் விளைந்துநிற்குது.
ஓடி வரும் வெள்ள மெல்லாம் குளத்தில்
சேருது — அது
ஒற்றுமையை மாந்தருக்கு உணர்த்துகின்றது.

— எம். பெரியசாமி (18,892),
கபிலர்மலை — 4.

ஜோதிடக் கிளி



கிளியாரே, கிளியாரே, நலந்தானா? — மரக்
கூண்டில் இருந்தால் சுகந்தானே?
களிப்புடன் சோலையில் வாழும் நீ — மனக்
கவலையில் பொழுதைக் கழிக்கின்றாய்!

பழமையில் தோய்ந்த ஜோதிடத்தை
— மனிதன்
படிக்கத் தாளில் எழுதிவைத்து,
கிளியே, உன்னை எடுக்க வைத்து — அதில்
கிடைக்கும் பணத்தால் வாழ்கின்றான்!

துன்பப்படுத்தி உன்னைத்தான் — நாளும்
துட்டுச் சேர்ப்பார் சிலமனிதர்.
நன்மை தீமை அறிவாயோ? — அறிந்தால்
நாளும் கண்ணீர் சொரிவாயே?

ஆறடி மனிதன் வயிற்றுக்கு — நீயேன்
அல்லல் பட்டு உழைக்கின்றாய்?
நேரடிச் சுதந்திரம் பெற்றே நீ — காட்டில்
நிம்மதி யாக வாழ்வாயே!


— இரா. செல்வத்துரை (20,163),
கடையாலுருட்டி.

பேரன்: பாட்டி, நாங்க உங்களைப் பற்றி பேசவும், நீங்க வரவும் சரியா இருக்குது. உங்களுக்கு ஆயுசு நூறு பாட்டி.

பாட்டி: டேய், எனக்கு நூத்தி மூணு வயசாகுது. நான் உயிரோட இருக்கறது உங்களுக்குப் பிடிக்கலையா?

— வி. சாகேதராமன் (4669).





ஏகபாத ரிஷி தம்முடைய வழக்கப்படி மாணவர்களுக்கு அதட்டி உருட்டிப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அவருடைய குரலை அமுக்கிக் கொண்டு இன்னோர் அதிசயக் குரல் ஓங்கி எழுந்தது. அதிசயம் என்னவெனில், குரல் கேட்டதேயொழியப் பேசியவர் யாரென்று கண்ணுக்குத் தெரியவில்லை! குரல் மிகவும் இளம்தொனியில் இனிமையாக ஒலித்தது. அது கூறியதன் பொருள் உங்களுக்குப் புரியவேண்டுமானால், ஏகபாதரைப் பற்றியும் அவர் போதித்த பாடத்தைப் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டும்.

ஏகபாதர் போதித்தது வேதம் என்னும் நூலாகும். வேதம்தான் ஹிந்து மதத்தின் மூச்சுப் போன்ற முக்கியமான நூல். உலகம் முழுதிலுமே மிகவும் பழைமை வாய்ந்த நூல் அதுதான். அது கடவுளைப் பற்றியும், உலகைப் பற்றியும், உலகில் நல்வாழ்வு வாழ்வதற்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியும், கடவுளை அடைவதற்குரிய வழி முறைகள் பற்றியும் விரிவாகக் கூறும் அற்புத நூலாகும்.

ஆதிகாலத்து வடமொழியில் அமைந்த வேதநூலுக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. என்னவெனில், நூலின் சொற்களுக்கு உயர்ந்த பொருள் இருப்பது மட்டுமன்றி, அச்சொற்களின் ஒலிகளுக்கே தெய்வீகமான சக்தி உண்டு. அவ்வொலிகளை எப்படி ஏற்றியும் இறக்கியும் சொல்ல வேண்டும் என்பதற்கு விதிகள் உண்டு. இதன்படி பிழையின்றி ஓதினால் ஓதுபவருக்கும் நன்மை உண்டாகும்; உலகுக்கும் இன்பம் விளையும். இப்படிப்பட்ட சொற்கோவைகளுக்குத்தான் "மந்திரம்" என்று பெயர். இவற்றைக் கண்டுபிடித்தவர்களே ரிஷிகள் எனப்படுபவர்கள்.

ஏகபாதர் இம்மாதிரியான ஒரு ரிஷி. பெரிய மகான். ஆனாலும் என்ன செய்வது? மிகவும் கோபக்காரராக இருந்தார். வேத மந்திரச் செய்யுட்களை ஒவ்வோர் அடியாகக் கற்றுக் கொடுப்பதற்குள் மாணவர்களையும் அடி அடியென்று அடித்து நொறுக்கி விடுவார்! அவர்கள் மந்திர ஒலிகளைப் பழுதறக் கற்று முழுப் பயன் பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தினால்

தான் கண்டிப்புக் காட்டினாரென்றாலும், இதில் அளவு மீறியே போய்த் தண்டிப்புத் தந்து வந்தார். படுமக்கான மாணவனும் முறைப்படி கற்ற பின்தான் அடிமேல் அடி வைத்து (மாணவர்களின் முதுகிலும்தான்!) அடுத்த செய்யுளின் அடிக்குப் போவார். அதனால்தான் அவருக்கு 'ஏகபாதர்' என்ற பெயர் ஏற்பட்டது. ஏகம் என்றால் ஒன்று. பாதம் என்றால் அடி. மந்திரத்தின் ஒவ்வோர் அடியாகப் பாடம் கற்பித்ததால் ''ஏகபாதர்'' ஆனார். (அவரது உண்மையான பெயர் கஹோளர்.)

இனி, ஆள் தெரியாமல் எழுந்த அதிசயக் குரல் என்ன கூறிற்று என்று கேட்போம்:

''ரிஷியே! இப்போது தாங்களே புது மந்திரங்கள் கண்ட ரிஷியாகி விட்டீர்கள். ஆனால், பல்லாண்டுகளுக்கு முன்பு தாங்கள் மாணவராயிருந்த போது எப்படியிருந்தீர்கள்? அதைச் சிறிது எண்ணிப் பாருங்கள்! அப்போது தாங்களும் பல முறை தவறிய பிறகுதான் பெரும்பாலான மந்திரங்களைச் சரிவரக் கற்றீர்கள். ஒரு சில மந்திரங்களைத் தாங்களே தவறாகத்தான் கற்றுக் கொண்டு, இன்று வரை பிழைபடவே கற்றுக் கொடுத்தும் வருகிறீர்கள். முதல் முறை ஒரு மந்திரத்தைக் கேட்கும்போதே அதன் சரியான அமைப்பு கடவுளருளால் அடியேனுக்குத் தெரிந்து விடுவது போலத் தங்களுக்குத் தெரிந்துவிடவில்லை. பல முறை பாடம் கேட்டுத்தான் தெரிந்து கொண்டீர்கள். இன்றளவும் தாங்கள் சரியாய் அறியாதவையும் உள்ளன. அவ்வாறிருக்கச் சீடப் பிள்ளைகளை ஏன் தாட்சிண்யமின்றித் தண்டிக்கிறீர்கள்? தங்களிடம் அவர்களுக்குள்ள கிலியிலேயே அவர்களுடைய இயற்கையான அறிவும் மழுங்கிப் போகும்படி செய்கிறீர்களே! ரிஷி பெருமானே! அறிஞரான தாங்கள் அன்பையும் வளர்த்துக் கொள்ளுங்கள்'' என்றது அக் குரல். இளமையாய், இனிமையாய் இருக்கும் போதே ஆணித்தரமாக, அழுத்தந் திருத்தமாக ஒலித்தது அதிசயக் குரல்!

யார் பேசுவதென்று ஏகபாதருக்கும் தெரியவில்லை, சீடப் பிள்ளைகளுக்கும் தெரியவில்லை. வழிபாட்டு அறையில் கோலம் போட்டுக் கொண்டிருந்த ஏகபாதரின் மனைவி சுஜாதாவிடமிருந்துதான் அக் குரல் வந்தது. ஆனால் இளமையாக, இனிமையாக, அழுத்தந்திருத்தமாக ஒலித்த குரல் அவளுடையது அல்லவே அல்ல. அந்த அம்மாளுக்கே, இதென்ன? நம்மிடமிருந்தே இப்படி ஆள் தெரியாமல் பேச்சு மட்டும் எழுகிறது? என்று ஆச்சரியமாக இருந்தது.

குரல் அடங்கிற்று. சற்று நேரம் அங்கு மர்மமான மவுனம் நிலவியது. பிறகு ஏகபாதர் சமாளித்துக் கொண்டு அடுத்த மந்திரத்தின் முதல் அடியைப் பாடம் தொடங்கினார்.

''நிறுத்துங்கள், நிறுத்துங்கள்!'' என்று உடனே அந்த அதிசயக் குரல் மீண்டும் எழும்பியது. முன்போலவே சுஜாதாவை ஒட்டினாற் போல் எழுந்த அக் குரல், ''தப்புப் பாடம் கற்பிக்கிறீர்களே! எட்டெழுத்துக் கொண்ட இந்த அடியின் முதல் எழுத்திலேயே தவறுதலாக அழுத்தம் கொடுத்து விட்டீர்கள். எட்டுக் கற்களை அடுக்கி வைத்துள்ளபோது முதற் கல்லை அழுத்தித் தள்ளினால் என்னவாகும்? எல்லாக் கற்களுமே சாய்ந்து கோணல் மாணலாகி விடாதா? அதுபோலத் தாங்கள் முதலெழுத்தில் கொடுத்த அழுத்தத்தின் அதிர்ச்சி அடி முழுதும் பரவி எட்டு ஒலிகளையும் கோண



பொருத்தமான இடம்

''ஜோக் எழுத்தாளர் தற்கொலை செய்துக்கிட்டாராமே!''

''ஆமாம் 'Jog falls'ல்தான்!''


— வெ. சாகேதராமன் (4669).


லாக்கி விட்டதே! தெய்விகமான வேத மந்திரத்தில் இவ்வாறு ஆசிரியரே பாதிப்பு ஏற்படுத்தலாமா? அறியாப் பிள்ளைகளைக் கடுமையாகத் தண்டிக்கும் தாங்கள் தங்களுக்கு என்ன தண்டனை விதித்துக் கொள்ளப் போகிறீர்கள்?'' என்றது.

உருவத்தைக் காட்டாமல் தம்மைக் குறை கூறும் அக் குரலுக்கு உரிய மனிதர் மீது ஏகபாதருக்கு ஏகக் கோபம் மூண்டுவிட்டது! உருமிச் சாபம் கொடுத்தார்: ''கோழைபோல் உருவை மாயமாக ஒளித்துக் கொண்டு என் மேல் குற்றம் சொல்லும் கயவனே! தண்டனை எனக்கில்லை; உனக்குத் தான்! என் உச்சரிப்பால் எட்டெழுத்து கோணலாகி விட்டது என்று சொன்ன உன்னுடைய மாயமான உடம்பிலும் சாணுக்கு ஒரு கோணலாக எட்டுக் கோணல்கள் ஏற்படட்டும்!''

கனகோபத்துடன் அவர் இடியிடிப்பது போல் சாபமிட, அதிசயக் குரலோ இனிமையாக மழை பொழிவது போல மறுமொழி கூறிற்று: ''தந்தையே! தாங்கள் சாபமாகக் கொடுத்ததையே நான் வரமாகக் கருதி மகிழ்ந்து வரவேற்கிறேன். என் உடல் எட்டுக் கோணல் கொண்டதாகவே உருவாகிப் பிறக்கட்டும். உடலழகில் என்ன இருக்கிறது? உள்ளத்தின் அழகல்லவோ உயர்வு தருவது? அழகான உடல் வாய்த்தால் அதை மேலும் அழகு செய்து கொள்வதிலும், பேணி வளர்ப்பதிலுமே ஒருவன் ஈடுபட்டு விடுகிறான். உள்ளத்தை உயர்த்திக் கொள்ள மறந்து விடுகிறான், பிதாவே! தங்கள் ஆசியால் உடற்கோணலுடன் பிறக்கப் போகும் நான் உடலைப் பேணுவதில் ஈடுபடாமல், உள்ளத்தைக் கோணலின்றிப் பேணி நேராக, சீராக வைத்துக் கொள்வேன். எனக்கு இப்படிப்பினையைப் பிறக்கு முன்பே தந்துவிட்ட தந்தைக் குருவே, தங்களுக்கு வந்தனம்.''

யார் பேசியது என்று இப்போது எல்லோருக்கும் புரிந்து விட்டது. பேராச்சரியம்தான்! கர்ப்பிணியான சுஜாதாவின் வயிற்றுக்குள் இருந்த குழந்தைதான் பேசியிருக்கிறது! பத்து மாதச் சிசுவாக முழு உருவம் பெற்றுப் பிறக்கு முன்பே அவ்வுயிர் கடவுளருளால் வேத மந்திர அறிவு முற்றும் பெற்றுத் தந்தைக்கே அறிவுரை கூறியிருக்கிறது! அப்படிப் பட்ட தவப் புதல்வனின் அருமை தெரியாமல் அவர் அவனுடைய உடல்





எட்டுக் கோணலாகுமாறு சபித்திருக்கிருர்! அதையும் அந்த அற்புத பாலன் ஆசியாகக் கருதி வணக்கம் கூறுகிருன்!

ஏகபாதரின் மனம் உருகி விட்டது. அதோடு அவரது கோப குணமும் கருகி விட்டது!


ஆனுலும், அடடா, அவர் கொடுத்த சாபத்தை மாற்ற மட்டும் அவருக்கே சக்தியில்லே.

அதனுல், உரிய காலத்தில் சுஜாதா பிள்ளேயைப் பெற்றெடுத்த போது அந்தப் புத்திர மணியின் உடம்பு எட்டுக் கோணல் கொண்டதாகவே இருந்தது. சாணுக்கு ஒரு கோணலாக, பார்க்க ஒரே அசிங்கமாயிருந்த அப்பிள்ளேக்கு ''அஷ்டாவக்ரன்'' என்றே பெயர் ஏற்பட்டது. 'அஷ்டம்' என்ருல் எட்டு. 'வக்ரம்' என்ருல் கோணல்.

அஷ்டாவக்ரனின் உடல் 'கோணு மாணு' என்று இருந்தால் என்ன? அவன் தாயின் வயிற்றிலிருந்தபோதே விரும்பியபடி உள்ளத்தில் சிறிதும் கோணல் மாணல் இன்றி மிக மிக நேர்மையாகவும் சீர்மையாகவும் தன்னே வளர்த்துக் கொண்டான். பிறர் தன் தோற்றத்தைப் பரிகசிப்பதைப் பொருட்படுத்தாமல், உடலின் வசதி, இன்பம் ஆகியவற்றைப் புறக்கணித்துப் பால முனிவனுக வாழ்ந்தான். பரம் பொருளேக் குறித்து அறிவையும், அனுபவத்தையும் அதிசயமாகப் பெருக்கிக் கொண்டான். சிறுவனுக இருந்த போதே ஜனக மகாராஜரின் பண்டித சபைக்குச் சென்று அறிஞர் திலகமாக வெற்றிக் கொடி நாட்டினுன். (தான் அஷ்டாவக்ரனுக பிறப்பதற்குக் காரணமான தந்தை ஏகபாதருக்கு அவன் அப்போது ஆற்றிய அரும்பணி ஒரு தனிக்கதை. அதைப் பிற்பாடு எப்போதேனும் பார்க்கலாம்.)

வயதடைந்த பின் அஷ்டாவக்ரம், ஞானியர் திலகமாகப் புகழ் கொண்டார். ஜனகருக்கு உண்மைத் தத்துவத்தை உபதேசம் செய்தார். ''அஷ்டாவக்ர கீதை' எனப்படும் அவ்வுபதேச நூலே இன்றும் உலகெங்குமுள்ள தத்துவப் பெரியார்கள் உச்சி மேற்கொண்டு போற்றுகிருர்கள்.

பூந்தாவனக் கலையரங்கம்



சின்ன வயதிலிருந்தே சங்கருக்கு ஒரு நல்ல பழக்கம். அது என்னவென்றால் ஒவ்வொரு ஆண்டும் கோடை விடுமுறையில் பயனுள்ள விஷயங்கள் ஏதாவது ஒன்றைப் புதிது புதிதாகக் கற்றுக் கொண்டு வருவான். பெரியோர்களிடம் பாராட்டும் பரிசும் பெறுவான்.

அந்த ஆண்டு அவன் ஒன்பதாம் வகுப்புத் தேர்வு எழுதி முடித்தான். வழக்கம் போலக் கோடை விடுமுறை விட்டார்கள். சொல்லி வைத்தாற் போல அவன் பெற்றோர்கள், "இந்த ஆண்டு என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்கள்.

அதற்கு சங்கர், தன் நான்கு வயதுத் தங்கைப் பாப்பாவைத் தூக்கி வைத்துக் கொண்டு, "என் தங்கைப் பாப்பாவோடு ஜோரா விளையாடப் போகிறேன்." என்று சொன்னான்.

"பேஷ்! பேஷ்! நல்ல யோசனை தான். ஊராருடன் நல்ல பழக்கம் ஏற்படும் முன்பாக குடும்பத்தாருடனும் சிறு குழந்தைகளுடனும் பழகக் கற்றுக் கொள்வதும் நல்ல பழக்கம் தான்" என்றார், அப்பொழுதுதான் வீட்டிற்குள் நுழைந்த குடும்ப நண்பர் அருணாசலம் அவர்கள்.

சங்கரும் அவன் பெற்றோரும் சிரித்துக் கொண்டே அவரை அன்புடன் வரவேற்றார்கள். தங்கைப் பாப்பாவும் கையை ஆட்டிச் சிரித்தது.

"இந்த வருஷம் சைக்கிள் விடக் கற்றுக் கொள்ளேன்!" என்றாள் அம்மா. "அதுவும் நல்லதுதான்!" என்றார்கள் அப்பாவும் குடும்ப நண்பர் அருணாசலமும். கூடவே, "நீ சைக்கிள் விடக் கற்றுக் கொண்டால், நான் புது சைக்கிள் ஒன்று வாங்கித் தருகிறேன்." என்றார் அருணாசலம்.

சங்கருக்கு ஒரே குஷி.

உடனே அப்பாவிடம் காசு வாங்கிக் கொண்டு வாடகைச் சைக்கிள் கடைக்கு ஓடினான். ஒரு சைக்கிளை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். சில சைக்கிள் விடத் தெரிந்த நண்பர்களை அழைத்துக் கொண்டு மைதானத்திற்கு சைக்கிளுடன் சென்றான்.

சைக்கிள் விடக் கற்றுக் கொள்ளும் போது முதலில் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. கீழே விழுந்ததால் கை, கால் முட்டியில் சிறிது காயம் கூட ஏற்பட்டது. வீட்டிற்கு வந்து அந்தக் காயத்தை 'ஊதி ஊதி' ஆற்றும் பொழுது அவனின் தங்கைப் பாப்பா கண்களைப் பெரிதாக விரித்து அவனை ஆச்சரியமாகப் பார்க்கும். அப்பொழுது சங்கருக்கு வலியே தெரியாது. குழந்தையைத் தூக்கி வைத்துக்

கொண்டு கொஞ்சுவான். மீண்டும் சைக்கிள் விட உற்சாகமாய்ப் போவான்.

சில நாட்கள் சென்றன.

இப்பொழுது சங்கர் சாலையில் தனியாக சைக்கிள் விட நன்கு கற்றுக் கொண்டு விட்டான். அருணாசலம் அவர்களும் சொன்னபடி புது சைக்கிள் வாங்கிக் கொடுத்து விட்டார். அதில் ஏறி உற்சாகமாய் அவன் குடியிருக்கும் சென்னையிலுள்ள அண்ணா நகர் முழுவதும் சுற்றி வந்தான். அதில் அவனுக்கு இன்னொரு லாபமும் உண்டானது. விசாலமான அண்ணாநகர் பரப்பு பூராவும் அவனுக்கு அத்துப்படியாகி விட்டது. மாங்காளியம்மன் கோயில், ஐயப்பன் கோயில், டவர் பூங்கா, போலீஸ் கமிஷனர் வீடு, திருமங்கலம், கிறிஸ்துவ ஆலயம், அண்ணா மருத்துவமனை இப்படிப் பல இடங்கள் அவனுக்கு நன்கு தெரிந்தன.

அவன் சாலையில் சைக்கிளில் வரும் பொழுது பல பேர் அவனிடம் பாதை கேட்பார்கள். அவன் அவர்களுக்குச் சரியான முறையில் வழிகாட்டுவான். சரியான விலாசத்திற்குச் சென்றவர்கள் முதலில் வழிகாட்டிய சங்கரை மனதால் வாழ்த்துவார்கள். இப்படி அவனுக்குஅண்ணாநகரில்நல்லபெயர் பரவியது.

ஒரு நாள். வழக்கம் போல சைக்கிளில் ஏறி சாந்தி காலனியில் வந்து கொண்டிருந்த போது, வயதான ஒருவர் அவனைத் தடுத்து நிறுத்தி ஏதோ கேட்டார். இது என்ன சோதனை? அவர் ஒரு ஊமை! பேச முடியாததால் அவருக்கு என்ன மொழியில் சொல்வது என்றும் புரியவில்லை! மேலும் இயற்கையாக அவருக்குக் காதும் சரியாகக் கேட்காதே! இப்பொழுது என்ன செய்வது? அவர் மேற்கு அண்ணா நகருக்குப் போக வேண்டுமாம். சூரியன் மறையும் மேற்குத் திசையைக் காட்டி, மூன்று விரல்களை நீட்டி, பிறகு ஏழு விரல்களைக் காட்டினார்.

சங்கர் கொஞ்சம் யோசித்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தான். பேசாமல் அவரை சைக்கிள் பின்புறம் உட்கார வைத்துக் கொண்டு மேற்கு அண்ணா நகர் சென்றான். 3—வது தெருவிலுள்ள 7—வது வீட்டில் அவரைக் கொண்டு போய் விட்டான்.

அதை அறிந்த அந்த வீட்டில் இருந்தவர்கள் சங்கருக்கு நன்றி கூறியதோடு காபியும் கொடுத்துப் பாராட்டினார்கள். பெற்றோர்களும், நண்பர்களும், குறிப்பாக குடும்ப நண்பர் அருணாசலம் அவர்களும் அவன் செய்கை அறிந்து மிகவும் மகிழ்ந்தார்கள்.

அந்த சைக்கிளை ஒரு வாகனம் என்றுதான் அவன் முதலில் நினைத்துக் கொண்டு இருந்தான். அதனால், பிறருக்கு நன்மையும் செய்ய முடியும் என்று அறிந்த பொழுது அந்த வாகனத்தையே தனக்கு ஒரு நல்ல வழிகாட்டி என்றும் மதித்தான்.

பாட்டியின் தந்திரம்



கரிசலம்பட்டி என்ற கிராமத்தில் தாயம்மாள் என்று ஒரு கிழவி இருந்தாள். அவள் ஏராளமான பணத்தைச் சேர்த்து வீட்டில் வைத்திருந்தாள். அவளுக்கு ஒரே ஒரு மகன் மட்டும் உண்டு. அவன் பக்கத்து ஊரில் துணி வியாபாரம் செய்கிறான். மாதத்தில் ஒரு நாள்தான் வந்து போவான். அவன் சரியான ராம பக்தன். எந்நேரமும் அவன் முகத்தில் பட்டையாக நாமம் ஜொலித்துக் கொண்டே இருக்கும்.

ஒரு நாள் மாலை தாயம்மாள் சந்தைக்குப் புறப்பட்டாள். தன் மகன் நாளைக் காலை வருவான் என்றறிந்து, அவனுக்குப் பிடித்தமான பண்டங்

களை வாங்கச் சந்தைக்குப் புறப்பட்டாள். போகும் போது, ஆளில்லாத போது வீட்டுக்குள் பெருச்சாளிகள் நுழைந்து நாசம் செய்கின்றனவே என்று, அவற்றைக் கொல்ல ஒரு வேலை செய்தாள். தினை மாவில் மருந்தைக் கலந்து உருண்டைகளாக உருட்டி மூலைக்கொன்றாக வைத்து விட்டுப் போனாள்.

அந்த ஊரில் கிழவியின் பணத்தின் மேல் கண் வைத்திருந்த நான்கு திருடர்கள் இதுதான் சமயமென்று உள்ளே நுழைந்து விட்டனர். உள்ளே நுழைந்ததும், தினை மாவு உருண்டைகளைக் கண்டதும், ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு தின்ன ஆரம்பித்தார்கள்.

அவ்வளவுதான்! சிறிது நேரத்தில் மருந்து வேலை செய்தது. நான்கு பேரும் மயங்கி விழுந்தனர். சிறிது நேரத்தில் அவர்களின் மூச்சு நின்றுவிட்டது!

சந்தையிலிருந்து வீட்டிற்குத் திரும்பிய கிழவி, வீட்டில் நாலு பேர் செத்துக் கிடப்பதைக் கண்டாள். விஷயத்தைப் புரிந்து கொண்டாள். காலையில் இந்த விவரம் ஊருக்குத் தெரிவதற்கு முன்னால், இரவோடு இரவாகப் பிணங்களை அடக்கம் செய்துவிட வேண்டும் என்று முடிவு செய்தாள். சுடுகாட்டில் தூங்கிக் கொண்டிருந்த வெட்டியானை எழுப்பி, "அப்பா, என் வீட்டில் ஒருவர் செத்துப் போயிட்டார், நீ அடக்கம் செய்துட்டா நான் அம்பது ரூபாய் தர்றேன்" என்றாள்.


பாட்டிக்குப் பங்கு!

"எங்க பாட்டிக்கு புதுசா பல்செட் வாங்கினது தப்பாப் போச்சு......!"

"ஏன்.... என்னாச்சு.....?"

"எனக்கு கொடுக்கிற முறுக்குக்கு பங்குக்கு வந்திடறாங்க.....!"

— ஏ. ஆர். வீரராகவன். (2118).



வெட்டியானும் ஒப்புக் கொண்டான். "பாட்டி, நீ போ. நான் பின்னாலே வர்றேன்" என்றான். கிழவி ஒரு பிணத்திற்கு நெற்றியிலே பட்டையாக நாமம் போட்டு அதைத் தூக்கி வந்து திண்ணையில் வைத்தாள். வெட்டியான் வந்தான். அந்தப் பிணத்தை அடக்கம் செய்து விட்டுத் திரும்பினான். திண்ணையில் இன்னொரு பிணம் நாமம் போட்டுச் சாத்தப்பட்டிருந்தது.

"நல்ல வேலை செஞ்சே! சரியாப் புதைக்காமே வந்துட்டே, நீ வர்றதுக்கு முன்னாலே பொணம் வந்திருச்சு. இந்த வாட்டியாவது நல்லாப் புதைச்சிட்டு வாப்பா" என்று கடிந்து கொண்டாள் கிழவி.

வெட்டியானுக்கு ஆச்சர்யம்! 'என்னடா, நாம குழி தோண்டி மண்ணைப் போட்டு மூடிட்டு வந்தோம். அப்படியிருக்க எப்படி இது வந்துடுத்து! அதே பொணம், அதே நாமம்' என்று குழப்பிக் கொண்டே பழையபடியும் பிணத்தைச் சுடுகாட்டுக்குச் சுமந்தான்.

இரண்டாவது தடவை புதைத்து விட்டு வந்தால், மறுபடியும் ஒரு பிணம்! இந்த முறை மிகவும் திகைப்பாயிருந்தது வெட்டியானுக்கு. அதே மாதிரிதான் இதுவும் இருக்குது. நாமமும் போட்டிருக்கு. அதேதான்!

"என்னப்பா நீ, குழியை நல்லா மூடியிருந்தா, இப்படி எழுந்திருச்சு ஓடி வருமா? இதுவோ ஒரு முரண்டு பிடித்த பிணம்னு தெரிஞ்சும் நீ நல்லா மூடாம வந்துடறியே. இந்தத் தடவையாவது ஒழுங்கா மூடிட்டு வா." என்றாள் கிழவி.

மூன்றாவது பிணத்தைத் தூக்கிக் கொண்டு போய்ப் புதைத்தான். வீட்டுக்கு வந்தால் பழையபடி திண்ணையில் பிணம்! 'அடக் கடவுளே!' வெட்டியானுக்கு கோபம் பொறுக்கவில்லை. "இரு. இரு. ராஸ்கோல். உன்னை என்ன செய்கிறேன் பாரு' என்று உலக்கையால் இரண்டு போடு போட்டுத் தூக்கிக் கொண்டு போய்ப் புதைத்து, கனமான பாறாங்கல்லை வைத்துவிட்டு நிம்மதியுடன் திரும்பினான்.

அப்போது இருள் கொஞ்சம்

கொஞ்சமாக விலகி, வானம் மெல்ல வெளுக்கத் தொடங்கியது. வெட்டியான் நிம்மதியுடன் குளத்தில் இறங்கி கை, கால் கழுவி விட்டு கரையேறும் போது பக்கத்திலிருந்த ஒற்றையடிப் பாதையில் பட்டையாக நாமம் போட்டுக் கொண்டு வேகமாகப் போய்க் கொண்டிருந்தான் ஒருவன்.

வேகமான நடையையும், பளிச் சென்ற பட்டையான நாமத்தையும் கண்ட வெட்டியானுக்குப் படு கோபம் வந்து விட்டது. ஓட்டமாக ஓடி, ''உனக்கு எவ்வளவு திமிர்! ஒரு மனுஷன் எத்தனை தடவைதான் இடுப்பு ஒடியச் சுமப்பது? புதைக்கப் புதைக்க எழுந்திருச்சு ஓடிப்போறியா! இதோ, இந்த மண் வெட்டியால் உன்னைக் கண்ட துண்டமாக வெட்டிச் சுடுகாட்டில் புதைத்து விட்டுப் பெரிய பாறுங்கல்லை அமுக்கி அமுக்கி வைத்து விட்டு வரப் போறேன். அப்புறமும் இப்படி எழுந்திருச்சு வருவியா?'' என்று கேட்டுக் கொண்டே, மண்வெட்டியைத் தலைக்கு மேலே தூக்கினான்.

நாமம் போட்ட ஆள் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை! ''ஐயோ! அம்மா!'' என்று கதறிக் கொண்டு பி.டி. உஷாவைவிட மிக வேகமாக ஓடினான். வீடு வந்துதான் நின்றான்.

வெட்டியானும் அவனை விடவில்லை. துரத்திக் கொண்டே வந்தான்.

பாட்டி வீட்டிற்கு அந்த ஆள் நுழைந்ததும், ''போய்த் திரும்பவும் திண்ணையிலே படுக்கப் போறியா? உன்னைக் கண்ட துண்டமா வெட்டிச் சாக்கிலே கட்டிக் கொண்டு போய்ப் புதைக்கிறேனா, இல்லையா, பார்'' என்று கத்திக் கொண்டே பாட்டி வீட்டிற்கு வந்தான்; திண்ணையில் பார்த்தான். பிணத்தைக் காணோம்!

இதற்குள் நாமம் போட்ட ராம பக்தனாகிய தன் மகன் மூலமாக ஓரளவு விஷயத்தைத் தெரிந்து கொண்ட பாட்டி, வெளியே வந்தாள்.

''என்ன பாட்டி? எங்கே அந்தப் பிணம்?'' என்று கேட்டான்.

''ஐயோ! நீ துரத்தி வந்தது பிணமில்லேடா. அது நான் பெத்த பிள்ளை. நாமம் போட்டவங்களெல்லாம் உனக்குப் பிணமாகத் தோணுதா?... சரி, சரி இந்தா, உனக்குச் சேர வேண்டிய ஐம்பது ரூபாய்'' என்று அவனிடம் கொடுத்தனுப்பி விட்டு,

வீட்டுக்குள் சென்று, அங்கே நடுநடுங்கிக் கொண்டு மூலையில் குந்தியிருந்த மகனிடம், ''நல்ல வேளை. நீ பிழைத்தாய். நான் செய்த தந்திரம் எனக்கே கெடுதலாகி விட்டதே!'' என்று கூறி நடந்ததையெல்லாம் விவரமாக எடுத்துச் சொன்னாள். அப்போதுதான் மகனின் நடுக்கம் நின்றது!



''அம்மா சீக்கிரம் சோறு போடுங்கம்மா. பள்ளிக்கூடம் போகணும்'' என்றான் ரமேஷ். அவன் தாய் கமலம் ஒரு தட்டில் பழைய சோற்றைப் பிழிந்து ரமேஷின் முன் வைத்தாள். 'சே.... தினமும் இந்தப் பழைய சோறு, ஊறுகாய் தானா? இதை விட்டால் வேறு ஒன்றும் இல்லை' என்று மனத்தில் நினைத்துக் கொண்டு சாப்பிட்டான் ரமேஷ்.

அன்று மாலை பள்ளி விட்டதும் நண்பன் சுகுமார், ''டேய் ரமேஷ், என் வீட்டில் புதிதாய் ஒரு நாய்க்குட்டி இருக்கிறது. அது ரொம்ப அழகு. அதைப் பார்க்கலாம் வா'' என்றழைக்கவே, சுகுமார் வீட்டிற்குச் சென்றான் ரமேஷ்.

சுகுமார் பணக்கார வீட்டுப் பையன். அதிலும் ஒரே பிள்ளை. தினமும் வகை வகையான சாப்பாடுகளைக் கொண்டு வருவான். ஆனால்,

ரமேஷுக்கோ பள்ளியில் போடும் சத்துணவுதான் மதியம் சாப்பாடு.

சுகுமார் வீடு வந்தது. வீட்டிற்குள் இருவரும் சென்றனர். நாய் டைகருடன் விளையாடிக் கொண்டு இருக்கும் போது சுகுமாரின் தாய் அழைக்கவே இருவரும் சென்றனர். ரமேஷை 'டிபன்' சாப்பிடச் சொன்னாள். ரமேஷ் தயங்கினான். சுகுமாரும், அவன் தாயும் கட்டாயப்படுத்தவே ரமேஷ் சாப்பிட்டான். 'என்ன ருசி, என்ன ருசி! இப்படி ஒருநாள், ஒரு வேளை கூட நாம் சாப்பிட்டதில்லையே' என்று நினைத்தான். சாப்பிட்டுக் கொண்டே ரமேஷ் அந்த அறையை நோட்டமிட்டான். ஒரு கண்ணாடிப் பெட்டியில் வகை வகையான உணவுப் பண்டங்கள் இருந்தன. அவை அனைத்தும் அவன் பார்த்தறியாதவை.

மறுநாள் காலை ரமேஷ், தன் வீட்டில் சாப்பிடும் போது சுகுமாரின் வீட்டின் ஞாபகம் வந்தது. அங்கு பார்த்த விதம் விதமான உணவுப் பண்டங்களும் அவன் கண் முன் காட்சியளித்தன!

அன்றிலிருந்து ஆரம்பித்ததுதான். ஒவ்வொரு நாளும் சாப்பிடும் போதும், ''ஏம்மா, தினமும் இந்தப் பழைய சோறு ஊறுகாய்த் தவிர வேறு ஒன்றும் இல்லையா?'' என்று கேட்டான்.

பாவம்! கமலம்தான் என்ன செய்வாள். தன் அன்பு மகனுக்கு எவ்வளவோ செய்ய வேண்டும் என்ற ஆசைதான். ஆனால், விதவையான அவளால் என்ன செய்ய முடியும்? தினமும் வாங்கும் கூலி சாப்பாட்டுக்கே போதவில்லை.

நாட்கள் ஓடின.

ஒருநாள் ரமேஷும், தாயார் கமலமும் ஒரு திருமணத்திற்குச் சென்றனர். திருமணம் முடிந்து அனைவரும் சாப்பிட்டனர். ரமேஷும் சாப்பிட்டு முடித்தான். கொல்லைப்புறம் ஏதோ சத்தம் கேட்கவே அங்கு சென்றான் ரமேஷ்.

ரமேஷ் அங்கு பார்த்த காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. வேலைக்காரர்கள் எச்சில் இலைகளைக் கொட்ட அதில் இருந்த எச்சில் சாதத்தை நாலைந்து ஏழைச் சிறுவர்கள் போட்டி போட்டுக் கொண்டு எடுத்தார்கள். அவர்களுக்குப் போட்டியாக வந்த ஒரு நாயை விரட்டிவிட்டு அவர்கள் எச்சில் சாதத்தை எடுத்துச் சாப்பிட்டார்கள். ரமேஷ் அதைக் கண்டு மிகவும் வேதனைப்பட்டான். 'எச்சில் சோற்றுக்குக் கூட இவர்கள் போட்டி போட வேண்டியிருக்கிறது. நாம் சாப்பிடும் பழைய சோறு எவ்வளவோ தேவலை' என்று அவனுக்குத் தோன்றியது.

ரமேஷ் தினமும் சொல்கிறானே என்று எண்ணி மறுநாள் காலை ஹோட்டலில் இருந்து இரண்டு சப்பாத்திகளை வாங்கி வந்து அவன் முன் வைத்தாள், அவன் அம்மா.

வழக்கம் போல் சாப்பிட உட்கார்ந்த ரமேஷ் தட்டில் பழைய சோற்றுக்குப் பதிலாகச் சப்பாத்தி இருப்பதைக் கண்டு, ''அம்மா, தயவுசெய்து இது வேண்டாம். பழைய சோறு இருந்தால் கொண்டு வாங்க'' என்றான்.

அவனது மனமாற்றத்திற்குக் காரணம் என்னவென்று புரியாமல், அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள் கமலம்.



''பெரிய அறிஞர்களுக்கெல்லாம் ஞாபக மறதி அதிகம் என்று சொன்னது நீங்கள்தானே?'' என்று ஒரு நிருபர் பெர்னார்ட்ஷாவைக் கேட்டார்.

அதற்கு பெர்னார்ட்ஷா, ''எனக்கு நினைவில்லை'' என்றார்.

— எஸ். விஜயா சீனிவாசன்.

புதிய புத்தகங்கள்





சிறுவர் கதைகள்

மேல் படிப்பு படிக்க விரும்பும் சிறுவனுக்கு அவனுடைய நண்பனும், அவன் தங்கையும் எவ்வாறு உதவுகிறார்கள், கண் தெரியாத பாட்டியின் மண்டை உடைந்து இரத்தம் வழிவதை நிறுத்துவதற்கு வேலன் எப்படி உதவுகிறான், பல நாள் திருடனை இன்ஸ்பெக்டர் மகனான குமார் எப்படிக் கண்டுபிடிக்கிறான், போன்ற எட்டுக் கதைகளை மிகவும் சுவைபடக் கூறுகிறார் சிற்பி சோமு.

வெளியிட்டோர்: சரவணா பிரசுரம், 2497, தெற்கு ராஜ வீதி, புதுக்கோட்டை, பக்கங்கள் 66, விலை ரூ. 5.50.

இராமு எங்கே போகிறான்?

காணாமல் போன பெட்டி என்ற சிதம்பரத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறான், அவனுடைய நண்பனாகிய இராமு. சேலத்திலுள்ள சித்தப்பாவின் மகன் செந்திலுடனும், ஏர்க்காட்டிலுள்ள செந்திலின் நண்பன் பழத்துடனும் இராமு துணிச்சலுடன் செய்யும் செயல்கள் யாவும் நமக்கு வியப்பை அளிக்கின்றன. கடைசியில் எடுத்த செயல் வெற்றியுடன் நிறைவேறுகிறது. மூவருக்கும் ஆளுக்குப் பத்தாயிரம் ரூபாய் பரிசாகவும் கிடைக்கிறது.

'குளிர் மணம் கொண்ட மழலைப் பூக்களின் மங்கல இதயங்களை இப்படைப்பு சிறப்பாகக் குளிர்விக்கும் என்பது உறுதி' என்கிறார் கோவை வானொலி அண்ணா திரு. ஜெ. கமலநாதன். படங்களுடன் கூடிய இப் புத்தகத்தை வெளியிட்டோர்: பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் ரோடு, சென்னை — 14. பக்கங்கள்: 43, விலை ரூ. 4.50.

டென்சிங் — வாழ்க்கை வரலாறு.

ஏழாவது முறையாக எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடிக்கப் புறப்படுகிறார் டென்சிங். கூடவே ஒரு சிறிய தேசியக் கொடியையும் எடுத்துக் கொள்கிறார். அப்போது, அவருடைய பெண் நிமா ஓடி வந்து, "அப்பா, இதையும் எவரெஸ்ட் சிகரத்திற்கு எடுத்துச் செல்லுங்கப்பா" என்று கூறி ஒரு சிறிய பென்சிலைக் கொடுக்கிறாள்.

மலை ஏறும் போது எத்தனையோ தொல்லைகள், துயரங்கள், உயிருக்கு ஆபத்தான நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. அவற்றையெல்லாம் மிகுந்த துணிச்சலுடனும், சோர்வில்லாமலும் சமாளித்து எவரெஸ்ட் சிகரத்தில் ஹில்லரி என்பவருடன் கால் எடுத்து வைத்து விடுகிறார் டென்சிங்!

உச்சி மேல் தேசியக் கொடியை நாட்டும் அதே சமயம், தன் மகள் கொடுத்த பென்சிலையும் மறக்காமல் பனியைத் தோண்டிப் புதைக்கிறார்.

இப்படிப் பல சுவையான நிகழ்ச்சிகளுடன் கூடிய இப் புத்தகத்தை எழுதியிருப்பவர் திருமதி இந்திரா அனந்த கிருஷ்ணன்.

டென்சிங்குடன் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய ஹில்லரியே இப்புத்தகத்திற்கு அணிந்துரை வழங்கியிருப்பது சிறப்புக்கு உரியது. பக்கங்கள்: 80, விலை: ரூ. 6/—.

உலகத்தின் கதை

உலகம் தோன்றிய கதையை ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதமாய்க் கூறுகிறது. ஆனாலும், உலகிலுள்ள உயிரினங்கள், தாவரங்கள், மலைகள், கடல்கள் முதலியவை படிப்படியாக அடைந்த மாற்றங்களை, ஆராய்ச்சி மூலம் அறிந்து நமக்கு விளக்கிக் கூறும் போது நாம் மிகுந்த வியப்படைகிறோம்.


உலகம் தோன்றிய கதை மிகப் பெரியது. ஆனாலும், அதை நமக்கு ஏற்றபடி எளிமையாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார் வாண்டு மாமா. நன்கு நிறையப் படங்களுடனும், கவர்ச்சியான அட்டைகளுடனும் இந்த இரு புத்தகங்களையும் வெளியிட்டிருப்பவர்கள்: வானதி பதிப்பகம், 15, தீனதயாளு தெரு, சென்னை 17. பக்கங்கள்: 80, விலை. ரூ. 8/—






விசித்திரச் செய்திகள்

மனிதர்களைக் காப்பாற்றிய பிராணிகள்!



தென் ஆப்பிரிக்கா அருகே கடலில் ஒரு படகு கவிழ்ந்து விட்டது. அதில் இருந்த மூன்று பேர் கடலில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே நீந்தி வந்த டால்பின்கள் கூட்டம், அந்த மூன்று பேர்களையும் முதுகில் சுமந்து கொண்டு, சுறாமீன்கள் நிறைந்த அந்தப் பகுதியிலிருந்து காப்பாற்றி, ஒரு மைல் தூரத்தில் இருந்த கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தன. பிறகு கடலுக்குச்!சென்று விட்டன!

உலகிலேயே பெரிய நத்தை!




பால் டிராமெல்லி என்னும் பிரெஞ்சுக்காரரிடம் ஒரு பெரிய நத்தை இருக்கிறது. 1½ கிலோ எடையுள்ள அதுதான் உலகிலேயே பெரிய நத்தை. ஆப்பிரிக்காவுக்குச் சென்று கொண்டிருந்த ஒரு கப்பலிலிருந்து அதைக் கொண்டு வந்து வளர்த்தார். அதுதான் இப்போது அவ்வளவு பெரிய ராட்சச நத்தையாக வளர்ந்து விட்டது! அது மட்டுமல்ல, பிராணிகளைப் பற்றிய ஒரு சினிமாவிலும் இப்போது அந்த நத்தை நடிக்கிறது!

கண் கட்டி ஓட்டம்!



புது டெல்லியில் சஞ்சல் குமார் சட்டர்ஜி என்னும் 25 வயது இளைஞர் 'பிட்ட'ராக வேலை பார்க்கிறார். அவர், இந்திய தேசிய ஒருமைப்பாட்டினை வளர்க்க ஒரு புதுமையான முயற்சியை மேற்கொண்டார். கண்களைக் கட்டிக் கொண்டு, டெல்லியிலிருந்து கான்பூர், அலகாபாத், வாரணசி, ஹஜாரிபாக், ராஞ்சி வழியாக ஜாம்ஷெட்பூருக்கு ஓடுகிறார். மொத்த தூரம் 1400 கி. மீட்டர்!

நெட்டையர்கள் சங்கம்!



ரஷ்யாவில், லெனின் கிராடு நகரில் உள்ள நெட்டை மனிதர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் அமைத்திருக்கிறார்கள். அதற்கு 'நெட்டையர்கள் சங்கம்' என்று பெயர். அந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கம், தங்கள் பெரிய கால்களுக்கு ஏற்ற காலணிகள் கிடைக்கச் செய்வதும், நெட்டையர்களுக்கு ஏற்ற நெட்டைப் பெண்களைத் தேடித் திருமணம் செய்து வைப்பதும்தான்!



பயனுள்ள பாராசூட்!

மேற்கு ஜெர்மனியில் புதுவிதமான ஒரு சிறிய பாராசூட்டைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பாராசூட்டின் மேல் பகுதியில் ஒரு சிறிய எந்திரத்தால் சுழலும் புரொபல்லர் இருக்கிறது. இந்த பாரா சூட்டில் ஒருவர் உட்கார்ந்து கொள்ளலாம். மற்ற பாரா சூட்டுகள் கீழே மட்டும்தான் இறங்கும். ஆனால், இதை இயக்கினால், மேலே போகலாம் அல்லது கீழே இறங்கலாம்!

விலை உயர்ந்த வயலின்!



உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த வயலின் வைத்திருக்கும் இசை மேதை யார் தெரியுமா? இத்தாலியைச் சேர்ந்த பிரபல வயலின் இசை மேதை 'வார்ச்சுவோசர் லூயி பியாஞ்சி'! அந்த வயலினின் விலை ரூ 1 கோடி!



பேசாமல் பேசும் கொரில்லா!

கலிபோர்னியா மிருகக் காட்சி சாலையில் 'கோ கோ' என்னும் கொரில்லா குரங்குக்குப் பேசக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்! எப்படி? காது கேளாது வாய் பேசாமல் இருக்கிறவர்களுக்குக் கற்பிக்கப்படும் சமிக்ஞைகளை, ஜாடைகளை அதற்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது 'கோ கோ' மற்றவர்களுக்குத் தன் கருத்துக்களை எளிதாகத் தெரிவிக்கிறது!





சருமத்தைப் பாதுகாப்பது எப்படி?

— டாக்டர் கு. கணேசன்

அன்புக் குழந்தைகளே! உங்கள் உடம்பின் மேல் — ஆடையாக அமர்ந்திருக்கும் தோல் அல்லது சருமம் (skin)தான் உங்கள் உடம்பிற்கு அழகையும், ஆரோக்கியத்தையும், நல்ல பாதுகாப்பையும் தருகிறது என்கிற விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

நமக்கும் சரி, மிருகங்களுக்கும் சரி தோல் மிகவும் முக்கியமான உறுப்பு என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

உடம்பில் கை இல்லாமலும் கால் இல்லாமலும் உயிர் வாழ்ந்து விடலாம்; ஆனால், தோல் இல்லாமல் உயிர் வாழ்வது இயலாத காரியம்.

இதற்கு இரண்டு உதாரணங்கள் சொல்லட்டுமா?

தோல் உரிக்கப்பட்ட கோழி இறந்து விடுகிறதே, ஏன்? உடம்பில் அதிகமான தீக்காயங்கள் பட்டவர்கள் தோல் வெந்து போனதும் உயிர் துறக்கிறார்களே, ஏன்?

இரண்டிலுமே தோல் இழப்பினால் தான் மரணம் நிகழ்கிறது என்பதைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா?

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சருமத்தைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமில்லையா? அச்சருமத்தின் நலனைக் கெடுக்கும் சரும வியாதிகளைத் தவிர்க்க வேண்டியது அவசியமல்லவா? உடம்பின் அழகையும் ஆரோக்கியத்தையும் கட்டிக் காப்பதற்கு சருமத்தைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமையல்லவா?

அதற்கான வழிகளைக் கூறுகிறது இக் கட்டுரை. படியுங்கள் —

நம் சருமத்தின் முக்கிய பணிகள் நான்கு.

முதற்பணி — உடம்பின் வெளியிலிருந்து ஏற்படும் தாக்குதல்களைத் தடுத்து உள்ளுறுப்புகளைப் பாதுகாப்பது.

இரண்டாவது பணி — உடம்பின் வெப்ப நிலையைச் சீராக அமைப்பது. அது எப்படி என்பதை இங்கே விளக்கட்டுமா? குளிர்காலங்களில் தோலில் உள்ள இரத்த நாளங்களைச் சுருக்கி, வியர்வையைக் குறைத்து, உடம்பில் உள்ள வெப்பம் வெளியேறாமல் பார்த்துக் கொள்கிறது. அதே சமயம், கோடை காலங்களில் வெயிலின் காரணமாக நம் உடம்பின் வெப்பம் அதிகரிக்கும் போது வியர்வையை அதிகமாகச் சுரக்கச் செய்து உடலிலுள்ள நீரை வெளியேற்றி, அதன் மூலம் உடம்பின் வெப்பத்தையும் வெளியேறச் செய்து உடம்பைக் குளிரச் செய்கிறது.

சருமத்தின் மூன்றாவது பணி — வெப்பம், குளிர்ச்சி, வலி, தொடுவுணர்ச்சி, அரிப்பு போன்ற நுண்ணிய உணர்வுகளைத் தன்னுடன் இணைந்துள்ள நுண்ணிய நரம்புகளின் மூலம் நமக்கு உணர்த்துகிறது. இங்கே ஒன்றைச் சொல்ல வேண்டும். நம் உடம்பில் தோலுக்கு மட்டுமே

அரிப்பை உணரக்கூடிய தகுதி உண்டு. மற்ற எந்த உறுப்பினுலும் அரிப்பை உணர முடியாது.

சருமத்தின் நான்காவது பணி — எவ்வாறு வியர்வைச் சுரப்பிகள் மூலம் வியர்வையை வெளியேற்றி உடம்பின் வெப்பத்தைக் கட்டுப்படுத்துகிறதோ, அவ்வாறே சருமத்தில் உள்ள எண்ணெய்ச் சுரப்பிகள் மூலம் சருமத்தை மிருதுவாகவும் மென்மையாகவும் வைத்துக் கொள்ள உதவுகிறது.

இப்படி நமக்காகப் பல நற்பணிகளை செய்து வரும் சருமத்தை நாம் சரியாகப் பராமரிக்கவில்லையென்ருல் சருமத்தின் நலன் கெட்டு வியாதிகள் வருவது இயற்கை. அவ் வியாதிகளை 'சரும வியாதிகள்' (Skin Diseases) என்றழைக்கிருர்கள்.

குழந்தைகளாகிய உங்களுக்கு வரக் கூடிய சரும வியாதிகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவற்றின் காரணமறிந்து தவிர்க்கும் முறைகளைத் தெரிந்து கொண்டு சருமத்தைப் பாதுகாப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இதோ —

முதலில் சொறி சிரங்கு (scabies): பள்ளிக் குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கக் கூடிய சரும வியாதி இது. 'சார்க்கோப்டிஸ் ஸ்கேபியை' என்ற பூச்சி வகைக் கிருமியால் வருவது. அழுக்குப் படிந்த சருமத்தில் இப்பூச்சிகள் வந்தமர்ந்து முட்டையிடும் போது, அவற்றிலிருந்து வெளியேறும் லார்வாக் குட்டிகள் சருமத்தில் அரிப்பை உண்டாக்குகின்றன. அரிப்பைத் தாங்க இயலாமல் நாம் சொறிந்து விடுவதால் சருமத்தில் சிறு சிறு கொப்புளங்கள் தோன்றுகின்றன. இதைத்தான் 'சொறி சிரங்கு' என்கிருேம்.


இதனைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும் தெரியுமா? நாம் நம் சருமத்தை அடிக்கடி நன்கு கழுவிச் சுத்தமாக வைத்திருந்தால், சொறி சிரங்கு நிச்சயம் வராது. அதையும் மீறி வந்து விட்டாலும், மருத்துவர் ஆலோசனையின் பேரில் சிரங்கு கொல்லி மருந்துகளை உபயோகித்துச் சொறி சிரங்கைக் குணப்படுத்தி விடலாம்.

பொதுவாக வீட்டில் ஒருவருக்குச் சிரங்கு வந்து விட்டால், மற்றவர்களுக்கும் அது எளிதாகப் பரவி விடும் வாய்ப்பு உண்டு. எனவே, வீட்டில் அனைவருக்குமே ஒரே சமயத்தில் வைத்தியம் பார்ப்பது நல்லது. தவிர சிரங்கு உள்ளவர்கள் உபயோகித்த துணி மணிகளை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது. அவற்றை வெந்நீரில் ஊறவைத்துச் சோப்பினுல் அலச வேண்டும்.

இரண்டாவதாக தலைப்பேன்: பொதுவாகப் பெண்களைப் பாதிக்கக் கூடிய சரும வியாதி இது. ஆண்களில் மிகவும் அசுத்தமாக இருக்கும் நபர்களிடம் மட்டுமே காணப்படும். இந்தத் தலைப்பேன் சிறகற்ற பூச்சி வகையைச் சேர்ந்தது. இது முக்கியமாக, தலைமுடியோடு சருமத்தில் ஒட்டிக் கொள்ளும். பகலிலும் இரவிலும் தலையில் அரிப்பை உண்டாக்கும். அதிகமாகச் சொறிவதனுல் நீர்க்கசிவும், சீழ் கட்டுதலும் உண்டாகும். இதனுல் தலையில் துர்நாற்றம் வீசும்.

தலைப்பேனைத் தவிர்க்க, கீழ்க் காணும் முறைகளைக் கையாளலாம். குறைந்தது வாரம் இரண்டு முறை ஷாம்பூ போட்டுத் தலைமுடியை நன்கு சுத்தப்படுத்த வேண்டும். தினமும் தலையிலிருந்து தண்ணீர்விட்டுக் குளிக்க வேண்டும். அழுக்குப் போகத் துவட்ட வேண்டும். வீட்டில் தனித்தனி சீப்பைப் பயன்படுத்த வேண்டும். தலைப் பேனுல் பாதிக்கப்பட்டவர்கள் தலைமுடியை ஒட்ட வெட்ட வேண்டும். மருத்துவர் ஆலோசனையின் பேரில் பேன் கொல்லி மருந்துகளைத் தலையில் தடவி, சிறிது நேரம் ஊற வைத்துப் பின் குளிப்பதால் தலைப்பேன் தொல்லையிலிருந்து தப்பலாம். இதே மாதிரி வீட்டிலேயே மண்ணெண்ணெயையும் ஆலிவ் எண்ணெயையும் சம அளவில் கலந்து இரவில் தலையில் தேய்த்துக் கொள்ள வேண்டும். மறுநாள் காலையில் தலைக்கு குளித்துக் கொண்டால் தலைப்பேன் ஒழியும்.

அடுத்ததாக புண்கள் (Impetigo): சுத்தமாக இருக்கும் குழந்தைகளுக்குப் புண்கள் வருவது அபூர்வம். அசுத்தமான குழந்தைகளின் சருமத்தில்



கல்கி, கோகுலம், மங்கையர் மலர் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவினர் இந்நாள் வரை நுங்கம்பாக்கத்தில் பணியாற்றி வந்தனர். தற்போது வசதி கருதி, கிண்டியில் அச்சகக் கட்டடத்துக்கே இடம் மாறியுள்ளனர். இனி மூன்று பத்திரிகைகளுக்கும் நிர்வாகக் காரியாலயம், ஆசிரியர் குழு அலுவலகம், அச்சகம் ஆகிய எல்லாமே ஒரே இடத்தில் இயங்கும். முகவரி:

ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி,
சென்னை — 600 032.
போன்:நிர்வாகக் காரியாலயம்:431543:
434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.

'ஸ்டெபலோ காக்கை' என்ற பாக்டீரியா கிருமிகள் படர்ந்து சிறிய நீர்க் கொப்புளங்களை உண்டாக்கும். இவை அரிப்பையும் வலியையும் ஏற்படுத்தும். இந்நீர்க் கொப்புளங்கள் வெடித்துப் பக்கத்திலேயே இன்னும் பல கொப்புளங்களை உண்டாக்கும். இதனால் புண் பெரிதாகும். வலி அதிகமாகும். நெறி கட்டும். 'காய்ச்சல் வரும். புண்கள் உடம்பு முழுவதும் பரவும்.

இதனைத் தவிர்க்க வெதுவெதுப்பான நீரில் சிறிது உப்பையோ அல்லது சோப்பையோ கரைத்துப் புண்களை நன்றாகக் கழுவ வேண்டும். பாக்டீரியா கொல்லியான ஆண்டிபயாடிக் கிரீம்களை மருத்துவர் ஆலோசனையின் பேரில் வாங்கி வந்து புண்களில் போட வேண்டும். ஈக்கள் மொய்க்காமலிருக்க புண்களை சுத்தமான துணியால் கட்ட வேண்டும். இம்மாதிரி குறைந்தது ஒரு வாரம் செய்தால் புண்கள் ஆறிவிடும். மீண்டும் புண்கள் வராமலிருக்க சருமத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அவசியம்.

நான்காவதாக வேர்க்குரு: வெயில் காலம் வந்து விட்டால் போதும்; குழந்தைகளுக்கும் சரி; பெரியவர்களுக்கும் சரி; வேர்க்குருவின் தொந்தரவு அதிகமாக இருக்கும். இவை கழுத்து, முதுகு, மார்பு போன்ற இடங்களில் அதிகமாகக் காணப்படும். சருமத்தில் அழுக்கு அதிகமாக இருந்தால், அவை வியர்வைச் சுரப்பிகளை மூடிக் கொள்ளும். அதனால் வியர்வை சுலபமாக வெளியேறாது. இதன் காரணமாக சருமத்தில் சிறு சிறு கொப்புளங்கள் தோன்றும். இவையே வேர்க்குரு.

இத் தொந்தரவைத் தவிர்க்க வேர்க்குரு உள்ள இடத்தை நன்கு சுத்தம் செய்து டால்கம் பவுடரைப் போட்டால் வேர்க்குரு மறையும்.

அடுத்தது பருக்கள்: (pimples): மயிர்க்கால் எண்ணெய்ச் சுரப்பிகள் பாதிக்கப்படுவதால் பருக்கள் தோன்றுகின்றன. சுமார் 12 வயதிலிருந்து 20 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இரு பாலருக்குமே பருக்கள் தோன்றுகின்றன. இவை எண்ணெய்ச் சுரப்பிகள் அதிகமாகக் காணப்படும் முகம், மார்பு, முதுகு போன்ற இடங்களில் அதிக அளவில் தோன்றும்.

பருக்களை, கிள்ளிவிடக் கூடாது! அடிக்கடி முகத்தை சோப்புப் போட்டுக் கழுவ வேண்டும். முகத்தில் எண்ணெய்ப் பசை இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அதிகமாக எண்ணெய்ச் சத்துள்ள பொருட்களை உண்ணக் கூடாது. மாமிசம், தயிர், வெண்ணெய், முட்டையின் மஞ்சள் கரு போன்ற கொழுப்பு நிறைந்த பொருட்களைத் தவிர்க்க வேண்டும். பழங்களையும் காய்கறிகளையும் உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கடைசியாக பூஞ்சாண நோய்கள்: (fungus diseases) பூஞ்சாணத்தால் வரக் கூடிய சரும வியாதி. இதுவும் அசுத்தமான சருமத்தில் மட்டுமே வரக் கூடியது. இது தலை, முகம், முதுகு, மார்பு, தொடை இடுக்கு, நகம் என்று பல இடங்களிலும் வரலாம். விடுதிகளில் தங்கிப் படிக்கும் பள்ளிக் குழந்தைகளுக்குத் தொடை இடுக்குகளில் 'படர்தாமரை' என்று சொல்லக் கூடிய பூஞ்சான் நோய் அதிகமாக வருகிறது. இதை 'லெட்ரின் பத்து' என்று வழக்கில் சொல்வார்கள். படர் தாமரை உள்ளவர்களுக்குத் தொடை இடுக்குகளில் வட்டமாகவும்

வளையம் போன்றும் தோலில் பூஞ்சாணம் பிடித்த மாதிரி தோன்றும். அதன் சுற்றுப்புறம் தடித்தும் சிவப்பாகவும் காணப்படும். இரவு நேரங்களில் அதிகமாக அரிப்பெடுக்கும். இந்நோய் உள்ளவர்களோடு நெருங்கிப் பழகினாலும் அவர்கள் உபயோகித்த துணிமணிகளைத் தொடுவதனாலும் மற்றவர்களுக்கும் இது எளிதில் பரவி விடும். எனவே இந்நோய் உள்ள குழந்தைகள் சிறிது காலம் மற்ற குழந்தைகளுடன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்க்க வேண்டும். நோய் ஆரம்பித்த உடனேயே மருத்துவரைக் கலந்தாலோசித்து பூஞ்சாணக் கொல்லி மருந்துகளை வாங்கி, இரவில் சருமத்தில் தடவி, காலையில் வெந்நீரால் குளிக்க சில வாரங்களுக்குள் பூரணமாகக் குணமடையலாம்.

இவை தவிர, சின்னம்மை, பெரியம்மை, தட்டம்மை, கரப்பான் (eczema), குஷ்டம் (leprosy), வெண் குஷ்டம் (vitiligo) போன்ற நோய்களும் சருமத்தில்தான் தோன்றும். ஆக சரும வியாதிகளை ஆரம்பத்திலேயே இனம் கண்டு அவற்றிற்கேற்ப வைத்திய முறைகளையும் சுகாதார முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டியது மிக மிக அவசியம்.

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன், சருமத்தைப் பாதுகாக்க நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில பொதுவான சுகாதார முறைகளை இங்கே தருகிறேன். தெரிந்து கொள்ளுங்கள்.

— தினமும் காலை, மாலை இருவேளைகளிலும் சோப்புப் போட்டு நன்றாகக் குளியுங்கள். குளிர் காலங்களில் கூட ஒருமுறை குளிக்கலாம். ஷாம்பூ உபயோகித்துத் தலைக்குக் குளிப்பது நல்லது.

— சாப்பிடும் முன் கைகளை நன்கு சோப்புப் போட்டுக் கழுவுங்கள்.

— வீட்டில் அனைவருக்குமே, ஒரே சீப்பு, ஒரே சோப்பு, ஒரே பிரஷ் என்று பயன்படுத்தக் கூடாது. தனித்தனிச் சீப்பு, தனித்தனி சோப்பு, தனித்தனி பிரஷ் இருக்கட்டும்.

— சுத்தமான காற்று, சரியான அளவில் உடற்பயிற்சி, சத்துள்ள உணவு — இவை மூன்றும் சருமத்திற்கு மிகவும் அவசியம்.

— சரும வியாதிகள் உள்ள குழந்தைகளோடு நெருங்கிப் பழகாதீர்கள். அவர்கள் உபயோகித்த பொருட்களை நீங்கள் உபயோகிக்காதீர்கள்.

— வீட்டில் அக் குழந்தைகளைத் தனியாகப் படுக்க வைக்க வேண்டும். மற்ற குழந்தைகளுக்குப் பரவுவதைத் தவிர்க்க வியாதி குணமடையும் வரை பள்ளிகளுக்கோ, வெளி இடங்களுக்கோ அனுப்புவதைத் தவிர்க்க வேண்டும்.

— துணிகளை வெந்நீரில் ஊற வைத்து அலசுங்கள். அப்போதுதான் அவற்றில் ஒட்டிக் கொண்டுள்ள கிருமிகள் சாகும்.

— முகத்தை அழகுபடுத்துகிறேன் என்று சொல்லி கடைகளில் விற்கும் கண்ட கண்ட கிரீம்களை வாங்கி முகத்தில் தேய்க்காதீர்கள். அதிலுள்ள சில ரசாயனப் பொருட்கள் சருமத்தைப் பாதிக்கக் கூடியவை. சிலருக்கு பொட்டு, குங்குமம் போன்றவை கூட ஒத்துக் கொள்ளாமல் 'அலர்ஜி' ஆவதே இதற்குச் சாட்சி!


'சுத்தம் சுகம் தரும்' என்பதை உணர்ந்து, சருமத்தை நன்கு பாதுகாத்து வந்தால், உடல் நல்ல ஆரோக்கியம் பெற்றுத் திகழும் என்பதில் சந்தேகமே இல்லை.

செய்வீர்களா?

சித்திரப் புதிர் - 26

விடை :

1. காந்தியடிகள்
2. கடல் சிங்கம்
3. 17 சதுரங்கள்
4. பாக்டீரியன் ஒட்டகம்
5. குதுப்மினார்.


வீண்...சண்டை..
படக்கதை : ஓவியர்-எஸ்.கே.ராமானுஜம் (ராநு)
ஒரு திருமண விருந்திற்காக சமையலறையில் பல வித காய், கறிகள் இருந்தன.
அதில், கல்யாணப் பூசணிக்காய் கல, கலவென்று... சிரித்துக்கொண்டே தன் புகழைக்கூற ஆரம்பித்துவிட்டது.
அடேய்! பொடிப் பசங்களா-நான்-தான் காய், கறிகளிலேயே மிகப் பெரியவன்.
அட.. முட்டாள் பூசணிக்காயே! நான் தான் காய்களிலேயே மிகவும் நீளமானவன்
உடனே வாழைக்காய்க்கு கோபம் வந்து விட்டது.
உருளைக்கிழங்கும் தான்-தான் உயர்ந்தவன் என்று கூறியது.
நான் பிறந்த வாழை மரத்திலிருந்து வாழைத்தண்டு, வாழைப்பழம் வாழைப்பூ, வாழை இலை, வாழை நார் எல்லாமே உதவுகின்றன. ஆகையால், நான் தான் உயர்ந்தவன்.


வெங்காயம் எரிச்சலுடன்
சாம்பார், குழம்பு போன்ற வற்றிற்கு நான் தான் மிகவும் பயன் படுகிறேன்.
உடனே.. மிளகாய்
சாம்பார், குழம்பு போன்றவைக்கு நான் இல்லை... என்றால் அதற்கு காரம் எப்படி வரும்?
தக்காளி சிரித்துக்கொண்டே
மனித இனங்களுக்கு இரத்த சக்தியைக்கொடுப்பது நான் தான்...
அருகிலிருந்த கத்திரிக்காய்
ஏழை மக்களுக்கு ஏற்ற மலிவு.. விலையில் கிடைப் பவன் நான்தான்.
வெண்டைக்காய்
மனிதர்களின் மூளை வளர்ச்சிக்கு நான் தான் சிறந்தவன்
கொத்துமல்லியும், கருவேப்பிலையும்
அடேய்! நம்ப இரண்டு பேருமில்லேன்னா... சாம்பாரும், ரசமும் எப்படி மணக்கும்?
கடைசியில் திருமண விருந்துக்காக எல்லாக்காய், கனிகளும் நறுக்கப்பட்டு எல்லாமே 'சமம்' என்றாகிவிட்டன!
ஐய்யோ

கேளுங்கள் ; சொல்லுகிறோம்

* இலங்கையில் புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்களாமே, அப்படியிருந்தும் அங்கே கொலை, கொள்ளை, துப்பாக்கிச் சூடு எல்லாம் நடப்பது எதனால்?

— சி. குருமூர்த்தி, சென்னை — 4.

இலங்கையில் உள்ளவர்களில் பாதிப் பேருக்கு மேல் புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள்தான். இந்துக்களும், கிறிஸ்தவர்களும் கூட அங்கே வாழ்கிறார்கள். ஒரு மதத்தில் சேர்ந்திருப்பது வேறு; அந்த மதக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பது வேறு. எல்லா மதங்களுமே அன்பையே போதிக்கின்றன. மதங்களில் கூறியபடி அங்குள்ள எல்லாரும் நடந்து கொண்டிருந்தால், அங்கே அன்பு பெருகியிருக்கும்; அஹிம்சை நிலைத்திருக்கும்; அமைதி நிலவியிருக்கும்.

* கைகளில் பச்சை குத்திக் கொள்கிறார்களே, ஏன்?

— பி. சந்திரா, திண்டுக்கல்.



அழகுக்காகச் சிலர் குத்திக் கொள்கிறார்கள். அடையாளத்திற்காகச் சிலர் குத்திக் கொள்கிறார்கள்.


* மீன்கள், மீன்களையே சாப்பிடுமாமே. இது உண்மையா?

— தங்க கார்த்திகை ராஜா, விருத்தாசலம்.

மீன்களிலே சுமார் 20,000 இன மீன்கள் இருப்பதாகத் தெரிகிறது. இவற்றுள் சில இனத்தைச் சேர்ந்த பெரிய மீன்கள், நீர்த் தாவரங்களையும் வேறு சில, நீர் வாழும் பிராணிகளையும் தின்பதோடு சிறுசிறு மீன்களையும் பிடித்துத் தின்றுவிடுகின்றன!

* சென்னை தேனும் பேட்டையில் 'சீனிவாச காந்தி நிலையம்' என்ற ஒரு நிலையம் இருக்கிறது. காங்கிரசில் சீனிவாச ஐயங்கார் என்பவர் இருந்தாராம். மகாத்மா காந்தியுடன் அவர் நெருங்கிப் பழகினாராம். அதனால் தான் இரண்டு பெயர்களையும் சேர்த்து வைத்திருப்பதாகச் சொன்னார்கள். சீனிவாச ஐயங்காரைப் பற்றிக் கூறுங்களேன்.

— என். லாவண்யா, சென்னை — 4.



அட்வகேட் ஜெனரலாக இருந்த எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார், ஆங்கிலேயரின் அடக்கு முறைகளை எதிர்த்து அந்தப் பதவியை ராஜிநாமா செய்து விட்டு காங்கிரசில் தீவிரமாக ஈடுபட்டார். 1926 இல் கௌஹாத்தியில் நடைபெற்ற காங்கிரசுக்குத் தலைமை தாங்கினார். அதற்கு அடுத்த ஆண்டு சென்னையிலே காங்கிரஸ் மாநாட்டை நடத்தி பூரண சுதந்திரம் வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தார். காந்திஜியிடம் பக்தி கொண்டிருந்த அவருக்கு சுபாஷ் சந்திரபோஸையும் மிகவும் பிடிக்கும்.

* உலக அதிசயங்கள் ஏழு. அவற்றில் டயானா கோவிலும் ஒன்று என்கிறார்கள். டயானா கோவிலைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுவீர்களா?

— ஆர். ரமாபாய், புதுக்கோட்டை.

டயானா கோயில் என்பது டயானா என்ற தேவதைக்கு சலவைக் கல்லால் ஆசியா மைனரில் யூபிசஸ் என்ற இடத்தில் கட்டப்பட்டது. இந்தக் கோயிலின் முகட்டைத் தாங்கி நின்ற தூண்கள் ஒவ்வொன்றும் 60 அடி உயரம் இருந்ததாம். கிரேக்க நாட்டைச் சேர்ந்த மிகச் சிறந்த சிற்பிகள் இங்கு பல சிலைகளைச் செய்து வைத்திருந்தனராம். கிறிஸ்து பிறப்பதற்கு 350 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்தக் கோயிலை,எதிரிகள் படையெடுத்து கி. பி. 262 இல் அழித்து விட்டார்களாம். பிரிட்டிஷ் பொருட்காட்சியில் உடைந்த தூண்களின் சில பகுதிகள் இருக்கின்றனவாம்.

* உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி நயாகராதானே?

— என். வேதகிரி, திருச்செந்தூர்.

இல்லை. வட அமெரிக்காவிலுள்ள நயாகராவை விட உயரமான நீர் வீழ்ச்சி தென் அமெரிக்காவில் இருக்கிறது. அதன் பெயர் ஏஞ்செல் நீர்வீழ்ச்சி. உயரம்: 970 மீட்டர்.

* சிலர் கடிதம் எழுதும்போது, அடியிலே N.B. என்று போட்டு, சில வார்த்தைகளை எழுதுகிறார்களே, N. B. என்றால் என்ன?

— டி. பார்வதி, ஸ்ரீபெரும்புதூர்.

'நன்றாகக் கவனிக்கவும்' என்பதுதான் அதன் பொருள். இதை லத்தீன் மொழியில் Nota Bene என்பார்கள். அப்படிக் கூறுவதன் சுருக்கமே N. B.

* கருநாடக இசை, இந்துஸ்தானி இசை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

— ந. மீனலோசனி, கோவை — 4.

தென்னிந்தியாவில் சிறப்பாக விளங்குவது கருநாடக இசை. வட இந்தியாவில் சிறப்பாக விளங்குவது இந்துஸ்தானி இசை. இரண்டிற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. இந்துஸ்தானி இசையில் பாரசீக இசையும், அராபிய இசையும் கலந்திருக்கின்றன. கருநாடக இசையில் கலப்பு எதுவும் இல்லை. தனித்தன்மையுடன் விளங்குகிறது.

* பாரதியாருடைய பிள்ளைகளெல்லாம் எங்கு இருக்கிறார்கள்?

— வி. உஷாநந்தினி, கரூர்.

பாரதியாருக்குப் புதல்வர் இல்லை. தங்கம்மாள், சகுந்தலா என்ற இரு புதல்வியர் இருந்தனர். இப்போது அவர்கள் இல்லை.

* குளிர்பதனப் பெட்டி (Refrigerator)யைக் கண்டுபிடித்தவர் யார்?

— ம. இந்துமதி, கல்கத்தா.

பிரிட்டிஷ்காரரான ஜேகோப் பெர்கின்ஸ்

* நம் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு நான் கடிதம் எழுதினால், எனக்கு அவர் பதில் எழுதுவாரா?

— பி. குமரகுரு, சென்னை — 17.

பல குழந்தைகளின் கடிதங்களுக்கு அவர் பதில் எழுதியிருக்கிறார் என்பது தெரியும். நீ எழுதினால், உனக்கும் பதில் கிடைக்கலாம்.

* பல்லியை நாம் விரட்டினோமானால், அது வாலை அறுத்துக் கொண்டு ஓடிவிடுமாமே! உண்மையா? ஏன்?

— எஸ். கார்த்திகேயன், இலுப்பூர்.




சாதாரணமாக நாம் பல்லியை விரட்டினால், அது வாலை அறுத்துக்கொண்டு ஓடாது. பல்லியின் வாலைப் பிடித்து இழுத்தாலோ, பல்லியைப் பிடிக்க ஏதேனும் பிராணி துரத்தி வந்தாலோ, பல்லி தன் வாலை உதறி எறிந்துவிட்டு ஓடிவிடும். 'வால் போனால் போகட்டும், உயிர் பிழைத்தால் போதும்' என்று நினைத்துத்தான் அது அப்படிச் செய்கிறது. அதன் வால் மிகவும் சுலபமாக ஒடிந்து விழக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது. மீண்டும் அதற்கு விரைவில் வால் முளைத்துவிடும்.

* நம் இந்திய தேசக் கொடியிலுள்ளது போலமூவண்ணங்கள் ,வேறுநாட்டுக்கொடிகளில் இருக்கின்றனவா?

— எஸ். அபீர் அலி, நாகூர்.

அயர்லாந்துக் கொடியில் இதே மூன்று வண்ணங்கள் உள்ளன. நமது கொடியில், அகல வசத்தில் சம அளவில் மூன்று பட்டைகள் — அதாவது மேலே காவி, நடுவே வெள்ளை, கீழே பச்சை என்று இருக்கின்றன. வெண்ணிறப் பகுதியில் நீல நிறத்தில் அசோகச் சக்கரம் காணப்படுகிறது.

ஆனால், அயர்லாந்துக் கொடியில் மேலிருந்து கீழ்நோக்கிச் சம அளவில் பட்டைகள் உள்ளன. இடப்புறம் பச்சை, நடுவே வெள்ளை, வலப்புறம் காவி. ஆனால், வெண்ணிறப் பகுதியில் எதுவும் இருக்காது.



அற்புதப் பணி புரியும் அறிவாலயம்

திருச்சி பாரத கனமியின் தொழிலகம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக 'அறிவாலயம்' என்ற பெயரில் ஒரு பள்ளியை நடத்தி வருகிறது. இப்பள்ளி 1977 ஆம் ஆண்டு துவங்கப்பட்டபோது மொத்தம் 20 குழந்தைகளே இருந்தனர். ஆனால், இன்றோ 134 குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். இங்கு மனவளர்ச்சி குறைந்த குழந்தைகளுக்காக 11 பிரிவுகளும், செவித்திறன் குறைந்த குழந்தைகளுக்காக 3 பிரிவுகளும், 16 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்காகத் தொழிற்கல்விப்பிரிவும் இயங்கி வருகின்றன. மூன்று வயது முதல் குழந்தைகள் இங்கு சேர்க்கப்படுகின்றனர். பள்ளியில் சேர்க்கப்படும் குழந்தைகளின் அறிவுத்திறன், மனோதத்துவ நிபுணரால் சோதிக்கப்பட்டு அதற்கு ஏற்றபடி, பல பிரிவுகளில் அவர்கள் சேர்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு வகுப்பிலும் 7 முதல் 9 குழந்தைகளே உள்ளதால், தனிக் கவனம் செலுத்தப்பட்டு, சிறப்பாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு எளிதில் புரியும் வண்ணம், செயல்முறை விளக்கங்களுடனும், உபகரணங்கள் மூலமும் கற்றுத்தரப்படுகின்றன... குழந்தைகளின் முன்னேற்றம், கம்ப்யூட்டர் மூலம், அவ்வப்போது, துல்லியமாகக் கண்காணிக்கப்படுகிறது.

ப்ரீ ப்ரைமரி; ப்ரைமரி, எலி



மெண்ட்ரி, ஜூனியர் என நான்கு நிலைகளில் குழந்தைகளின் முன்னேற்றம் வகுக்கப்படுகிறது.

பயிற்சியின் போது, முதலில் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளும், பிறகு எழுதப் படிக்கவும் சொல்லித் தரப்படுகின்றன.

ஒவ்வொரு நாளும் எல்லா வகுப்புகளிலும் யோகாசனப் பயிற்சி நடைபெறுகிறது. இதன் மூலம் குழந்தைகளின் தசை இயக்க ஒருமைப்பாடும், கவனிக்கும்திறனும், அன்றாடச்செயல் திறனும் அதிகரிக்கிறது.

16 வயது முதல் 25 வயது வரை குழந்தைகளுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் கவர் செய்தல்... மாலை செய்தல்... பாய் பின்னுதல்... துண்டு படுக்கை விரிப்பு நெய்தல், வண்ணம் தீட்டுதல், ஊது பத்தி, சாக்பீஸ், ஒயர் கூடை முடைதல் முதலியவையும் கற்றுத் தரப்படுகிறது.

செவித்திறன் குறைந்த மற்றும் வாய் பேசாத குழந்தைகளுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இங்கு பயின்ற பல குழந்தைகள், வழக்கமான ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும், ஹைதராபாத்தில் நடக்கும் அகில இந்திய குழந்தைகள் கலைச் சங்கப் போட்டிகளில், பல தடவை இங்கு பயிலும் மாணவர்கள் தேசிய மாநில அளவிலான விருதுகளை வென்றுள்ளனர். அதே சங்கம் நடத்தும் மாறுவேடப் போட்டிகளில் தங்கம், வெள்ளி, செம்புப் பதக்கங்களைத் தட்டி வந்த பெருமையும் இப்பள்ளி மாணவர்களுக்கு உண்டு!



சுதந்திர ஓட்டத்தில் ஆனந்திற்குப் பரிசு.

நம்நாடு சுதந்தரம் பெற்று 40 ஆண்டுகளாகி விட்டன. இந்த 40—வது சுதந்தர தின நிறைவு விழா 28.2.88ல் டில்லியில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அன்றைக்கு 'நாட்டிற்காக சுதந்தர ஓட்டம்' நடந்தது. நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் குறிக்கும் வகையில் 6 வயது முதல் 60 வயது வரையுள்ள சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள், பெண்கள் என்று லட்சக்கணக்கானவர்கள் ஓடினார்கள். நம் பிரதமர் ராஜீவ் காந்தியும் அவர் மனைவி சோனியா காந்தியும், ராகுலும் ஓட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஓட்டத்தில் கலந்து கொண்ட பி.டி. உஷா, சுனில் கவாஸ்கர், செஸ் வீரர் வி. ஆனந்த் முதலியோருக்கு விருதுகளும், ரொக்கப் பரிசுகளும் பிரதமரால் வழங்கப்பட்டன.

படத்தில் செஸ் வீரர் வி. ஆனந்த் 'ஈகிள் டிராஃபி'யையும் ரொக்கப் பரிசையும் பிரதமரிடம் பெறுவதைக் காணலாம். பிரதமரின் பின்புறம் நிற்பவர் ஈகிள் ஃபிளாஸ்க் நிர்வாக இயக்குநர் திரு. எம். ஏ. பதம்ஸி.



கவிதை பிறந்த கதை

அழகனூர்

சின்னக் குழந்தைகள் நாலைந்து பேர் வாசலில் விளையாடுகிறார்கள். சிறு கற்கள் சில தேடிக் கொண்டு வந்து அடுப்பு அமைக்கிறார்கள். அதற்காகவே செய்த சிறு மண் செப்பில் உலை வைக்கிறார்கள். அரிசியும் இட்டுச் சோறு படைக்கிறார்கள். படைத்த சோற்றை யார் உண்பது?

எங்கோ இருந்த மரப்பாச்சிப் பாப்பாவைத் தேடி எடுத்துக் கொண்டு வந்து குளிப்பாட்டிப் புத்தாடை உடுத்தி அமுது ஊட்டுகிறார்கள்.



மரப்பாச்சிப் பாப்பா உண்ணவில்லை. குழந்தைகள் ஒவ்வொருவராக ஊட்டி ஊட்டிப் பார்க்கிறார்கள். ஊகூம்... உண்ணவில்லை மரப்பாச்சிப் பாப்பா.

— இந்தக் காட்சியைப் பார்க்கிறார் கவிஞர் பி. அழகனூர் அவர்கள். அப்போது அவர் மனத்தில் உருவாகிறது 'பொம்மைக் குழந்தை.' ஆம், இதோ அந்தப் பாடல்:

சின்னக்குடம் ஒன்றெடுத்துச்
சிறிதளவே நீர்நிறைத்து
அன்னையென நான் உனக்கு
ஆவலுடன் நீராட்டி

கண்ணைப் பறிக்குமிந்தக்
கண்ணாடிக் கிண்ணத்தில்
உண்ணத்தான் சிறிதளவு
உணவெடுத்துப் பாங்காக

அன்புடனே சர்க்கரையை
அளவோடு கலந்துனது
சின்னஞ்சிறு வாய்தன்னில்
செங்கரும்பை நான் ஊட்ட

ஒருசிறிதும் உண்ணாமல்
உம்என்று இருந்ததனால்
பெரும்கவலை நான்கொண்டு
பேசாமல் நினைக்கின்றேன்.

சிரித்துவிளையாடாமல்
சீராடி நிற்கின்றாய்.
வருத்தமுறச் செய்தவர் யார்?
வாய்திறந்து சொல்கண்ணே!

கவிஞர் பல சந்தைகளுக்குச் சென்றிருக்கிறார். துடியலூர், சுந்தராபுரம், பொள்ளாச்சி, புளியம்பட்டி, செட்டிப்பாளையம், பல்லடம் எனப் பல ஊர்களில் நடக்கும் சந்தைகளில் சுற்றி அலையும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்திருக்கிறது.

பல சந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்த அனுபவத்தை அப்படியே

படம் பிடிக்கிறது இந்தப் பாடல்—

ஆடு மாடு விற்றிடும்
அருமைச் சந்தை காணவே
ஓடும் காளை வண்டி பூட்டி
உவகை யோடு போகலாம்.

கட்டுச் சோற்றுப் பொட்டலம்
கட்டிக் கொண்டு வண்டியில்
சட்டி பானை விற்கும் அந்தச்
சந்தை எங்கும் சுற்றலாம்.

அரிசி பருப்பு விற்றிடும்
அழகை எல்லாம் பார்த்தபின்
பொரியும் அவலும் வாங்கிப் பையில்
போட்டுக் கொண்டு செல்லலாம்.

உப்பு மஞ்சள் காய்கறி
உணவுத் தான்யம் விற்றிடும்
ஒப்பில் லாத சந்தை யெங்கும்
உவகை யோடு சுற்றலாம்!

அழகு கொஞ்சுகின்ற கேரள மண்ணின் கள்ளிக்கோட்டைக் கடற்கரை! அலைகடல் முழங்குகிறது. கரையில் குழந்தைகள் ஈர மண்ணில் வீடு கட்டிச் சிரித்து விளையாடுகிறார்கள். வீட்டுக்கு வந்த பின்பும் அந்தக் காட்சி கவிஞர் கண்ணில் அப்படியே நின்றதாம்...

வெள்ளை வெள்ளை மணலினை
விருப்ப மோடு கைகளில்
அள்ளி அள்ளிப் பாங்குடன்
அழகாய் வீடு கட்டலாம்.

ஈர மான மணலினால்
எழில்நி றைந்த மதில்களை
ஆர மாகச் சுற்றிலும்
அமைத்த மைத்துப் பார்க்கலாம்.



கல்லும் மண்ணும் இன்றியும்
கனத்த மரங்கள் இன்றியும்
நல்ல நல்ல வீடுகள்
நாளும் கட்டிப் பார்க்கலாம்.

இப்படித்தாம் நேரில் கண்ட காட்சியைக் கவிதையாய்க் கூறும் கவிஞர், கடைசியில் இப்படி முடிக்கிறார்:

கொல்லன் தச்சன் இன்றியும்
கொடுக்கல் வாங்கல் இன்றியும்
எல்லை இல்லா மணலினால்
எவரும் கட்டிப் பார்க்கலாம்!

பேட்டி: பி. வி. கிரி.

நொண்டிச் சாக்கு!



ஆசிரியர்: ஏன்டா பள்ளிக்கூடத்துக்கு லேட்டா வர்றே?

பையன்: காலிலே அடிபட்டுடுச்சு! நடக்க முடியல்லே சார்!

ஆசிரியர்: இந்த நொண்டிச்சாக்கையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது!

— கடலூர் கன்னியப்பன்.



சார், தபால்!

திரட்டிலிருந்து திருட்டு!

• ஜெர்மன் நாட்டுக் கதையான 'வீரனின் தேசபக்தி' கதையைப் படித்தேன். வீரன் ஸ்டட்ப்ளின் நாட்டுப் பற்று மெய்சிலிர்க்க வைத்தது.

— ஆர். கதிரவன் (18,085), கோவை — 27.

• இளைய தலைமுறைக்கு அவசியம் இருக்க வேண்டிய நாட்டுப்பற்றை நன்கு எடுத்துக் காட்டுகிறது 'வீரனின் தேசபக்தி'.

— வெ. தமிழ், நன்செய் புகழூர்.

• அகிலன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அவருடைய புகைப்படத்தை நாங்கள் தேடி அலைந்து கொண்டிருந்த சமயம், அவரின் திருவுருவப் படத்தை வெளியிட்டு உதவியதற்கு நன்றி.

— இர. பெருமாள், (12072), சர்க்கார் கொல்லப்பட்டி.

• 'தெய்வமே துணை'யில் வரும் முத்தையனைப் போல எங்கள் வகுப்பில் ஒருவன் இருக்கிறான். அவனிடம் அந்தக் கதையைக் காட்டி, அவனைத் திருத்தி விட்டேன்.

— கோ. ரெங்காகரன், (15,132), கோவில்பட்டி.

• 'சுவரொட்டி' என்ற கதையின் மூலம் வி.ர. வசந்தன் அவர்கள் பளிச்சென்று ஓர் உண்மையை அழகாக நயம்பட விவரித்திருக்கிறார்.

— என். பாபு (1707), வேலூர் — 1.

• 'சொந்தமாக எழுத வேண்டும். காப்பி அடிக்கக் கூடாது' என்று நீங்கள் அடிக்கடி அறிவுரை கூறுகிறீர்கள். ஆனாலும், எஸ். சிருத்திவாசன் எழுதியதாக வெளிவந்திருக்கும் 'நேர்மையால் உயர்ந்தவன்' என்ற கதை ஆறும் வகுப்புக்கான கதைத் திரட்டின் 64ம் பக்கத்திலிருந்து காப்பி அடிக்கப்பட்டது. இப்படி அவன் செய்திருப்பது முறையா?

— ப. கணேஷ் (14478), சங்ககிரி மேற்கு.

(இப்படிப் பலர் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றி. சிருத்திவாசன், இனி இதுபோல் செய்ய மாட்டான் என்றே நம்புகிறோம். — ஆசிரியர்.)

• பரிசு பெற்ற 'அகிம்சையின் வெற்றி'யில் சுபாஷின் தேசபக்தி எங்கள் கண்களில் நீரை வரவழைத்தது.

— எம். சுதா சாமுண்டீஸ்வரி (7765), ஒடுகத்தூர்.

• சுபாஷின் நாட்டுப் பற்று, வீரம், நேர்மை ஆகியவை எங்களைப் போன்ற மாணவர்கள் மனத்தில் எழுச்சியை உண்டாக்கின.

— சி. எஸ். சரவணன் (706), பி. என். ஸ்ரீதர் (7035), மதுரை.

• அழியாக் கவிதை பலதந்து
அகிலம் போற்றும் புகழ்பெற்ற
விழியாம் குழந்தை உலகத்தின்
வேந்தர் எங்கள் வள்ளியப்பா
'எல்லாம் நன்மைக் கே' என்னும்
இனிய கதையைப் பாட்டாக்கி
நல்ல தமிழால் தந்திட்டார்.
நன்றி. அவரின் நலம் வெல்க.

— பி. வைத்தியநாதன் (17249), திருப்பூண்டி.

• ஒவ்வொரு மாதமும் வண்ணச் சித்திரக் கதைகளை வெளியிட்டு, சிறுவர் முதல் பெரியவர் வரை, புராணக் கதைகளை நன்கு அறியும்படி செய்து வருகிறீர்கள். 'குபேரன் பெற்ற செல்வம்' நேரிலே பார்ப்பது போல் இருந்தது.

— பேப்பர் கார்த்திக், இராணிப்பேட்டை.

• அமரர் அகிலன் எங்களுக்காக எழுதிய ஏதேனும் ஒரு சிறுகதையை வெளியிடுங்கள்.

— அ. முகம்மது அபூபக்கர் (20080), கள்ளக் குறிச்சி.

• ஹெலன் கெல்லர் பிறந்த நாளும் மறைந்த நாளும் ஒன்றாக அமைந்தது அபூர்வம். அதைவிட அபூர்வமானது ஓவியங்கள் வரைந்த உறுப்பினர்கள் இனிஷியல்கள் அனைத்தும் 'எஸ்' ஆக இருப்பது.

— பி. கோவிந்தசாமி (5703), பேதாதம் பட்டி புதூர்.

• 'குழந்தைகளுக்குத் திரைப்படம் தேவையா?' கட்டுரை பல குழந்தைகளின் மனத்தில் இருப்பதைப் படம் பிடித்துக் காட்டி விட்டது. அரசுதான் யோசிக்க வேண்டும்.

— எஸ். ராஜா, குத்தாலம்.

• சிறுவர் திரைப்படம் பற்றிய கருத்துக்களை ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டுமா? இல்லை, தமிழிலே எழுதலாமா?

— இரா. குருகுகன், குத்தாலம்.

(கருத்தைத் தமிழில் எழுதலாம். ஆனால், முகவரியை ஆங்கிலத்திலே
Mrs. Indira Ananthakrishnan.
C — 115, Inderpuri,
New Delhi — 110 012 என்று எழுத வேண்டும். — ஆசிரியர்.)

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3 1 5 4 3. 4 3 4 1 5 7.



டி.கே.சண்முகம்

தோற்றம் 26.4.1912 மறைவு 15.2.1973

Registered No. TN MS (S) 281

Registered as a Newspaper in Sri Lanka


Parry's

Funpage

**மிட்டாய் மன்னன்
சொல்லித் தருகிறார்-
கற்றுக்கொள்ளவும்
பொழுது போக்கவும்
குதூகலமான யோசனைகள்!**


உங்களுக்கென்றே ஒரு ஜிக்-சா புதிர் செய்து கொள்ளுங்கள். செய்வது. மிகச் சுலபம்.

1



1. ஏதாவது பத்திரிகையிலிருந்து அழகான வண்ணங்கள் நிறைந்த படத்தை வெட்டி எடுத்து ஒரு மெல்லிய அட்டையில் ஒட்டுங்கள்.

2



2. அந்த அட்டையின் பின்பக்கம் முழுவதையும், பென்சிலே உப யோகித்து பல்வேறு வடிவங் களாக வரைந்து கொள்ளுங்கள். (படத்தை பார்க்கவும்.) இந்த வடிவங்களை தனித்தனியாக வெட்டிஎடுங்கள்.

3



3. இந்த துண்டுகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டி விடுங்கள். பிறகு பழையபடி படம் வரும்படி துண்டுகளை கவனமாக வையுங்கள். உங்கள் நண்பர்களையும் முயற்சி செய்து பார்க்கச் சொல்லுங்கள்.



THE KING OF SWEETS

மிட்டாய் மன்னன் உங்களைப்பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறார். ஆகவே, உங்கள் பெயர், பிறந்த தேதி, விலாசம் ஆகிய விவரங்களுடன் கடிதம் எழுதுங்கள். விலாசம்:

**The King of Sweets
P.O. Box. 2040,
Madras 600 001.**

HTA.7145